
மார்ச் - 2015

ISSN 1800-1246

# அகவிழி

மனித மேம்பாட்டின் உயிர்ப்பு மிகு கல்விக்காய்...

விழி 11 பார்வை 115




- ஜீன் ஜக்ஸ் ரூஸோ (1712 - 1778): தத்துவமும் கல்விச் சிந்தனைகளும்
- இலங்கை தந்த இரு பெரும் கணித விற்பன்னர்கள்
- எல்லோருக்குமான கல்வியின் இலட்சியம் - உட்படுத்தல் கல்வி
- கல்வி என்றும் நடுநிலையானதல்ல
- சில நினைவுகள்... கண்டுபிடிப்பது சுலபமல்ல
- கல்வியும் சிறுவர் உரிமையும்
- மாணவர்களின் ஆளுமை விருத்தியில் தொடர்பாடல் திறன்
- சிறுவர் உரிமைகளும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்
- பாடசாலை மட்ட முகாமைத்துவமும் வகிபாக மாற்றங்களும்
- வாழ்வோம் வளர்வோம் (சிறுவர் நாடகம்)
- இலங்கையில் சிறுவர் உரிமையும், சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்


▪ பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ▪ கலாநிதி கோ. கோணேசபிள்ளை
▪ பா. தனபாலன் ▪ பேராசிரியர் இ. தென்னவன் ▪ பேராசிரியர் ச. மாடசாமி
▪ ஏ. குகன் ▪ ந. பார்த்திபன் ▪ க.இ. கமலநாதன்

www.viluthu.org

விலை: 100/=




அகவிழிகளை பெற விரும்பும்
ஆசிரியர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

# உள்ளே......

ISSN 1800-1246


1. ஜீன் ஜக்ஸ் ரூஸோ (1712 - 1778) தத்துவமும் கல்விச் சிந்தனைகளும் 4

2. இலங்கை தந்த இரு பெரும் கணித விற்பன்னர்கள் 9

3. எல்லோருக்குமான கல்வியின் இலட்சியம் உட்படுத்தல் கல்வி 12

4. கல்வி என்றும் நடுநிலையானதல்ல 16

5. சில நினைவுகள்... கண்டுபிடிப்பது சுலபமல்ல 18

6. கல்வியும், சிறுவர் உரிமையும் 20

7. மாணவர்களின் ஆளுமை விருத்தியில் தொடர்பாடல் திறன் 23

8. சிறுவர் உரிமைகளும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் 27

9. பாடசாலை மட்ட முகாமைத்துவமும் வகிபாக மாற்றங்களும் 31

10. வாழ்வோம் வளர்வோம் (சிறுவர் நாடகம்) 35

11. இலங்கையில் சிறுவர் உரிமையும், சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும் 43


AHAVILI
3, Torrington Avenue
Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com

அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர்

ச. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்

சாந்தி சச்சிதானந்தம்

நிறைவேற்றுப் பணிப்பாளர்(விழுது)

ஆசிரியர் குழு

க. சண்முகலிங்கம்

பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் தை. தனராஜ்
ஓய்வுநிலை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

பா. தனபாலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இணைப்பாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

லெனின் மதிவானம்
பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி அமைச்சு

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு கல்வி வலயம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் துரை மனோகரன்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர், கல்வி முகாமைத்துவம்

## ஆசிரியரிடமிருந்து...............

'ஒரு பிள்ளைக்கு பன்னிரண்டு வயதாகும் வரை' ஆசிரியர் தேவையே இல்லை. இயற்கையிடம், வாழ்க்கைச் சூழலிடம் குழந்தையை ஒப்படைத்து விடுங்கள் என்றார் ரூசோ. அவரைப் பொறுத்தவரையில் கல்வி முறை வேறு பாடசாலை முறை வேறு. காலை கண் விழித்தது முதல் இரவு நித்திரைக்கு செல்வது வரை... ஏன் வாழ்நாள் முழுவதும் தொடர்வதே கல்வி. பாடசாலைக்கல்வி அப்படி அல்ல. முறைசார் கல்வியின் மோசமான பின்விளைவுகளை முன்வைத்து, கல்வியாளர்கள் ஜோன் ஹோல்ட், கிளாட் ஆல்வாரஸ் போன்றவர்கள் வீட்டிலேயே கல்வி என்பதை முன்மொழிந்திருக்கிறார்கள். பாடசாலைக்கல்வி குழந்தைப் பருவத்தை சூறையாடும் சூழ்ச்சி என்றும் அவர்கள் தங்கள் கருத்தை தெரிவித்திருக்கின்றனர்.

இது இவ்வாறு இருக்க தனது மாகாண பாடசாலைகளின் கல்வி நிலைபற்றி கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"இன்று பாடசாலைகளில் மிகவும் வேதனை தரக்கூடிய விடயங்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன. எமது மாகாண கல்வித் திணைக்களத்திற்கு தினமும் வருகின்ற கடிதங்களைப் பிரித்துப் பார்க்கின்ற போது அவற்றில் 75 வீதமானவை அதிபரைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் மாணவர்களைப் பற்றியும் பாடசாலை நிர்வாகக் குறைப்பாடுகள் பற்றியுமான முறைப்பாடுகளாகவே காணப்படுகின்றன.

பாடசாலையின் ஒரு நல்ல செயற்பாட்டை பற்றியாவது கடிதங்கள் வராமலிருப்பது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும். ஒரு நல்ல செய்தியையும் பண்பையும் நடத்தையையும் தான் நாங்கள் மற்றவர்களுக்கு சொல்லிக்காட்ட முடியும். மற்றவரிடம் அந்த செய்தியை எடுத்துச் செல்ல முடியும். அவ்வாறு எடுத்து செல்லுமளவிற்கு எந்தவொரு விடயமும் நடைபெறாமலிருப்பது மிகவும் வேதனையானது.

பாடசாலைகளில் அதிபர்கள் பிரச்சினையாக இருக்கின்றனர். எங்கு பார்த்தாலும் அதிபர்களுக்கு எதிரான போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. வேறுவேறு அதிபர்களை தாருங்கள் என்று கேட்கின்றார்கள். தகைமையுள்ள அதிபர்களை தேடுவது மிகவும் கடினமான விடயமாக இருக்கின்றது. பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட வீதத்தினர் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்கிறார்கள். சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் தங்களுக்குரிய கற்பித்தல் நேர அட்டவணை அறவே இல்லாமல் சம்பளத்தை பெற்றுக்கொண்டிருக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

சில ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கச் சென்று நடைபிணமாக திரும்புகின்றார்கள். மாணவர்களுக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதவாறு அவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் காணப்படுகின்றன. நோயாளியில்லாத வைத்தியனும் கட்டிடம் கட்டாத மேசனும் தளபாடங்கள் செய்யாத தச்சனும் இல்லை என்பதை நாங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் பாடம் கற்பிக்காத ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்ற உண்மையையும் நாங்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

அண்மையில் நாங்கள் சில பாடசாலைகளுக்குச் சென்று பரீட்சித்தபோது 17 ஆசிரியர்கள் கற்பித்தல் நேர அட்டவணையின்றி பல வருடங்களாக சம்பளம் பெற்று வந்ததை அறிய முடிந்தது. மற்றொரு பாடசாலையில் நூறு நாட்கள் பாடசாலை நடைபெற்றிருக்கின்றது. 85 நாட்கள் ஒரு ஆசிரியர் பாடசாலைக்குச் செல்லவில்லை. ஆனால் அவருடைய சம்பளத்தில் ஒரு சதம் கூட குறைவின்றி செலுத்தியிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட அதிசயங்கள் எல்லாம் பாடசாலைகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலமைகள் மாற்றப்படாவிட்டால் கிழக்கு மாகாணத்தின் கல்வியை நாங்கள் ஒருபோதும் அபிவிருத்தி செய்ய முடியாது என்ற உண்மையை நாங்கள் மறந்துவிடக்கூடாது." என கூறியதோடு மேலும் பல விடயங்கள் தொடர்பாக தனது மன ஆதங்கத்தினை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்நிலைமை கிழக்கு மாகாணத்தில் மட்டும் நிலவுவதாக கருதிவிடமுடியாது. ஏனைய மாகாணங்களிலும் இந்நிலைமை இருப்பதை அகவிழி பல தடைவைகள் சுட்டிக்காட்டியது. கடந்த காலங்களில் அகவிழிக்காக ஆயிரம் பாடசாலைக்கு மேலாக பயணித்தவன் என்ற வகையிலும் பாடசாலைகளுக்குள் கற்றல் கற்பித்தல் சார் நடைமுறைகளை நேரில் கண்டறிந்தவன் என்ற வகையிலும் ஒரு சில விடயங்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

வகுப்பறைகளில் மிகச் சிறந்ததான நுட்பமான கற்பித்தல் முறைகளை அர்ப்பணிப்போடும் முழு வினைத்திறனுடனும் மிகக் குறைந்தவர்கள் சுறுசுறுப்பாக செயலாற்றிக் கொண்டிருக்க பெரும்பாலான ஆசிரியர்கள் கவலை தரும் வகையில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிந்தது. வகுப்பறைகளில் முதலிரு வரிசைகளில் உள்ள மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்க ஏனைய வரிசைகள் வெறிச்சோடிக் கிடந்ததையும் கூச்சல் குழப்பம் நிறைந்ததாய் இருந்ததைக் கண்டபோதும் மிகுந்த மனவேதனை அளித்தது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான ஓர் அந்நியோன்ய உறவைக் காணமுடியவில்லை. பிரம்புகள் கோலோச்சுவதையும் வன்முறையான வார்த்தைப் பிரயோகங்கள் மாணவர் மீது அள்ளிவீசப்படுவதையும் பார்த்திருக்கிறேன்.

சில ஆசிரியர்கள் வகுப்பறைகளில் எழுந்து நின்று கற்பித்ததாகவோ ஒரு தடவையேனும் கரும்பலகையில் வெண்கட்டியினால் எழுதியதாகவோ தமக்கு ஞாபகம் இல்லை என்றும் மாணவர்கள் கூறியபோது ஆச்சரியத்தைத் தந்தது. மேலும் புதிய கற்பித்தல் நுட்பமுறைகளை ஓரளவுக்கேனும் பயன்படுத்தாதவர்களாக இருக்கின்றனர். கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் வருடந்தோறும் வெளியிடும் சுற்றறிக்கைகளையோ வெளியீடுகளையோ தெரிந்து கொள்வதில் ஆர்வமற்றவர்களாக இருக்கிறார்கள்.

இவ்விடயங்களை நான் ஆசிரியர்கள் மீதான குறைபாடாகவோ குற்றச்சாட்டாகவோ முன்வைக்கவில்லை இவற்றிற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எவ்வகையான வழிமுறைகள் உண்டு என்பதனையே தேடி நிற்கின்றேன். அதிகார மையங்களுக்கும் கல்விக் கொள்கைகளுக்கும் அப்பால் நின்று நாம் விழுமியம் மிக்க ஓர் கல்விப்பண்பாட்டை வளர்த்தெடுக்க முடியும் எனில் அது உயரிய ஜனநாயக விழுமியங்களைக் கொண்ட நேர் சிந்தனையுடைய சமுதாய உருவாக்கத்திற்கான வழிமுறையாக இருக்குமென நம்புகிறேன். இதற்கெல்லாம் தாம் சார்ந்ததும் தம் சமூகம் சார்ந்ததுமான தூரநோக்குப் பார்வையும் வாழ்க்கைத் தொழிலாக ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றேன் என்று அர்ப்பணிப்பு உணர்வும் ஆசிரியர்களிடத்தில் ஏற்படாத வரை கல்வித்தர வீழ்ச்சியில் மாற்றம் நிகழாமை என்பது நிரந்தரமாகிவிடும்.

ச. இந்திரகுமார்

# ஜீன் ஜக்ஸ் ரூஸோ (1712 - 1778)

## தத்துவமும் கல்விச் சிந்தனைகளும்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

ஜீன் ஜக்ஸ் ரூஸோ ஜெனிவாவில் உள்ள கல்வினிஸ்டு என்ற இடத்தில் செல்வச் சூழலில் பிறந்தார். சிறுவயதில் கட்டுப்பாடற்ற சுதந்திர வாழ்க்கையை வாழ்ந்தார். அவரது வாழ்க்கை உடனடி இன்பங்களை நாடிப் பெறுவதாக இருந்தது. இவர் இளவயதினில் சிறிது காலமே முறைப்படி கல்வி பயின்றார். 16 வயதில் ஊர் சுற்றியாக (Vagabond) வாழத் தொடங்கினார். இத்தகைய வாழ்க்கைதான் இவருக்கு இயற்கை பற்றிய அவரது உணர்வினையும், அறிவையும் அதன்பால் அவருக்கிருந்த பற்றினையும் அதிகரித்தது. அவரது இவ்வாறான சுய அனுபவம் மூலமாகவே அவரது கல்விக்கருத்துக்கள் எழுந்துள்ளன எனலாம். இவர் ஐரோப்பாவில் தோன்றிய ஒரு பிரதான சமூக தத்துவஞானி ஆவார். கி.பி. 1764 ஆம் ஆண்டளவில் 'எமிலி' எனும் நூலை எழுதினார். இது நாவல் வடிவத்தைப் பெற்றதாக இருந்தது. எனினும் இந்நூல் கல்வித்துறைக்குப் புத்தொளியூட்டியது என்றால் மிகையாகாது.

பெருமைமிக்க தத்துவஞானிகளாகிய பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ரென்தெகார்த்த, ஸ்பினீஸ், ஜோன் லொக் போன்றவர்களின் ஆக்கங்களைக் கற்றுத் தனது தத்துவச் சிந்தனைக் கோலத்தைக் கட்டியெழுப்பியவர் ரூஸோ. அது போல கல்வித்துறையிலும் அரசியல் துறையிலும் புதுச்சிந்தனையைத் தோற்றுவித்தவர். இவரது 'எமிலி' கல்விப்புரட்சியை ஏற்படுத்த வழிகோலியது. 1762 இல் எழுதிய 'சமுதாய ஒப்பந்தம்' எனும் நூல் பிரஞ்சுப் புரட்சிக்கு துணையாக அமைந்தது எனலாம்.

'கடவுள் அனைத்தையும் நன்றாகவே நிர்மானித்தார். மனிதன் அவற்றில் தலையிட்டமையினால் அவை தீயவையாக மாறின' என அவர் எமிலியின் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். இயற்கைக்கு இயைய இயற்கையுடன் தொடர்புடையதாக இயற்கையுடன் பின்னிப்பிணைந்து வளர்வதற்கும் உருப்பெறுவதற்கும் பிள்ளைக்கு இடமளித்தல் வேண்டும் என்பது இவரது கருத்தாகும். இவரது காலம் வரை நிலவி வந்த இயந்திரப்பாங்கான கற்பித்தற் கோலத்தினை மாற்றியமைத்து பிள்ளையிடத்தே சுதந்திரமான சிந்தனையை நிலை நிறுத்துவதற்கு இது உதவியது. அக்கால சமய அடிப்படைவாதிகள் இவரது நூல்கள் இரண்டையும் எரித்துவிட வேண்டும் என்று திரண்டெழுந்தனர். மிலேச்சத்தனமானது. சமூக ஒழுங்கைக் குலைப்பது, கிறிஸ்தவ சமய நம்பிக்கைகளுக்கு பாதகமானது என்றவாறு சமய அடிப்படைவாதிகள் குரலெழுப்பினர். பரிஸ்நகர மேற்றிராணியார் இக்கண்டனங்களை முதன்மைப்படுத்தினார். மனிதர்கள் நீதியையும் ஒழுங்கையும் விரும்புவர்கள் என்றும் கூறினார். பின்னர் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்றுக் கொண்டு சுவிற்சலாந்திலும் இங்கிலாந்திலும் வாழ்ந்துவிட்டு 1770 இல் மீண்டும் பரிசுக்கு மீண்டார். எனினும் அவருடைய எழுத்தாக்கங்கள் கண்டனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. தமது எழுத்தாக்கங்களினால் எதிர்ப்பைச் சேர்த்துக்கொண்டவர்களில் ரூசோவிற்கு சிறப்பான இடமுண்டு. இவரது மனித விருத்தி உளவியற் கண்ணோட்டம் பின்வருமாறு கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

1. இயற்கைக் காலம் 0 - 12 வயதுவரை
2. காரணங்காணற் காலம் 12 - 15 வயது வரை
3. வலுவிசையெழுங்காலம் 15 - 20 வயது வரை
4. ஞானம் முகிழ்க்கும் காலம் 20 - 25 வயது வரை

இவற்றைத் தொடர்ந்து வாழ்க்கையின் மகிழ்ச்சியான காலம் நீடிக்கும் என்றார்.

ரூசோவிற்கு முன்னரே தமிழ் மரபிலும், இந்திய மரபிலும் இயற்பண்புவாதச் சிந்தனைகள் நிலைபேறு கொண்டிருந்தன. மனித உடல் ஐம்பூதங்களினால் ஆக்கப்பட்டது என்ற கருத்து ஐம்பூதங்களோடு இசைவு கொண்டு வாழப்பழகுதல். பச்சிலை மருத்துவம், வனவாழ்க்கை, இயற்கைப் பொருள்களை நேரடியாக ஆடை அணிகலன்களாகப் பயன்படுத்தல், கருவளச்சிந்தனைகள், வளப்பெருக்கு

(Ferlity) சடங்குகள் முதலியன இயற்பண்பு வாதத்துடன் நேரடியாக தொடர்புகள் கொண்டிருந்தன.

நவீன குழந்தைக் கல்விச் செயற்பாடுகளில் நுழைவாயில்களில் ரூசோவே நிற்கின்றார் என்பதும் கலைத்திட்டத்தில் மாணவரை மையப் படுத்தலும் செயல் வழிக்கற்றலும், வளர்ச்சிப்படி நிலைகளை அடியொற்றிக் கலைத்திட்ட அனுபவங்களைக் கட்டமைப்புச் செய்தலும் ரூஸோவின் செல்வாக்கினைச் சுட்டிக் காட்டுகின்றன. தற்கால சர்வதேச சிறுவர் உரிமைச் சாசனங்களை அமைப்பதற்குரிய கருத்தியல் முன்னோடியாகவும் ரூஸோவே விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கல்வியின் மூன்று அமைப்புக்களை வேறுபடுத்திக் காட்டியுள்ளார். அவையாவன இயல்பு அல்லது இன்மை. சமூகம் அல்லது நன்நெறி, நகர்ப்புறம் அல்லது அரசியல் எனலாம். இவரது கல்விப்படிகளாக உணர்ச்சியின் பயிற்சி பழக்கம் ஆகியவற்றால் சித்தரிக்கப்பட்ட பருவம். புலப்பயிற்சிகளுடைய பயிற்சியும் பயன் படுதன்மையுமான குணாதிசயங்கள் கொண்ட குழந்தைப்பருவம், அறிவின் பயிற்சியும் பயன்படுதன்மையும் கொண்ட குணாதிசயங்களுள்ள வாலிபப்பருவம், சமூக அழகுணர்கலை நன்னெறியமைந்த குணாதிசயங்கள் கொண்ட குமரப்பருவம் என்பனவாகும்.

இவர் 5 பருவங்களைக் கொண்ட கல்வித்திட்டமொன்றை முன்வைத்தார்.

குழந்தைப்பருவம் - பிறப்பு முதல் 5 வயது வரை

பிள்ளைப்பருவம் - 5 வயது முதல் 12 வயது வரை

முன்கட்டிளமைப்பருவம் - 12 வயது முதல் 15 வயது வரை

கட்டிளமைப்பருவம் - 15 வயது முதல் 19 வயது வரை வளர்ந்த பருவம்

பெண்கல்வியும் 20 வயதுக்குமேல் இவ்வயது அடிப்படையில் கல்வித்திட்டங்களை முன் வைத்துள்ளார்.

## இயற்கைவாதம்

இவர் இயற்கைவாத கல்விச் சிந்தனைகளை முன்வைத்துள்ளார். இத்தத்துவக் கருத்துக்களை நோக்குமிடத்து

உண்மை உலகினைத் தவிர வேறு பாடங்கள் தேவையில்லை.

உண்மை நிகழ்ச்சிகள் அன்றி வேறு ஏதும் குழந்தைகளுக்கு கற்பிக்கக்கூடாது

சிறந்த கல்வி என்பது இயற்கைப் பொருட்களுள் இயற்கை சக்திகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதனின்றும் எமது அனுபவங்களின் அடிப்படையில் அமைவதாகும்

ஆரம்ப நிலையில் கல்வியானது சமூகப்பழக்க வழக்கங்களால் குழந்தை கெடாதவாறு பாதுகாக்க உதவ வேண்டும்

கற்றலுக்கு முன் குழந்தையின் புலன்களும் திறன்களும் பயிற்சி பெற வேண்டும்

மனித சமூகங்கள் செய்யும் அசுத்தங்களைச் சுத்தீகரித்தல் கல்வியின் பணியாகும்

பிள்ளையின் இயல்பான வளர்ச்சிப்பாங்குக்கு ஏற்ப பிள்ளையை வளர்த்து உருவாக்கி எடுக்க வேண்டும்

பிள்ளை சிந்திக்கும் முறை வளர்ந்தோர் சிந்திக்கும் முறையிலிருந்து வேறுபட்டது. அதனால் பிள்ளையை விளங்கி அவனது திறமைகளுக்கு ஏற்ற முறையில் கல்வி திட்டமிடப்படவேண்டும்.

குழந்தை மற்றும் சிறு பிள்ளை பருவங்களில் பிள்ளை இயற்கை சூழலிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்

சூழலுக்கு ஏற்றவாறு கல்வி பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து மனிதர்களிடமும் ஆசிரியர்களிடமும் கல்வி பெற வேண்டும்

பின்னர் பண்டங்களையும் பொருட்களையும் பயன்படுத்திக் கல்வி பெற வேண்டும் என்பனவாகும்.

## ரூஸோவும் இயற்கை வாதமும்

17ம் நூற்றாண்டுவரை கல்வி முறை முறையானதாக இருக்கவில்லை. அதன் பின்னர் தான் இக் கல்விச் சிந்தனையாளர்களுடைய சிந்தனைகள் கருத்துக்கள் காரணமாக கல்வித்துறை முறைப்படுத்தப்பட்டது. இவ்வகையில் ரூஸோ ஒரு பிரதானமானவராவார். இவர் புதிய சிறந்த கல்விச் சிந்தனைகளை முன் வைத்தவர். பிரான்ஸில் சலுகை பெற்ற வகுப்பினருக்கு மட்டுமே சிறந்த கல்வி கிடைக்கப்பெற்றது. ஆனால் 1750 களில் பிரான்ஸ் சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் போன்ற கொள்கைகள் உறுதிபெற பிரான்ஸ் புரட்சி காரணமாயிற்று. இவை எல்லாத் துறைகளிலும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தின. அரசியல் மற்றும் கல்வித்துறைகள் மாற்றம்

பெற்றன. பிள்ளைகள் நன்றாகக் கவனிக்கப்பட்டார்கள். நன்றாக விளங்கிக் கொள்ளப்பட்டார்கள். மனிதாபிமான அடிப்படையில் கற்பிக்கப்பட்டார்கள். இவருடைய இயற்பண்பு வாதத்தின்படி, நாகரிகம், மனிதன் அரசு எல்லாம் இயற்பண்பு வாய்ந்தவை. இந்த இயற்பண்பிலிருந்து விலகிச்சென்றதன் காரணமாகவே பல இன்னல்களும் தோன்றுகின்றன. பிள்ளைகள் இயல்பாக சிறந்தவர்கள் உலகச்சூழல் அவர்களை வழிதவறச் செய்கின்றது. இறைவனிடமிருந்து வரும்போது எல்லாம் நன்றாக இருக்கின்றன. சமூகத்தின் கரங்களில் கெட்டுப் போகின்றன என ரூஸோ விளக்கினார். எல்லா நிறுவனங்களும் மனிதனைக் கெடுப்பதாகக் கூறினார். பிள்ளைகள் இயல்பாக வளர்ச்சிபெற வேண்டும். அவ்வாறான வளர்ச்சியே சிறந்த வளர்ச்சி என்றார். இவரின் கருத்துப்படி கல்வி இயற்கை, மனிதன், பொருள் என்பன வற்றிலிருந்து பெறப்படுவது. இம் மூன்றுமே கல்வியின் மூலாதாரங்கள் எனக் கூறினார்.

பொருட்கள் - பௌதீக சூழலையும்

மனிதன் - சமூகத்தையும்

இயற்கை - இயல்பான பிள்ளைகளின் ஆற்றலையும் குறிக்கும்

கல்வியின் நோக்கம் ஆத்மிகம், சமூகவளர்ச்சி தொழில்திறன் வளர்ச்சி என்பனவாகும்.

இயற்கை வாதம் என்பது இலட்சிய வாதத்திற்கு மாறானது. அதிகளவு விஞ்ஞான ரீதியானது. உண்மை யதார்த்தம் என்பது இயற்கையே என இத்தத்துவம் நம்புகிறது. இயற்கைக்கு அப்பால் எதுவுமில்லை. மனித வாழ்க்கை என்பது இயற்கையின் ஒரு பகுதியே. சில இயல்பான சட்டங்களும் சக்திகளும் இருக்கின்றன. இந்த இயற்கை சட்டங்கள் சகல மனித அனுபவங்களிலும் பயன்படுத்தப்பட்டன. மனிதனுடைய ஆத்மீக அனுபவம், பகுத்தறிவு அனுபவம், சடத்துவ அனுபவம் எனும் எல்லாவற்றிலும் இயற்கை சாத்தியம் உண்டு. பௌதீக உலகம், ஆத்மிக உலகம், சடப்பொருள் இயற்பண்பு வாதம், ஆதிக்கம் என்பன தொடர்பான சகலதையும் கருத்திற் கொள்ளும் போது இயற்கை வாதமாகிறது.

இயற்கை வாதமானது இயற்கையை இறைவனிடமிருந்து பிரித்துக்காட்டுவது. விஞ்ஞானப் பாங்கான கொள்கைகளைத் தத்துவப் பிரச்சனைகளுக்கு பயன் படுத்துவது இயற்பண்புவாதமாகும்.

1. உயிரியல் இயற்பண்பு வாதம்
2. பொறிமுறை இயற்பண்பு வாதம்
3. பௌதீக இயற்பண்பு வாதம் என பல உண்டு.

இயற்கை வாதத்தின்படி கல்வியானது பிள்ளைகளின் இயற்பண்புகளுக்கு ஏற்ப பாடநூல் கால அட்டவணை, பாடத்திட்டம் ஏன் ஆசிரியர்கள் கூட முக்கியமானவர்களல்ல, கற்கும் பிள்ளைகளே முக்கியமானவர்கள்.

பிள்ளைகளது விருத்தி இயல்பானதாக இருக்கவேண்டும். இயல்பான வழியில் போகவேண்டும் அதற்கான வழியை ஏற்படுத்துவதே பாடசாலையின் பணியாகும். அரிஸ்டோட்டில், பெஸ்டலோஸ ி, பென்சென், பிரோபெல், பேர்னாட்ஷா போன்றோர் இவ்வாறான இயற்பண்பு வாதிகள். உலகத்தையே மாற்றிய (Paradigl shift) கட்டளைப் படிவமாற்றம் ஒன்றை முன் வைத்தனர். ரூஸே ா இந்தசிந்தனையை உச்சகட்டத்திற்கு இட்டுச்சென்றவர். இவர்தான் இயற்கைவாத அடிப்படையில் கல்வி பற்றி விரிவாக எழுதியவர். பிள்ளைகள் இயற்கையின்படி இயற்கையின் உள்ளடக்கத்தைக் கொண்டு கற்க வேண்டும். கல்வியை வழங்கும் மூன்று வளங்கள் உள்ளன இயற்கை, மனிதன், பொருட்கள் என ரூஸோ கூறினார். இவற்றுள் இயற்கை வழிவந்த கல்வியே பிரதானமானது. இயற்கை வழிவந்த கல்வியே இயற்கை மனிதனை ஆயத்தப்படுத்தும். இயற்கை மனிதன் காட்டுமனிதனல்ல. அவனது இயற்கை சட்டங்களின் படி அவன் வாழ்வான் என்றார் ரூஸோ.

ஒரே போக்கான கல்வி முறைக்கு எதிரான ஒரு புரட்சிகரமான மாற்றமே இயற்கைவாதம். பிள்ளைகளின் இயல்பான வளர்ச்சிக்கு அவ்வித அதிகாரப்பாங்கான தலையீடுகள் (ஆசிரியர்கள்) இருக்கக்கூடாது. பிள்ளைகளுக்கு ஒரு மைய இடமும் அதிகபட்சம் சுதந்திரமும் வழங்கப்படுகிறது. இயற்கையைப் பின்பற்றல் மற்றும் இயல்பூக்கங்களே கல்வியின் அறிவைப் பெறுவதற்கான வழி புலன்களே. பிள்ளைகளுக்கு அதிகபட்ச மகிழ்வு, சுதந்திரம் என்னும் இவை இயற்பண்பு வாதத்தின் தாரகமந்திரங்களாகும். பிள்ளைகள் புலனுணர்வு மூலமாக அறிவைப் பெறுகின்றனர். கல்வி நோக்கங்களைப் பொறுத்தவரையில் இலட்சியவாதிகளுக்குத் தன்னையறிதல் என்பது குறிக்கோள். இயற்கை வாதிகள் சுயஏற்பாடு சுயபராமரிப்பு என்பனவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டனர். மேலும் பிள்ளைகள் நவீன காலத்திற்கேற்ப சிந்தனை, செயல் என்பனவற்றைக் கொண்டிருக்க வேண்டியது பிரதானமானது.

## பாட ஏற்பாடு

கூர்புக் கோட்பாட்டை (பரிணாமக்) முன்வைத்த டாவின், பிள்ளைகள் வாழ்வதற்கான போராட்டத்தை நடத்துபவர்கள் உலகில் தக்கன பிழைத்து வாழத் தேவையான ஆயத்தத்தை வழங்குவது எனத் தெரிவித்தார். மேலும் கல்வியானது புதிய சூழ்நிலைக்கேற்ப பிள்ளை தன்னைச் சீராக்கிக்கொள்ள உதவுகிறது. ரூஸோவின் கருத்தின்படி கல்வின் நோக்கம் சமூகத்தின் மரபுகளுக்கு ஏற்ப அன்றி பிள்ளையின் இயற்கை சூழலுக்கு ஏற்பவே என்றார். இயற்பண்புவாதிகள் கல்வியின் நோக்கம் பற்றிக் கூறியவை உண்மை உலகினைத்தவிர வேறு பாடங்கள் தேவையில்லை. இதுவே பிரதான நோக்கம். பிள்ளை நல்ல வாழ்வை வாழ்வதில் தேவையான பயிற்சியைப் பெறுதல், அடுத்ததாக மனித இயல்பூக்கங்களைத் திசைமுகப்படுத்தல் சமூகத்திற்குப் பயனுள்ள பணிகள் நோக்கித்திரும்பல். தனியாளின் தேவை சமூக தேவைகளை நிறைவுசெய்தல். தக்கன பிழைக்கும் என்ற அடிப்படையில் வாழ்வதற்குத் தேவையான ஆட்களை வழங்குவது, பிள்ளைகள் மாறும் சூழலுக்கேற்ப உடல், உளரீதியாகத் தம்மை சீராக்கல் பௌதீக இயல்புக்கேற்ப மட்டுமன்றி பிள்ளையின் இயற்கை சூழலுக்கேற்ப அமைதல். கல்வி பிள்ளையின் விருப்பு வெறுப்பு ஆக்கங்கள் , இயல்பூக்கங்களுக்கேற்ப அமைதல். இயல்பான ஆக்கங்களை விருத்தி செய்ய தேவையான சந்தர்ப்பங்கள் வேண்டும். தனியாள் முழுமையான விருத்திச் செயற்பாடு இயற்கை வாதத்தின்படி ஒரு நிலையான பாட ஏற்பாடு கொடுக்கப்பட வில்லை. விரும்பப்படவில்லை. ஒவ்வொரு பிள்ளைக்கும் பாட ஏற்பாட்டை தீர்மானிக்கும் உரிமை உள்ளது. பிள்ளை தன்சேர்ந்த அனுபவத்தினூடாக இயற்கையிலிருந்து கற்றுக்கொள்ளல், இரசாயன் வியல், இயற்கைக்கற்கை, தோட்டக்கலை, கைப்பணி, புவியியல், வானவியல் போன்ற பாடங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இவையாவும் இயற்கை சூழலுடன் தொடர்புடையவை.

பிள்ளைகளின் விளையாட்டுக்கள் சூழஉள்ள வாழ்க்கை என்பனவற்றுடன் தொடர்புடையன. உல்நலன், தொழில்வாழ்க்கை, குடும்பவாழ்க்கை, சமூக வாழ்க்கை என்பனவற்றை செழிக்கச்செய்ய தேவையான பாடங்களைக்கற்பிக்க வேண்டும். இயற்கையுடன் தொடர்பான பாடங்களாகிய உயிரியல், இராசாயனம் போன்ற பாடங்களை இயற்கை வாதிகள் வலியுறுத்துகின்றனர். விஞ்ஞானப்பாடங்களை விளங்க கணிதம், மொழி போன்றன தேவை என்பதனால் அவையும் வலியுறுத்தப்பட்டன. வரலாறு பழைய அனுபவங்கள் பற்றியன எனவே அவற்றிற்கு முக்கியத்துவமில்லை. ரூஸோவின் பாடத்திட்டம் எதிர்மறைக் கல்வி எனப்படும் பிள்ளைக்கு அதிக சுதந்திரத்தை வழங்கினார். நூலறிவு வாய்மொழிப் பாட நூல் என்பன இல்லாததால் இவர்கள் விரிவுரைகள் பாடநூல்கள் என்பனவற்றை விரும்பவில்லை. காட்சிப் பொருட்களுக்கு அதிமுக்கியத்துவம் வழங்கினர். செய்து கற்றல், பொருட்கள் பற்றிய நேரடி அனுபவங்களை வலியுறுத்தினர். நூலறிவு மிகக்குறைய இருத்தல் வேண்டும். புவியியல் பாடத்தில் செயன்முறைப் பயிற்சி, அவதானம், சுற்றுலா என்பன வலியுறுத்தப்பட்டன. இயற்கை வாதிகள் விளையாட்டு முறை எடுத்துக் கூறினர். இது ஆக்கத்திறன் உள்ளது, இயல்பானது. மகிழ்ச்சியைத்தருவது எனக் கூறினர். கால அட்டவணை நெகிழ்ச்சியானதாக அமைய வேண்டும். மாணவர்கள் அவதானிக்கவும், பரிசோதனை செய்யவும் அதிகவாய்ப்பு இருக்கவேண்டும். இயற்கைவாதிகள் திறந்தவெளிப்பாடசாலைகளை விரும்பினர். பாடசாலை சுயாட்சி, ஆண்பெண் கலப்புக்கல்வி என்பனவற்றை விரும்பினர். சுயாட்சி என்பது சமூகவாழ்க்கைக்கான நேரடி அனுபவங்களை வழங்குவது. கூட்டுக்கல்வியானது சிறந்த சமூகக் குடும்ப வாழ்க்கைக்கு உதவும்.

ஒழுக்க நெறிபற்றி

இவர்களுடைய கருத்தின் படி தாம் விரும்பியதைப்படிக்கலாம். எவ்வித தண்டனையும் இருக்காது. நடத்தைக்கான விளைவை அவனே பெறல் வெளிநிலையிலிருந்து ஒழுக்காற்றலை ஊட்டக்கூடாது எனவும் ரூஸோ கூறினார். பிள்ளைக்கு இயல்பாகக்கிடைக்கும் வலியே போதுமானது. ஆனால் இக்கருத்தைப் பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை இயல்பாக யாவருக்கும் கிடைக்காது இயற்கைத் தண்டனை மிகையாக இருக்கும்.

## ஆசிரியர்

ஆசிரியர் பின்புலத்திலேயே இருக்கவேண்டும் என இயற்கைவாதிகள் கூறினார்கள். அவர் தகவல்களையும் கருத்துக்களையும் வழங்குபவர் அல்ல பிள்ளையின் வளர்ச்சியை அதானிக்க என்ன செய்ய வேண்டுமென சொல்லக் கூடாது. பிள்ளையின் இயல்பு வளர்ச்சியில் தலையிடக் கூடாது. எதைக் கற்கவேண்டும் என்பதைப் பிள்ளை அறியும். இவர்களது கருத்துப்படி ஆசிரியர் பிள்ளைகளின் இயல்பான வளர்ச்சிக்கான தகவல்களை வழங்குபவராவார்.

ஆயத்தப்படுத்துபவர் அதற்கான சந்தர்ப்பங்கள் சாதனங்களை வழங்குபவர். இன்றைய நவீன கல்வி முறைகளில் ஆசிரியரது வகிபாகம் ஏறத்தாள இத்தத்துவங்களின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டுள்ளது. இவர்களது கருத்துப்படி முழுக்கல்விச் செயற்பாட்டினடிப்படையாக பிள்ளை உள்ளது. ஆசிரியர்கள் பாட ஏற்பாடு கற்பித்தல் முறை என்பனவற்றைவிட பிள்ளை முக்கியமானது. பாடசாலையை விட பிள்ளைக்கு சுதந்திர வளர்ச்சிக்கான சூழலை வழங்குங்கள்.

கல்வியின் நோக்கம் ஆத்மீகம், சமூகவளர்ச்சி, தொழில்த்திறன் வளர்ச்சி பிள்ளைகளின் ஆர்வங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது அதனை சிறு மனிதனாக வளர்ப்பதே அக்காலக்கல்வி, சிந்திக்க, பேச, நடக்க பழக்குகின்றோம். இக்கருத்தை ரூஸோ எதிர்த்தார். கல்வி வாழ்வு முழுவதும் இடம்பெறுவது பிறப்பிலிருந்து ஆரம்பிக்கும் கல்வி இறப்புவரை நீடிக்கின்றது. கல்வியே வாழ்க்கை, கல்வி வாழ்க்கைக்கான ஆயத்தம் என்று கூறுவது பிழையானது.

பிள்ளைகளின் இயல்பான வளர்ச்சி

பிள்ளைகளின் சமச்சீரான வளர்ச்சி

பிள்ளைகளின் பயனுள்ள வாழ்க்கை என்பனவே கல்வியின் நோக்கங்கள். புலன்கள், ஆற்றல்கள் போன்ற சகலவற்றையும் பயன்படுத்துவதற்கான ஆற்றலை கல்வி வழங்குகின்றது என்றும் அறிவார்ந்த வளர்ச்சி. ஒழுக்கவளர்ச்சி, ஆத்மீக வளர்ச்சி பற்றியும் கூறினார். ஆண் பெண் சமகல்வி பற்றி கூறவில்லை. பெண்ணுக்குரிய பலகடமைகள் நிறைவேற்ற அவர்களுக்கு பயிற்றவேண்டும். உயர்தர எழுத்தறிவுக்கல்வி தேவையில்லை. வீட்டுவேலை , தையல், சமயக்கல்வி பற்றியே அவர் கூறியுள்ளார் இவ்வகையில் ரூஸோவின் கருத்து பிழையானது.

### கற்பித்தல் முறை

கற்பித்தல் முறைகள் பற்றிக் கூறும் போது கல்வியானது ஒரு விருத்திச் செயற்பாடு அது மகிழ்ச்சிகரமானதாக பயனுள்ளதாக பகுத்தறிவு அடிப்படையில் இருக்க வேண்டும். பிள்ளைகளின் இயல்புத் தன்மைகளை அடக்கி ஒடுக்கக்கூடாது. வாய்மொழிக் கற்பித்தலுக்கு முன் அனுபவம் வேண்டும். சொற்களைக் கற்பிக்கு முன் பொருள்களைக் காட்டல் வாய்மொழியின் போது அனுபவம் மட்டுமே கற்பித்தலுக்கு சிறந்தது. செய்து கற்றல் முக்கியம் என்றார் புத்தக அறிவு மிகக் குறைவாக இருக்க வேண்டும். எதைச் செய்து கற்றல் செய்ய முடியாவிட்டால் சொற்களில் நாடல் வேண்டும். விளையாட்டுத்துறை பிள்ளைகளின் புலன்கள் அவர்களுக்கு வழிகாட்டியாக அமைதல் விளையாட்டு முறைக்கல்விக்கு இவரே மூலகருத்தாவார். காட்சிப் பொருட்களினூடாகக் கற்றல் ஆசிரியர் வகிபாகம் பற்றிக் கூறிய போது கல்விச் செயற்பாட்டில் சிறுபங்கேயுள்ளது. அவர் போதிப்பவர் அல்லர் வெறும் வழிகாட்டியே. பிள்ளைகளின் உள்ளாந்த ஆற்றல்களை பயன் படுத்துதல் பின் பிள்ளைகளின் மெய்ப்பாடுகளை கட்டுப்படுத்தக்கூடாது. உள்ளார்ந்த ஆற்றல்களையும் பிள்ளைகளின் விதிகள் பிரமானங்கள் முழுமையான சுதந்திரம் வழங்கல் அவருடைய சிந்தனைகளை எதிர்மறைச் சிந்தனைகள் பிள்ளைகள் சமூகத்தில் வாழும்போது மனிதனால் கெடுக்கப்படுகின்றனர் என்பது எதிர்மறைக்கருத்து. உண்மை நன்மை பற்றி அதிகம் கற்பிக்கக்கூடாது. அவரது கருத்தின்படி எதிர்மைறைக்கல்வி என்பது பிள்ளைகளின் அறிவைப் பெரும் புலன்களால் வளர்த்தெடுத்தல் என்றார்.

### எதிர்மறைச் சிந்தனை

எதிர்மறையான கருத்துக்களாக புத்தகப்படிப்புக்கள் இருக்கக்கூடாது. நூல்கள் பிள்ளைகளுக்கான சாபக்கேடு. அவரது பிள்ளைகள் வேலைத்தளத்தில் பணியாற்றினர். கைப்பணிகள் மூளைக்குப்பயிற்சியளிக்கும் எனக் கூறினார். பிள்ளைகள் சொந்த முயற்சியினூடாகவே வெவ்வேறு அனுபவங்களினூடாக கற்க வேண்டும். பொழுதுபோக்கு விளையாட்டு என்பனவற்றின் விரயம் நேரவிரயமல்ல என்றார். அறிவுப்பணிகளுக்குப் பிள்ளைப்பருவம் பொருத்தமானது என்றார். பழக்கங்களை வளர்த்துக் கொள்வதை எதிர்த்தார். பிள்ளைகள் மகிழ்ச்சியற்ற பழக்கங்களை பழகக்கூடாது. பிள்ளைகள் இயல்பான பழக்கங்களைக் கொண்டவராக இருக்கவேண்டும் என்றார். அவரது கால பிரெஞ்சு சமூகம் மோசமானது ஊழல்மிக்கது. பிள்ளைகள் அச்சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும். சமூகக் கல்வி கூடாது. சமூகக்கேடுகளிலிருந்து தப்பித்துக்கொள்ளத் தேவையான தருணம் கிடைக்கும்வரை பேசாமல் இருத்தல் வேண்டும். முறையான ஒழுக்காற்றல் நேரடியான ஒழுக்கக்கல்வி இருக்கக்கூடாது என்றார். பிள்ளைகள் எதுசரி எது பிழை என்பனவற்றைத் தாமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

*(தொகுப்பு : றொஸ்மின் ரஷானா அப்துல் ரஹிம்)*

# இலங்கை தந்த இரு பெரும் கணித விற்பன்னர்கள்

கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை

சர்வதேச ரீதியில் சாதனை படைத்த இரு பெரும் கணித விற்பன்னர்கள் பேராசிரியர்கள் செல்லப்பா சுந்தரலிங்கம் அவர்களும் கிறிஸரி ஜெயரத்தினம் எலியேசர் அவர்களுமாவர்.

போராசிரியர் சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பராய் என்னும் ஊரில் ஓகஸ்ட் மாதம் 19ஆம் நாள் 1895ஆண்டு பிறந்தார். இவரது தந்தையின் பெயர் செல்லப்பா. தாயின் பெயர் மீனாட்சி.

சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள சென் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வியை ஆரம்பித்துப் பின் கொழும்பில் உள்ள சென்யோசேப் கல்லூரியில் தொடர்ந்தார். இங்கிருந்து லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்து 1914 ஆம் ஆண்டு தனது 19ஆவது வயதில் இங்கிலாந்துக்குச் சென்று லண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பட்ட இறுதிப் பரீட்சையில் கணிதத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (B.Sc. Hons) பெற்றார். இதைத் தொடர்ந்து ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் (Oxford University) இணைப்புக் கல்லூரியான பலியோல் கல்லூரியில் (Balliol College) சேர்ந்து கணிதத்தில் இரட்டை முதலாம் தர றைப்பொஸ் (Double first in mathematics tripos) என்னும் உயர்தர உயர் பட்டம் பெற்றார். இதே வேளை இந்தியன் சிவில் சேவையிலும் இலங்கை சிவில் சேவையிலும் சித்தியடைந்தார். இலங்கைக்குத் திரும்பி இலங்கை சிவில் சேவையிலும் பதவி வகித்தார். இந்தப்பணி அவர் பெற்றிருந்த உயர் கணித அறிவுக்கு ஏற்றதாக அமையாததால் 1920 இல் அதை விட்டு அதே ஆண்டு இங்கிலாந்தில் உள்ள கிறேஸ் இன் (Grays Inn) என்னும் சட்டக்கல்லூரியில் சட்டவாதியாகி இலங்கையில் சட்டத்தரணியாக பணியைத்தொடர்ந்தார். இதேவேளை ஆனந்தா கல்லூரி உப அதிபராகவும் பணியாற்றினார்.

இலங்கையின் தலை நகரான கொழும்பில் 1921 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு லண்டன் பல்கலைக்கழக பட்ட பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயார் செய்யப்பட்டார்கள். எனவே இவர் இலங்கை பல்கலைக்கழக கல்லூரியில் கணித பேராசிரியராகவும் கணிதத்துறை தலைவராகவும் பதவி ஏற்றார். பேராசிரியராகப் பணியாற்றும்போது அவர் சிறந்த அறிவாளியாக மதிக்கப்பட்டது மாத்திரமல்லாது மாணவர்களின் நலனுக்காகவும் உழைத்த பேராசிரியராகவும் போற்றப்பட்டார்.

பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்களின் குடும்பம் உயர் கல்வி பெற்ற குடும்பமாகத் திகழ்ந்தது. இவரது சகோதரர் நாகலிங்கம் பிரதம நீதியரசராகப் பணியாற்றினார். மேலும் 1954ஆம் ஆண்டு பதில் இலங்கை ஆளுனர் நாயகமாகப் பணியாற்றிய பெருமையும் உண்டு. தியாகலிங்கம் என்னும் மற்றைய ஒரு சகோதரா் பிரபல சட்டதரணியாகத் திகழ்ந்தார். உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு வழக்கில் ஓர் ஆச்சரியமான நிகழ்வு நடைபெற்றதாம். அதாவது நீதியரசர் நாகலிங்கம் நீதிபதியாக அமர்ந்திருக்க, சட்டத்தரணிகளாக சுந்தரலிங்கமும், தியாகலிங்கமும் எதிர்த்து வாதாடினார்களாம். அடுத்த ஒரு சகோதரர் அமிர்தலிங்கம். இவர் இலங்கை மீன்வளத்துறைப் பணிப்பாளராகவும் மற்றைய சகோதரர் பஞ்சலிங்கம் பிரபல டாக்டராகவும் பணியாற்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியருக்கு அரசியலில் நாட்டம் ஏற்பட்டதால் 1940இல் பேராசிரியர் பதவியைத் துறந்து அரசயலில் ஈடுபட முன்வந்தார். 1943 இலும் 1944 இலும் அரசாங்க சபை இடைத் தேர்தல்களில் போட்டியிட்டு வெல்லாவிட்டாலும் 1947இல் நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற தேர்தலில் வவுனியாவின் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பெற்றார். அத்தருணம் திரு.டி.எஸ். சேனநாயக்காவின் தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்தது. இந்த அரசாங்கத்தில் இவர் வர்த்தக அமைச்சராக நியமிக்கபெற்றார். 1948ஆம் ஆண்டு இலங்கை குடியுரிமை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பெற்றது.

இதன்படி இலங்கையில் வாழும் இந்தியர்களும் பாக்கிஸ்தானியர்களும் குடியுரிமை இழப்பர். அப்போது பிரதமராய் இருந்த கௌரவ டி.எஸ். சேனநாயக்காவின் நீண்டகால நெருங்கிய நண்பராய் இருந்த அமைச்சர் சுந்தரலிங்கம் சட்டமூலத்தின் இரண்டாவது வாக்கெடுப்பின்போது பாராளுமன்றக் கூட்டத்திலிருந்து வெளி நடப்புச் செய்தார். இதை அவதானித்த பிரதம அமைச்சர் சுந்தரலிங்கத்திடம் விளக்கம் கேட்டார். விளக்கத்துக்குப் பதிலாக அமைச்சர் பதவி ராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்தாராம். தமிழர் என்ற காரணத்தால் பல காலம் அயராத உழைத்த தோட்டத்தொழிலாளர்கள் குடியுரிமை இழப்பதைக் கண்டித்த அவர் நாட்டில் வாழும் சகலருக்கும் சம உரிமை வேண்டும் என்ற கோட்பாட்டில் அவரது அரசியல் வாழ்க்கை தொடர்ந்தது. 1952 இல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் வெற்றிபெற்ற பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்கள் பண்டாரநாயக்க அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்தது மாத்திரமன்றி அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டதால் தமிழ் இனம் சம உரிமையோடு வாழத் தனிநாடு வேண்டும் என வாதிட்டார்.

1960இல் நடைபெற்றதேர்தலில் தோல்வியுற்றார். மீண்டும் 1965இலிலும் 1970இலும் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய பின் தனது இறுதிக்காலத்தில் வவுனியாவில் வாழ்ந்தார். கணித நிபுணராகவும் சட்டத்தரணியாகவும் சகலருக்கும் உரிமைக்குப் போராடிய அரசியல்வாதியாகவும் தனது வாழக்கையை அர்ப்பணித்த பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்கள் 1985ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் நாள் உயிர் நீத்தார்.

### கிறிஸ்ரி ஜெயரத்தினம் எலியேசர்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1949ஆம் ஆண்டு கணிதப் பேராசிரியராய் பதவியேற்ற பேராசிரியர் கிறிஸ்ரி ஜெயரத்தினம் எலியேசர் பின்னர் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றி 1959ஆம் ஆண்டு மலயா பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகவும் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் 1964ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் மெல்பேண் நகரில் உள்ள லா றோப் பல்கலைக்கழகத்தில் (La Trobe University) 1968ஆம் ஆண்டு கணிதப் பேராசிரியராகவும் பதவியேற்றும் பின்னர் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் 1984ஆம் ஆண்டு ஓய்வு பெற்று ஓய்வுநிலைப் பேராசிரியராக நியமிக்க பெற்றார்.

பேராசிரியர் ஜெயரத்தினம் எலியேசர் யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குழியில் 1918இல் ஜுன் 12 ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை போள் றிச்சேட் எலியேசர். தாய் எலிசபெத் பொன்னம்மா. தாயார் மகனுக்கு மூன்று வயதாய் இருக்கும்போதே இறந்து விட்டார். தந்தையாரும் தனது 46 வயதில் உயிர் நீத்தார். இந்த துக்ககரமான சூழ்நிலை இருந்தும் ஏலியேசர் பரித்தித்துறையில் அமைந்துள்ள ஹாட்லி கல்லூரியில் படித்து பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணி பட்டப்படிப்புக்கு அனுமதி பெற்றார். தான் படித்த ஹாட்லியில் படித்தவற்றைப் பற்றிக் கூறும்போது 1.இரு மொழிகளை அறிந்திருப்பது நல்லது 2.பண்டைய செல்வங்கள் எல்லாவற்றையும் விரும்புவது நல்லது அத்தோடு அவற்றைப் பேணுபவர்களைக் கௌரவித்தலும் நன்று 3. விஞ்ஞானமும் கணிதமும் கற்பது நன்று 4. விளையாட்டுகளில் பங்குபற்றுவது நன்று 5. உலகில் உள்ள எல்லா சமூகங்களிலும் காணப்படும் மூடநம்பிக்கையைப்போல் நமது சமூகங்களிலும் காணப்படும் மூடநம்பிக்கையை குறைப்பதற்கு கற்றலைப் பயன்படுத்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டம் பெற்று அங்கேயே சிறிது காலம் பணியாற்றியபின் லண்டனில் உள்ள கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் (Cambridge University) இணைப்புக் கல்லூரிகளில் ஒன்றான கிறைற்ஸ் கல்லூரியில் (Christ's College) மேற்படிப்புக்கு அனுமதி பெற்றுச்சென்றார். அங்கு உலகப்பிரசித்தி பெற்ற பௌதிகவியல் பேராசிரியர் போள் அட்றீன் மொறிஸ் டைறக் (Paul Adrien Maurice Dirac) அவர்களின் மேற்பார்வையில் தனது கலாநிதிப் படிப்பை தொடரும் பாக்கியம் கிடைத்தது. பேராசிரியர் டைராக் தனது 31ஆம் வயதில் 1933இல் பௌதிகவியலுக்கான நோபல் பரிசை பகிர்ந்துகொண்ட பெருமையுடையவர். எலியேசர் கணித பௌதிகவியல் தொடர்பான தனது ஆய்வை பேராசிரியர் டைறக் அவர்களின் வழிகாட்டலில் பூர்த்தியாக்கி (Mathematical Physics) 1945 ஆண்டு தத்துவ கலாநிதிப் பட்டத்தைப் (Ph.D) பெற்றார். இதன் பின் இதே கல்லூரியில் உதவியாளராகப் (Fellow) பணியாற்றிக்கொண்டு சட்டம் படித்து 1949இல் மிடில் ரெம்பிள் (Middle Temple) என்னும் சட்டக் கல்லூரியின் சட்டதரணியானார். லண்டன் பல்கலைக்கழகம் விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் (D.Sc) வழங்கியது. இத்தனை உயர் பட்டங்களைப் பெற்று இதே ஆண்டு

இலங்கைக்குச் சென்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசரியர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

ஐக்கிய அமெரிக்காலில் அமைந்துள்ள பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் (Princeton University) உயர் கற்றலுக்கான நிறுவகம் (Institute for Advanced Study) என்னும் பெயரில் ஒரு உலகப் பிரசித்தி பெற்ற நிறுவகம் அமைந்துள்ளது. இந்த நிறுவகத்திலேதான் பிரபல விஞ்ஞானி ஐயன்ஸ்ரைன் தனது இறுதிக்காலத்தில் பணியாற்றினார். இந்த நிறுவகத்தின் தலைவராக இருந்தவர் றொபேட் ஹொப்பன்ஹேமர். அவர் அமெரிக்காவின் தலைசிறந்த அணுவிஞ்ஞானியும் அணுசக்தி ஆணைக்குழுவின் தலைவராய் பணியாற்றியவருமாகும். இந்த நிறுவகம் பிற அறிஞர்களை அழைத்து அவர்களுக்கு ஓர் ஆண்டு கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மேலும் அனுபவம் பெற வாய்ப்பு அளிக்கின்றது. இந்த நோக்குடன் நிறுவகத்தலைவர் ஹொப்பன்ஹேமர் 1955ஆம் ஆண்டு நிறுவகத்துக்கு வரும்படி எலியேசருக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி எலியேசர் 1955-56 ஆம் கல்வியாண்டை நிறுவகத்தில் கழித்தார். இதன்பின் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தன்பணியைத் தொடர்ந்தார். கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் அவரது சிறந்த அறிவு, உயர் கல்வித் தகைமை, பல்கலைக்கழக அனுபவம் ஆகியவற்றைக் கண்ட மலயா பல்கலைக்கழக நிர்வாகம் அவரை மலயா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக பொறுப்பேற்கும் வண்ணம் அழைப்பு விடுத்தது. இதற்காக இலங்கைப் பல்கலைக்கழகத்திடம் ஓர் ஆண்டு விடுமுறை கேட்டார். இதற்குமுன் சிலருக்கு விடுமுறைவழங்கிய பாரம்பரியம் இருந்தும் இலங்கைப் பல்கலைக்கழகம் இவருக்கு விடுமுறை வழங்க மறுத்தது. இந்த நிலையில் இலங்கைப் பல்கலைக்கழக பேராசிரியர் பதவியை 1959ஆண்டு ராஜினாமா செய்துவிட்டு உடனே மலாயா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பீடாதிபதியாகவும் கணிதப் பேராசிரியராவும் பொறுப்பேற்றார். இங்கு பணியாற்றும்போது அங்கு இந்திய படிப்புத்துறை பேராசிரியராகப் பணியாற்றிய தனிநாயக அடிகளாரின் பெருமுயற்சியால் முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மலயா பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்யப்பெற்றது. இந்த மாநாட்டுக்காக பேராசிரியர் எலியேசரும் அவரது மனைவி ராணி எலியேசரும் பெரும்பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது. இப் பல்கலைக்கழகத்தில் பத்தாண்டுகள் பணியாற்றியபின் அவுஸ்திரேலியாவில் மெல்போண் நகரில் உள்ள லா றோப் பல்கலைக்கழகத்தில் (La Trobe University) 1968ஆம் ஆண்டு கணிதப் பேராசிரியராக பொறுப்பேற்றார். இங்கு பேராசிரியராகவும் பீடாதிபதியாகவும் பணியாற்றி 1984 இல் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றபின் அவரை ஓய்வுநிலை பேராசிரியராக லா றோப் பல்கலைக்கழகம் நியமித்துக் கௌரவித்தது. இவரது ஆழ்ந்த அறிவையும் சேவையையும் மெச்சிய அவுஸ்திரேலிய அரசு 1996ஆம் ஆண்டு ஓடர் ஓ.ஃப் ஒஸ்றேலியா (Order of Australia (AM) என்னும் உயர் பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

கணித விற்பன்னராகவும், விஞ்ஞானியாகவும், சட்டவாதியாகவும் உலகப் பிரசித்தி பெற்ற கேம்பிறிஜ் பல்கலைக்கழக பரசு பெற்றவராகவும், அமெரிக்க தேசிய விஞ்ஞான அக்கடமியின் பரிசு பெற்றவராகவும். அறிஞர் மத்தியிலும், மாணவர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பெருமதிப்போடு விளங்கிய பேராசிரியர் சி.ஜெ.எலியேசர் 2001ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் நாள் உயிர் நீத்தார்.

**பேராசிரியர் சி.ஜெ.எலியேசர் எழுதிய நூல்கள்:**

- Concise Vector Analysis(1963)
- On Statics (1964)
- Evolution, Creation or What (1996).
- Mechanics for Year II (1988), co- authored with J.C. Barton

**அவர் கணிதத்திலும் பௌதிக வியலிதும் 50 உக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். அவறறுள் சில:**

- The hydrogen atom and the classical theory of radiation. Proceedings of Cambridge Philosphical Society 1943; 39: 173-180.
- The classical equations of motion of an electron. Mathematical Proceedings of Cambridge Philosophical Society 1946; 42: 278-286.
- A note on electron theory. Proceedings of Cambridge Philosophical Society, 1949; 46: 199-201.
- The effect of a magnetic pole on the energy levels of a hydrogen-like atom. Proceedings of Cambridge Philosophical Society 1962; 58: 401-404. (with S.K.Roy)

**உசாத்துணை:**


Bastiampillai ,Prof. Bertram.(2005) C. Suntharalingam – reminiscences. Internet

Jayasuriya, J.E. (1969). Education inCeylon: Before and after independence 1939 – 1968). Colombo: Assiciated Educational Publishers

Sri Kantha, Sachi. (July 14, 2012) A Conquering Scientist Christie Jayaratnam Eliezer

19th Year on the Web. Association of Tamils of Sri Lanka in the USA

Wikipedia, the free encyclopedia: Honourable C. suntharalingam

Wikipedia, the free encyclopedia. Christie Jayaratnam Eliezer

# எல்லோருக்குமான கல்வியின் இலட்சியம்

## உட்படுத்தல் கல்வி (Inclusive Education)

பாலசுப்பிரமணியம் தனபாலன்

இணைப்பாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

உலகிலுள்ள அனைத்துச் சமூகத்தினருக்கும் மற்றும் எல்லோருக்கும் கல்வியை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச பங்களிப்பைக் குறிக்கும் வகையில் 1990 ஆம் ஆண்டு "ஜோம்தியன் பிரகடனத்தில்" (Jomtien Declaration) எல்லோருக்குமான கல்வி இலக்குகள் உருவாக்கப்பட்டன. இப்பங்களிப்பானது 2000 ஆம் ஆண்டு செனகல் நாட்டின் டாகர் என்னும்மிடத்தில் டாகர் செயல் சட்டம் (Dakar frame work of action) என்பதுடன் மீளவும் உறுதி செய்யப்பட்டது. இதன் படி எல்லோருக்குமான கல்வி இலக்கு பின்வரும் மூன்று தேர்ச்சிகளை வரையறை செய்தது. அவை மனிதர்கள் வாழ்வதற்கும், தமது முழு இயலுமையை விருத்தி செய்வதற்கும் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்குமானவையாகும். கற்பதற்காகக் கற்றல் (Learning to learn) என்ற தேர்ச்சியினூடாக பின்வரும் விடயங்களை எல்லோருக்குமான கல்வி எடுத்தியம்புகின்றது.

- » வாழ வேண்டுமானால் கற்க வேண்டும். வாழ் நாள் முழுவதற்குமான செயலாகக் கற்றல் விளங்க வேண்டும்.
- » கற்றுக் கொண்ட விடயங்களை பயன்பாடுடைய செயன்முறை ரீதியான, சமூக ரீதியான கல்வி அவசியம்.
- » மனித விருத்தியுடனும், மேம்பாடுகளுடனும் ஒன்றிணைந்ததாகக் கற்றல் இருப்பதுடன் அனுபவமும் - அனுபவித்தலாகவும் இருக்க வேண்டும்.

வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் கற்றலை இணைத்தல் மூலம் உடன் துலங்கல் (Impulsivity), உள்வாங்கித் தெறித்தல் (Reflectivity) ஆகிய வெளியீடுகள் ஏற்பட வேண்டும்.

மனித வாழ்க்கை முழுவதும் கற்பதற்குக் கற்றுக்கொள்ளல் செயன்முறை சுய கற்றலாக விருத்தியடைய வேண்டும். ஆனால் எமது நாடுகளில் பலருடைய கல்வி இடைநடுவில் நின்று விடுகின்றது. இது எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்க சந்தர்ப்பம் வழங்காதுவிட்டமையின் விளைவே ஆகும். இதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

1. குடும்பப்பின்னணி – வறுமை, பருவகால உழைப்புக்குச் செல்லல், பெற்றார் விழிப்புணர்வின்மை, குடும்பப்பிளவுகள், நோய், அங்கவீனம், விசேட தேவைகள், பட்டினி, பாதுகாப்பின்மை.
2. பாடசாலைப் பின்னணி – பரீட்சை அச்சுறுத்தல் பயம், பிள்ளையின் தேவையை அறியாத கவர்ச்சியற்ற கற்பித்தல், பொருத்தமற்ற தண்டனைகள் பௌதீக – ஆசிரியர் வளம் போதாமை அனுமதிப் பிரச்சினைகள்
3. கலைத்திட்டக் குறைபாடுகள்:- பரீட்சை, இலகு கல்வி, கல்விக்கும் வேலை உலகிக்கும் தொடர்பின்மை, சுய ஆளுமை விருத்திக்கு முழுமைதராத கல்வி முறை, தொழில்நுட்பக்கல்வி வசதிகளின்மை, பொதுப்பரீட்சைகளில் குறைந்த அடைவு மட்டம்.
4. நாட்டு நிலமைகள்:- யுத்த தாக்கங்கள் பாதுகாப்புப்பற்றிய உளநெருக்கடி சமூக கலாச்சாரச்சீர்கேடுகள், பொருத்தமில்லா அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்.

இவ்வாறான காரணங்களால் அங்கவீனப் பிள்ளைகள், தொழில்புரியும் பிள்ளைகள் தெருவோரச்சிறார்கள், கற்றலில் இடர்பாடுடையவர்கள், மிகவறிய பிள்ளைகள், பின்தங்கிய பிரதேசங்களைச் சார்ந்தோர், மொழி - இன – பண்பாட்டு ரீதியான சிறுபான்மையினர். HIV தொற்றுடையோர், இடம்பெயர்ந்தோர், இடைவிலகியோர் ஆகியவர்கள் கல்வியைப் பெறுவதற்கான உரிமையைத் தவற விட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

### உட்படுத்தற் கல்வி:.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் கற்றலில் பங்குபற்றாமையை நீக்கி அனைவரையும் பாடசாலையில் உட்படுத்துவதுடன் மட்டுமன்றி சம அடிப்படையில் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கிலும் அவர்களை உட்படுத்தலே உட்படுத்தல் கல்வியின்



வரைவிலக்கணமாக உள்ளது. இது எல்லோருக்கும் கல்வியை வழங்குவதையும் சகல பிள்ளைகளினதும் தனியாள் வேறுபாடுகள் அல்லது பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் சமமாக உட்படுத்தலைக் குறிக்கின்றது. இதனை உள்ளடக்கல் எனவும் கூறுகின்றனர். தனது செயற்படுதன்மை சகல மாணவர்களதும் அவர்களது சுய இருப்பிடத்தில் தரமாக கல்வியைப் (Quality Education) பெறுவதற்கான உரிமையை வழங்குவதாக உள்ளது. மாணவர்களது பல்வகைப்பிரச்சினைகள் தன்மைகளுக்கு ஏற்ப பாடசாலை துலங்கி தனது பண்பாடு கொள்கைகள் நடைமுறைகளைச் சீரமைத்து அனைவரையும் சம உரிமையுடன் பாடசாலைக் கல்வியில் உட்படுத்தல் என்ற இலக்கு கொண்டுள்ளது. இதன் இலட்சியத் தன்மை சகல பிள்ளைகளும் தனியார் வேறுபாடுகள் அல்லது பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் உள்ளடக்கப்படல் என்பதாகும். அத்துடன் விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகளை அவர்களுக்குத் தனியான பாடசாலையென இல்லாமல் அவர்களையும் சமூகமயமாக்கி சாதாரண பாடசாலைகளில் பயிலவைக்கும் அதிஉயர் செயற்பாடாகவும் உட்படுத்தல் கல்வி உள்ளது.

சர்வதேச சூழலமைவில் உட்படுத்தல் கல்வி தொடர்பான செயலாற்றுகைகள் முதன்மை நிலையிலுள்ளன. பாடசாலையில் சகல பிள்ளைகளும் சேர்க்கப்படுவதுடன் மட்டுமன்றி முழுமையான பங்குபற்றல் - அடைவினை உறுதி செய்து கல்விக்கான தகைமைகளை இனம் கண்டு நீக்குதல், மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை புரிந்து கற்பிப்பதற்கான விசேட செயலாற்றுகைகளைப் பிரயோகிக்கும் அதிநவீன கற்றல் - கற்பித்தல் தந்திரோபாயமாகவும் உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு விரிவடைந்துள்ளது. அத்துடன் கற்றல் - கற்பித்தலின் தர மேம்பாட்டிற்கான தற்போதைய செயல் ஒழுங்கொன்றினூடாக சகல கற்போரது தேவைகளையும் நிறைவேற்றும் நோக்காயிருத்தல். இவ் உட்படுத்தல் கல்வியானது இன்று முன்பள்ளி ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்சார்கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி, விசேட கல்வி, முறைசாராக் கல்வி, வளர்ந்தோர் கல்வி, ஆசிரியர் கல்வி, கல்வியியலாளர் கல்வி என்பவற்றின் முதன்மை எண்ணக்கருவாகப் பரிணமித்துள்ளது.

**உட்படுத்தல் கல்விக்கான அடிப்படைகள்**

» மனித உரிமைப்பிரகடனம் (1948)

» சிறுவர் உரிமை சமவாயம் (1990)

» சலமன்கா பிரகடனம் (1994)

» புத்தாயிர விருத்தி கல்வியின் உலகப் பிரகடனம் -1990 – ஜோம்தியன்

» கல்விப்பிரகடனம் - டகார் - 2000

» ஊனமுற்ற நபர்கள் தொடர்பான உரிமைகளுக்கான ஐ. நா.சமவாயம் (2006)

உட்படுத்தல் கல்வியின் முதன்மைப்பிரயோகம் பாடசாலை வகுப்பறையில் பாதுகாப்பை ஏற்படுத்தல். இதனூடாக ஒத்துழைக்கும் உறவு முறை ஒன்றினை உருவாக்கவும், ஊக்கங்களை வழங்கவும், கற்றலில் ஆர்வமூட்டவும், அனுபவங்களை பயன்படுத்த வேண்டும். பல்மட்டக் கற்பித்தல், பரிகாரக்கற்பித்தல், பல்தரக்கற்பித்தல், விசேடதேவை உத்திகளையும் முறைமைகளையும் பல பரிமாணங்களில் பிரயோக்கிக்க வேண்டும். வேறுபட்ட கவர்ச்சிகரமான வித்தியாசமான கற்பித்தல் முறைகளுக்கு மாணவன் எவ்வாறு துலங்கல் காட்டுகின்றான் அவன் விரும்பும் முறைகள் எவை என்பதை ஆசிரியர்கள் அறிவதன் மூலம் ஆசிரியர்கள் உட்படுத்தல் திறன்களைப் பெறமுடியும்.

### உட்படுத்தல் கல்வி ஆசிரியர் செயலாற்றுகை

1. மாணவர்களின் அடைவு மட்டத்தினை முறைசாரா முறையில் மதிப்பீடு செய்து தேவையான சந்தர்ப்பங்களில் ஒத்துழைத்தல்
2. ஒவ்வொரு மாணவரதும் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு பாடங்களைத் திட்டமிடல்
3. மாணவர்களின் அடைவுமட்ட எல்லைக்கு பொருந்துகின்ற, படிப்படியாக உயர்ந்து செல்கின்ற பொருத்தமான இலக்குகளை நிர்ணயித்தல்.
4. வகுப்பறையில் சகல மாணவர்களதும் பங்கேற்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஒப்படைகளை மாற்றியமைத்து நடவடிக்கைகளை திட்டமிடுதல்.
5. கற்றலினை நினைவிற்கொள்ளவும் தெளிவாக கிரகித்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் கற்றல் சந்தர்ப்பங்களை திட்டமிடுதல்.
6. மாணவர்கள் பாடசாலைக்கு எடுத்து வருகின்ற அனைத்துவகையான திறமைகளையும் கல்வி ரீதியாக மாத்திரமல்லாது உயர்வாகக் கருதுதல்
7. விளைவினை அனுபவிப்பதற்கு அனைத்து மாணவர்களுக்கும் நாளாந்தம் சந்தர்ப்பங்களை வழங்குவர்.
8. ஒவ்வொரு மாணவனும் தனது முழுமையான உள்ளார்ந்த ஆற்றலுக்கு அமைவாக செயற்படுகின்றனர் என்பதை உத்தரவாதப்படுத்துவது.
9. பெற்றோர்களுடன் கூட்டுறவினை விருத்தி செய்வதுடன் பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றி தனிப்பட்ட ரீதியில் அவர்களுடன் கலந்துரையாடுவர்.
10. அனைத்து மாணவர்களையும் சமமாக மதிப்பதுடன் அவர்களை உயர்வாகவும் கருதுவர்.
11. அனைத்து மாணவர்களும் தாம் வகுப்பறையின் ஒரு பகுதி என தம்மைத்தாமே இனங்கண்டிருப்பதுடன் அவர்களுக்கு அவர்களின் வெற்றியினை வெளிப்படுத்துவதற்கு சமமான வாய்ப்பு காணப்படுகின்றன என்பதனையும் உத்தரவாதப்படுத்துவர்.
12. வழமையான வரவினை கண்காணித்து அதனை உறுதிப்படுத்துவார்.
13. கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிப்பதற்காக உயிர்த்துடிப்பான கல்விக்கு உகந்த சூழல் ஒன்றினை பேணுவர்.
14. விசேட தேவைகள் தொடர்பான நிபுணத்துவ ஆற்றலை ஆசிரியர் பிரயோகிப்பார்.

### உட்படுத்தல்; கற்றல் நேய வகுப்பறையொன்றின் சிறப்பியல்புகள்

» உயிரோட்டமான உற்சாகமான சூழல்.

» அமர்வதில் சிறப்பான ஒழுங்குமுறை, சகல வளங்களையும் கொண்டிருத்தல்.

» பிள்ளைகள் சிந்திப்பதற்கு, கேள்வி கேட்பதற்கு, தேர்ந்தெடுப்பதற்கும் சுதந்திரம் வழங்குகின்ற ஆசிரியர் மாணவர் தொடர்புகள்.

» மாணவர்களை தனிநபர்களாக மதித்து ஒழுக்கத்தினைப் பாதுகாத்தல்.

» அனுபவமூலம் கற்பதற்கு சந்தர்ப்பமும் செயற்பாடுகளும் வழங்கல்.

» கற்றல் தேர்ச்சி மதிப்பீடு, வகுப்பறை மட்டத்திலான மதிப்பீடுகளின் மூலம் மாணவர் கல்வி இலக்குகளை நோக்கி வழி நடாத்துதல் ஆளுமைகளை விருத்தியாக்கல்.

### உட்படுத்தல் கல்விக்கான தடைகளைத் தகர்த்தல்

» சமகாலக் கல்விமுறையில் பல்வேறு வகையான புதிய மாற்றங்களும் இற்றைப்படுத்தல்களும் நடைமுறைக்கு



வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணைகளை கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், அரச சார்பற்ற நிறுவனங்கள் விரிவாக வழங்கத் தொடங்கியுள்ளன. என்றாலும் கூட உட்படுத்தல் கல்வி தொடர்பான விழிப்பணர்வுகள் இன்றும் போதுமானவையாக இல்லை. இதனை நீக்க கல்வித்துறை சார்ந்தவர்களது ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசிய தேவையாகவுள்ளது.

வந்து கொண்டிருக்கும்போது அவை பற்றி அறியாத நிலையில் கல்விப்புலம் சார்ந்தோர் இருப்பதும் கல்வி முறைமையிலும் கொள்கைப் பிரயோகத்திலும் பல்வேறு முரண்பாடுகள் தெளிவின்மைகள் காணப்படுவதும் அதிபர் - ஆசிரியர் பற்றி சமூகம் ஊடகங்களிடையே பொருத்தமான இடை வினைகள் காணப்படாமை, புறக்கணிப்புக்களால் உட்படுத்தல் கல்வியை விரைவாக நடைமுறைப்படுத்தத் தடைகளாகவுள்ளன. இன்றும் கூட பெரும்பாலான பாடசாலைகள் பிள்ளை நேயப்பாடசாலைகளாக (Child – Friendly School) செயற்படாமை, கல்விச் சமூகத்திடம் மனப்பாங்கு விருத்தி போதாமை, கற்றல் பிரச்சினைகள் பின்னடைவுகளைச் சரியாக இனம் காணாமை என்பவற்றுடன்

» கேட்டலில் கஷ்டம், பார்வைக் கோளாறுகள், செயற்பாடு திறன்கள், அவயவங்களில் போதாமை, கை – கண் பார்வை ஒருங்கினைப்புப் பிரச்சினைகள், எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், மொழி – தொடர்பாடல் சிக்கல்கள்,

» விசேட தேவை உள்ளவர்களை சாதாரண வகுப்பறைக்குள் உட்படுத்தும்போது தேவையான மனித – பௌதிக – ஏனைய வசதிகள் போதாமை.

» கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை சமூக – உள்ளார்ந்த தடைகள், மீத்திறன் பிரச்சினைகள், விசேட தேவைகள், அங்கவீனம், உடல் குறைபாடுகள்.

ஆகிய பல காரணிகள் உட்படுத்தல் கல்விப்பிரயோகத்தில் தடைகளை ஏற்படுத்துகின்றன. இத்தனை தடைகளை நீக்கி இனி விசேட கல்வித்துறைக்கே உரித்தான பாடசாலைகளை விடுத்து எல்லாப்பாடசாலைகளிலும் இவ்வாறான மாணவர்களை உட்படுத்தி அவர்களது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் பொறுப்பு இன்று பாடசாலைகளிடம்

### உட்படுத்தல் கல்வியின் நடைமுறை

தற்போதைய மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களைத் தகர்த்தெறிதல், சகல மட்டங்களிலும் விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் விருத்தி செய்தல், ஆசிரியருக்கான ஒத்துழைப்பை வழங்குதல், பொருத்தமான கற்றல் மற்றும் பயிற்சி முறைமைகளை அளித்தல், கற்பித்தல் நடைமுறையினுள் பயிற்சி இடமாற்றத்தை உறுதிப்படுத்தல், பெருமளவான நவீன கருவிகள், வளங்கள், உபகரணங்களை வகுப்பறைக்குள் கொண்டுவருதல், நெகிழ்வான கற்போன் சிநேக சூழல் ஒன்றை விருத்தி செய்தல், பாடசாலைகள் தமது சுய விருத்திக்கான பொறுப்பினை வகிப்பதுடன் தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான ஒரு பண்பாட்டையும் விருத்தி செய்தல், சகல பாடசாலைகளுக்குமான ஒரு தெளிவான நியமங்களை உருவாக்குவதுடன் அவற்றை அடைவதில் பாடசாலைகளை அனுமதிக்கும் வகையில் கருவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குதல் என்ற வகையில் விரிவாக்கப்படவேண்டும். இதற்குத் தேவையான வளங்களையும், பயிர்களையும் முன்னெடுப்பதற்குப் பல அர்ப்பணிப்புக்களை கல்வித் துறையில் நாம் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

# கல்வி என்றும் நடுநிலையானதல்ல

தமிழில் - பேராசிரியர் இ. தென்னவன்

170 மீட்டர் நீளம், 60 செண்டிமீட்டர் அகலம் கொண்ட கொடுஞ்சிறைக் கொட்டடியில் அந்த மனிதன் சிந்தித்து கொண்டிருந்தான். தான் பிறந்த நாட்டில் தன் குடிகளுக்கான எழுத்தறிவு இயக்கத்தில் 30 நாளில் சுமார் 500க்கும் அதிகமான கரும்பு விவசாயிகளுக்கு எழுத்தறிவித்ததுதான் அம்மனிதர் செய்த குற்றம். எழுத்தறிவித்ததற்காக நாடும் கடத்தப்பட்ட அம்மனிதர் பிரேசில் நாட்டு கல்வியாளர் பாவ்லோ பிரையரே. "இன்றைய கல்வி முறை எடுத்துக்கூறுதல் என்னும் நோயால் அவதியுறுகிறது? என்றவர். மூன்றாம் உலக நாடுகளில் மாற்றுக் கல்விக்கான தந்தை எனவும் இவர் புகழப்படும் இவரது கூற்று, இன்றும் உண்மையாக இருக்கிறது, வெளிவந்த சில ஆண்டுகளிலேயே 13 மறுபதிப்புகள், ஏழரை இலட்சம் பிரதிகள் என விற்றுத் தீர்ந்து இன்று பொன்விழாவை எட்டும் ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான கல்வி முறை (PEDAGOGY OF THE OPPRESSED) என்னும் நூலாசிரியர். இந்நூல் மாற்றுக் கல்வி வேண்டுவோரின் வேத நூல் என்று வர்ணிக்கப்படுகிறது.

இன்றைய கல்வி முறையில் ஆசிரியர் பேசிக் கொண்டேயிருப்பார். மாணவர்கள் கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். ஆசிரியருக்கு எல்லாம் தெரியும். மாணவனுக்கு எதுவும் தெரியாது. ஆசிரியர் சிந்திப்பவர். மாணவர் சிந்திக்க வைக்கப்படுபவர். மாணவன் எதைச் சிந்திக்க வேண்டும் என்பதை ஆசிரியரே தீர்மானிப்பார். ஆசிரியர் தகவல் களஞ்சியம், அதனைத் தவணை முறையில் பெறக் கடமைப்பட்டவர் மாணவர். மாணவனின் சிந்தனைத் திறனுக்கும், படைப்பாற்றல் திறனுக்கும், கேள்வி கேட்கும் மனப்பாங்குக்கும் இன்றைய கல்வி முறை எதிரானது. உரையாடலுக்கு இடம் கொடாதது. இதனால் வகுப்பறைகளில் ஒரு மௌனம் குடிகொண்டிருக்கிறது. இந்த மௌனம் ஒரு கலாச்சாரமாகவே உருவெடுத்துவிட்டது. ஒழுங்கின் வடிவமாகவும் உள்ளது. இவ்வாறு அமைந்துள்ள வகுப்பறைகளில் கொடுங்கோலாட்சியே நடைபெறும். இன்றைய கல்வி முறை "வங்கி கல்வி முறை கல்வியாக" உள்ளதன் விளைவு இது என்கிறார் பாவ்லோ பிரையரே. வங்கியில் எவ்வளவு பணம் ஒருவர் வைத்திருக்கிறாரோ, அவ்வளவு பணமே அவர் எடுக்க முடியும். அது போல் ஆசிரியர், தான் சேகரித்து வைத்துள்ள தகவல்களை எடுத்துக் கூறுதல் மட்டுமே அவரது கடமை. எந்த அளவு மாணவனுக்கு சென்று சேர்கிறது என்பதற்கு இதில் எந்த உத்தரவாதமும் இல்லை. மொத்தத்தில் இன்றைய கல்வி ஒரு ஒடுக்குமுறைக்கான கருவி" என்றார் அவர்.

இன்றைய கல்வி முறையின் மீது கடும் விமர்சனங்களை மட்டும் வைத்தவர் அல்ல, அவர். அதற்கு ஓர் மாற்றத்தையும் முன் வைத்தவர். அதற்காக கடுமையாக உழைத்தவர் கள ஆய்வுகளையும் மேற்கொண்டவர். பிரேசில் நாட்டின் கல்வி கற்றிராத கரும்பு விவசாயி களிடம், உரையாடல் வழியாக, சிந்திக்கத் தூண்டும் எழுத்தறிவினை எப்படிப் போதிப்பது என்றும் கண்டறிந்தார். தனது மாற்றுக் கல்வி முறைக்கு "பிரச்சனை அடிப்படையிலான கல்வி முறை (Critical pedagogy)" என பெயரிட்டார்.

**கல்வி என்றும் நடுநிலையானதல்ல - பாவ்லோ பிரையரே**

பிரையரேவின் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர் உறவுமுறை கூட அடிப்படையிலேயே வேறுபடுகிறது. இக்கல்வித் திட்டத்தில் ஆசிரியர் பாடம் நடத்துபவராகவும், மாணவர் அதை கேட்பவராகவும் இருக்க முடியாது. மாறாக இருவரும் இணைந்து ஒரு பிரச்சனைக்கு தீர்வை தேடுவர். வகுப்பறைக்குள் எடுத்து இயம்புதல் என்பதற்கு பதிலாக, கலந்துரையாடல் நிகழும். இதில் ஆசிரியர் மாணவராகவும், மாணவர் ஆசிரியராகவும் இருப்பார். ஆசிரியர் தன்னைத்தானே 50 விழுக்காடு தற்கொலை செய்து கொண்டு, மாணவராக விளங்க வேண்டும். மாணவரும் 50 விழுக்காடு ஆசிரியராக இருக்க வேண்டும். ஆசிரியர் என்பவர் வெறும் ஆசிரியர் அல்ல, ஆசிரிய – மாணவர். அதே போல மாணவனும், மாணவ - ஆசிரியனே. இத்தகைய வகுப்பறையில் அதிகாரம் இற்று வீழவும், தோழமை கோலோச்சவும் காணலாம். கற்பித்தலும் - கற்றலும் வேறு வேறு நிகழ்வாக இல்லாததையும் காணலாம். இத்தகைய வகுப்பறையில் மௌனக் கலாச்சாரம் இயல்பாக உடைபடும். மௌனக் கலாச்சாரம் நொருங்கும் இடத்திலிருந்தே கற்றல் தொடங்கும் என்கிறார் பாவ்லோ பிரையரே. மௌனக் கலாச்சாரம் உடைபடும் புள்ளியில்தான் வகுப்பறை சுதந்திரக் காற்றை சுவாசிக்கவும், அன்னியத்தன்மை, பயம் நீங்கவும் பெறும்.

பாவ்லோ பிரையரேவின் 15 ஆண்டு கடும் உழைப்பில் உருவான பிரச்சினை அடிப்படையிலான கல்வி முறைதான் உலக எழுத்தறிவு இயக்கத்திற்கு வித்திட்டது எனலாம். உலகின் பல நாடுகளின் எழுத்தறிவுக்கான சட்டங்கள் இயற்றப்படக் கூட இவரது ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான கல்வி முறை நூல் அடிப்படையாக அமைந்தது. தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கம் பற்றிப் படரவும் கூட பாவ்லோ பிரையரேவின் கல்வி முறை பயன்பட்டது. எழுத்தறிவு அற்ற மக்களிடம், "பட்டா படி" போன்ற எளிமையாக எழுதக் கூடிய, வாசிக்க கூடிய, அவர்களது வாழ்க்கையோடு ஒட்டிய விழிப்புணர்வை தூண்டக் கூடிய வார்த்தை வடிவமைப்புகளுக்கு பிரையரேவே வெளிச்ச ரேகைகளைப் பாய்ச்சினார்.

நம்மில் பலரும், நமது கல்வி முறை நடுநிலையோடுதான் இருக்கிறது, ஆசிரியரும் நடுநிலையோடுதான் இருக்கிறார் என நம்பிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் "கற்றல் ஒரு அரசியல் செயல்பாடு. ஆசிரியர் நடுநிலையோடு இருக்க முடியாது" என ஓங்கி ஒலித்தவர். அதுமட்டுமல்லாது அறிதல் என்பதும் ஓர் அரசியல் செயல்பாடுதான் என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்தியாவிற்கு ஒரு முறை வந்திருந்த அவரிடம் அதுபற்றிக் கேட்டபோது ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கினார். "ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கணக்குப் பாடத்தில் பயிற்சி அளிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம் உன் கையில் ரூ.100 இருக்கிறது. அதை வங்கிக் கணக்கில் போட்டு வைக்கிறாய். 3 சதவீத வட்டிக்கு 6 மாதம் வங்கியில் போட்டு வைத்தால், ஆறு மாதம் கழித்து எவ்வளவு பணம் கிடைக்கும்" என்கிறார். இந்தக் கணக்கின் மூலம் முதலாளித்துவ பொருளாதார முறைமையையும் சேர்த்துத் தானே சொல்லித் தருகிறீர்கள் என கேட்டார். ஆசிரியர் ஒரு கலாச்சார செயல்பாட்டாளர் என்பதையும் வலியுறுத்தி "TEACHERS ARE CULTURAL WORKERS" என்ற நூல் ஒன்றையும் எழுதினார்.

எழுதுதல், வாசித்தல், மறுவாசிப்புச் செய்தல், எழுதியதை மீண்டும் திருத்தி எழுதுதல் என்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளித்தவர் பாவ்லோ பிரையரே. இன்றைக்கும் பலர் வகுப்பறையில் சிற்சில உரையாடல்கள் நிகழ்த்துவதையோ, நகைச்சுவையை அள்ளித் தெளிப்பதையோ, ஆரோக்கியமான உரையாடல் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம், பாவ்லோ பிரையரே சொன்ன வழி எனக் கூறிக்கொண்டும் இதே வழியான செயல்பாடுகளை அரங்கேற்றுகின்றனர். இவை இரண்டுமே பாவ்லோ பிரையரே முன்மொழியும் உரையாடல் வழிமுறையல்ல. ஒரு குறிப்பிட்ட பொருளை அல்லது பிரச்சினையை எடுத்துக் கொண்டு, ஆரோக்கியமான கலந்துரையாடல் வழியாக இலக்கு மாறாமல் அடுத்த அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்வதே பிரையரே முன்வைக்கும் உரையாடல்.

தமிழ்நாட்டில் பாவ்லோ பிரையரேயும் அவரது கோட்பாடுகளையும் அறிந்திருப்போர் மிகவும் குறைவுதான். பாவ்லோ பிரையரேவின் கல்வி சிந்தனைகள் மனசாட்சி உள்ளோரைப் பிடித்து உலுக்குவன. சிலவற்றை ஆசிரியர் நினைத்தால் உடனடியாக நடைமுறைப் படுத்த முடியும். சிலவற்றை நடைமுறைப்படுத்த ஒத்த கருத்துள்ளோரிடம் விவாதம் தேவைப்படும். சிலவற்றை தற்போது இருக்கும் அரசாங்கங்களை நடைமுறைப்படுத்தலாம். சிலவற்றை அரசுகளும் கொள்கைகளும் மாறினாலே நடைமுறைப்படுத்த முடியும்.

பாவ்லோ பிரையரே வழியில் ஆரோக்கியமான உரையாடல் மூலம் வகுப்புகளை எப்படிக் உயிரோட்டமாக மாற்றுவது என்பதற்கு ஒரு பெரும் வழிகாட்டி நூல் பேரா.ச மாடசாமியின் "எனக்குரிய இடம் எங்கே" என்னும் ஒரு நூல். தமிழாசிரியராக தனது வாழ்நாள் பயிற்சியின் அனுபவ சாரத்தை தொகுத்துக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு பாடத்திற்கும் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என பாடவாரியாக கூடி விவாதிக்க வேண்டும். கையேடுகள் தயார் செய்யப்பட வேண்டும். அல்லது இதில் ஆர்வம் உள்ளவர்கள் இந்த நடைமுறையை அமுல்படுத்தி வருபவர்கள் மாடசாமியைப் போல் எழுதத் தூண்ட வேண்டும்.

கல்வி முறையை முற்றாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற நோக்கில் இல்லாமல் குழந்தைகளை மையப்படுத்திய கல்வியை பல அமெரிக்க கல்வியாளர்கள் முன்னிறுத்தினர். ஆனால், அத்தகைய கல்வி முறை, விவாதம் மூலம் ஆட்சி அதிகாரத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் பாவ்லோ பிரையரே முன்மொழிந்த கல்வி முறை கல்வி சிந்தனைகள், விவாதங்கள் வழியே பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களுக்கு பிரையரேவின் கல்விச் சிந்தனைகளும் கூட ஒரு காரணம் என்கிறார்கள். இயற்பியல் உலகை எப்படி ஐன்ஸ்டீனுக்கு முன், பின் என பிரித்தல் இயலுமோ, அவ்வாறே கல்வி சிந்தனைகளையும் பிரையரேவுக்கு முன், பின் என பிரிக்கலாம்.

கஞ்சி குடிப்பதற்கிலார், காரணம் இதுவென்னும் அறிவிலார் என்னும் நம் பாரதியின் ஏக்கப் பெருமூச்சிற்கு விடை காணும் அவரது புரட்சிகர கல்வி சிந்தனைகளை நடைமுறைக்கு கொண்டுவருதல் சாத்தியமா என அவரையே கேட்டபோது "நாம் நடந்து நடந்தே சாலை அமைத்துவிட முடியும்" என பாவ்லோ பிரையரே கூறினார். "எழுத்து என்பது அரசியல் திட்டம் சார்ந்த பணி" என்று வாழ்நாள் முழுவதும் கொண்டிருந்த பாவ்லோ பிரையரே பிறந்தது, 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 19.

# சில நினைவுகள்... கண்டுபிடிப்பது சுலபமல்ல

பேராசிரியர் ச. மாடசாமி

அது ஒரு பாரம்பரியமான பள்ளி. தொடங்கி 50 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் அங்கு படித்தார்கள். ஏறக்குறைய நூறு ஆசிரியர்கள் பணியில் இருந்தார்கள். அந்த ஆசிரியர்கள் மத்தியில் பேச ஒரு நாள் அழைப்பு. போயிருந்தேன்.

கட்டுதிட்டங்கள் கூடுதலாக இருந்தன. ஆசிரியர் முகச் சலனங்கள் குறைவாக இருந்தன. நடப்பது நடக்கட்டும் என உரையாடினேன். உரையின் இறுதியில் ஒரு கேள்வியை முன் வைத்தேன். ”சட்டென்று நம் எதிரே வந்து நிற்பார்கள். நம் கவனத்தைக் கவர்வார்கள். அந்த மாணவர்களைக் கண்டுபிடித்து விடுவோம். கண்பார்வையில் இருந்து விலகி தூரமாய்ப் போய் நிற்பார்கள் பலர். அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி நீங்கள் கண்டுபிடித்த மாணவர் யார்? அவரைப் பற்றி இக் கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்” என்றேன்.

உடனே எழுந்தார் ஒருவர். ஐந்தாம் வகுப்பு மாணவன் ஒருவனிடம் இருந்த அபூர்வமான கலைத்திறன் தன் கவனத்துக்கு வந்த விதத்தை விளக்கினார். ரசித்தேன். சிறு நோட்டைத் திறந்து வைத்துக் கொண்டு அடுத்தவரின் அனுபவத்தைப் பதிவு செய்யக் காத்திருந்தேன். அடுத்தவரை எழுப்ப ‘சொல்லுங்க! சொல்லுங்க!’ என்று கேட்டு நெக்குருக வேண்டியிருந்தது. இருவர் எழுந்தார்கள். கேட்டுக் கொண்டதற்காகப் பேசினார்கள். கடைசியாக ஒருவர் எழுந்து வேறு தளத்துக்கு உரையாடலைக் கொண்டு போனார். அதற்குப் பிறகு யாரும் எழவில்லை. நோட்டை மூடி வைத்துவிட்டு ஏமாற்றத்தைக் காட்டாமல் ’கூட்டத்தை முடிக்கலாம்’ என்றேன். உடனே கூட்டம் புத்துயிர் பெற்றது. காற்று வீசியது. முகங்களில் பரவச அலைகள்!

ஆசிரியர்களைச் சொல்லிக் குற்றமில்லை. கல்விக்கூடங்களில் ’கண்டுபிடிப்பு’ – உணர்வுப் பூர்வமாகவும் நடக்கவில்லை திட்டமிட்டும் நடக்கவில்லை. யாருக்கு எது ஞாபகத்துக்கு வரும்? ஒருவேளை வீட்டுக்குப் போனதும் ஞாபகத்துக்கு வரலாம். என் பணிக்காலத்தில் நட்சத்திரங்கள் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் சில ஞாபகத்துக்கு வந்தன.

1990களில் அறிவொளிக்கும் கல்லூரிக்குமாய் அலைந்து கொண்டிருந்தேன். அறிவொளி மையத்தின் கலகலப்பான சூழலை கல்லூரி வகுப்பறைக்குள் கொண்டுவரப் பாடுபட்டேன்.

ஒருமுறை சக ஆசிரியை என்னிடம் சவால்விட்டார். ”செகண்ட் பிஎஸ்சி பயாலஜி கிளாஸ்ல அகிலான்னு ஒருத்தி இருக்கா. அவளப் பேச வச்சுப் பாருங்க சார்” என்றார். சவாலை ஏற்றேன்.

சாப்பாடு முடிந்ததும் தொடங்குகிற வகுப்பு அது. வகுப்பறையில் தூக்கச் சொக்கு இருக்கும். அதை முதலில் கலைக்க வேண்டும். சிறுசிறு கேள்விகளைத் துண்டுத் தாள்களில் எழுதி உருட்டி சட்டைப்பையில் போட்டு வைத்திருந்தேன். (ராமானுஜம் அவர்களிடம் இந்த உத்தியைக் கற்றதாக ஞாபகம்). பைக்குள் கைவிட்டு ஒரு சீட்டை எடுத்து ஒரு மாணவரிடம் கொடுப்பேன். கேள்வியை வாசித்துப் பதிலையும் சொல்ல வேண்டும். கேள்விகள் பலவிதமாக இருக்கும்.

அகிலா யார் என்று வருகைப் பதிவின் போதே கவனித்து வைத்திருந்தேன். துண்டுச் சீட்டைப் பெற்ற மாணவர்கள் சரியாகவோ தப்பாகவோ பதில் சொல்லி வகுப்பை உற்சாகமயமாக்கி இருந்தார்கள். சட்டென்று அகிலா முன்னால் போயொரு துண்டுச் சீட்டை நீட்டினேன். யாருக்கும் துண்டுச் சீட்டு தரும் அதிகாரம் ஆசிரியரிடம் இருந்தது.

சீட்டை வாங்குவதற்கே மாணவி தயக்கம் காட்டினாள். பிறகு பயந்து வாங்கினாள்.

“ஒரு கல்யாண வீட்டுக்குப் போகிறாய். வரதட்சணைப் பிரச்சினை காரணமாகக் கல்யாணம் நின்று போகிறது. மணமகளுக்குத் தாலி கட்டாமல் எழுகிறான் மணமகன். அவனோடு பேச உனக்கொரு ஐந்து நிமிடம் கிடைக்கிறது. என்ன பேசுவாய்?” இது அகிலாவின் சீட்டில் இருந்த கேள்வி.

அகிலா மௌனம் காத்தாள். கைகள் வியர்த்திருந்தன.



முதலில் கேள்வியை வாசி என்றேன். தட்டுத் தடுமாறி வாசித்தாள்.

"இப்பச் சொல்லு! என்ன பேசுவே?"

அகிலாவிடம் எந்த அசைவும் இல்லை. மௌனம். வகுப்பறைக்கு இது ஒரு விதமான சுவாரஸ்யம். எனக்கு மட்டும் அவஸ்தை.

இந்தக் கேள்விக்கு எந்தப் பெண்ணும் குமுறிப் பேசுவாள் எனப் பொத்தாம் பொதுவாக நான் நம்பி இருந்தேன். என் நம்பிக்கை தப்பு.

நேரம் நகர்ந்தது. அகிலா வாயைத் திறக்கவே இல்லை. இது மாதிரிச் சிக்கலான தருணங்களில் இருந்து விடுபட என்னிடம் வார்த்தைகள் இருந்தன.

"சரி! பரவாயில்ல! இப்ப சொல்ல முடியலைன்னா யோசிச்சு இன்னொரு நாள் சொல்லு!" என்று சங்கடத்தை முடிவுக்குக் கொண்டு வந்தேன். வகுப்பைத் தொடர்ந்தேன்.

மாலையில் தமிழ்த் துறை வாசலில் அகிலா.

ஆச்சர்யமாக இருந்தது. 'என்னப்பா' என்றேன். ஒரு ஃபைலை நீட்டினாள். வாங்கிப் பார்த்தேன். பென்சிலால் வரைந்த ஓவியங்கள் சில இருந்தன. "நீ வரைந்ததா" என்றேன். தலையாட்டினாள். "நல்லா இருக்கே! பாத்துட்டு நாளைக்குத் தரட்டுமா?" என்றேன்.

உடனே திருப்பித் தராமல் வைத்திருக்கிறேன் என்று சொன்னது அகிலாவுக்கு மகிழ்ச்சி அளித்திருக்க வேண்டும். "சரி சார்" என்ற வார்த்தைகளில் உயிர் நிறைந்திருந்தது.

அகிலா போனதும் அந்தச் சித்திரங்களைப் பார்த்தேன். சித்திரங்கள் பேசின.

"பேசுவது மட்டும்தான் திறமையா?"

"ஒவ்வொரு திறமையையும் பேச்சின் வழி மட்டுமே அறிவீர்களா?"

"ஓவியம் வரையத் தெரிந்தவர்களுக்கு உங்கள் வகுப்பில் இடமெங்கே?"

மனசுக்குள் இப்படியெல்லாம் அகிலா குமுறியிருக்க வேண்டும். மணமகனைப் பார்த்துத்தான் குமுற வேண்டுமா என்ன?

மறுநாள் அகிலா வந்தாள். என் கருத்தறிய ஆர்வமாக இருந்தாள். என்னிடம் வார்த்தைகள் வளர்ந்ததே இவர்கள் காட்டிய ஆர்வத்தால்தான்.

"ரொம்ப நல்லாருக்கு. இந்த ஓவியங்களுக்கு எல்லாம் வண்ணம் தீட்ட முடியாதா?" என்றேன். "அது மாதிரியும் நிறைய வச்சிருக்கேன்" என்றாள் அகிலா உற்சாகமாக.

மறுநாள் வண்ணந்தீட்டிய படங்களையும் அள்ளி வந்தாள். பிரமித்தேன். எவ்வளவு உழைப்பு?

வகுப்பறையில் கவியரங்குகள், கருத்தரங்குகள், நாடகங்கள், விளையாட்டுகள் என தினம் நடத்தினேன். ஓர் ஓவியக் கண்காட்சி நடத்தவில்லையே என்று வருந்தினேன்.

அவ்வப்போது "குட்" சொல்லி "சரி! பாப்போம்" என்று விலகிப்போகிற வழக்கத்தை மாணவர்களிடம் நான் கடைப்பிடிப்பதில்லை.

மாணவி வரைந்திருந்த வண்ண ஓவியங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து "இதைப் பத்திரிகைக்கு அனுப்பலாமா?" என்றேன். சந்தோசம் மின்ன தலையாட்டினாள். "பத்திரிகைன்னதும் தினத்தந்தி, தினமலர்னு நெனைக்காதே! இது நம்ம பத்திரிகை" என்றேன்.

அந்த ஓவியத்தைத் துளிர் பத்திரிகைக்கு அனுப்பினேன். துளிர் பின்னட்டையில் அந்த ஓவியம் வந்தது. மாணவியின் பெயர், வகுப்பு, கல்லூரி எல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தன.

எங்கள் கல்லூரியைப் பொறுத்தமட்டில் இது பெரிய சாதனை. அகிலாவை வியந்து பார்த்தனர்.

தாழ்ந்து கிடந்த கொடி உயர்ந்து பட்டொளி வீசிப் பறந்தது.

# கல்வியும் சிறுவர் உரிமையும்

### கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள்

மனிதர்களின் சிறந்த வாழ்கைக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாக கல்வி காணப்படுகின்றது. எனவே இக் கல்வியும் கல்வியின் முக்கித்துவம் பற்றியும் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள அறிஞர்கள் காலத்துக்குக் காலம் பல சிந்தனைக் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இக் கல்வியின் முக்கித்துவத்தினை உணர்ந்து உலகிலுள்ள நாடுகள் இதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

» கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ (கிமு 428 – 348 ) என்பவர் "உண்மை, நன்மை, அழகு இம் மூன்றினையும் உணர்த்தும் கல்வியே கல்வி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

» அமெரிக்க கல்வி அறிஞரான ஜோன் டுயி (1859 – 1952 ) பிள்ளைகளுக்குரிய சூழலையும் அங்கு வாழ்வதற்கு உதவும் அனுபவங்களையும் பெற்றுக் கொடுத்தல் கல்வியாகும் என்றார்.

» அறிவுப் புரட்சியை ஏற்படுத்திய 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜின் ஜாக்ஸ் ரூசோ (1712 - 1778) "கல்வி இயற்கைக்கேற்ப விருத்தியடையும் செயற்பாடு" என்றார்.

» பெஸ்டலாசி (1746 – 1827) என்ற அறிஞரின் வரைவிலக்கணமானது "கல்வி என்பது மனிதனது எல்லாத் திறன்களும் வன்மைகளும் இயல்பாகவும் படிப்படியாகவும் இசைந்து வளர்ச்சி பெறுதலே ஆகும்" என்பதாக அமைகின்றது.

» அதே போன்று அமெரிக்க கலைக்களஞ்சியம் கல்வி பற்றி குறிப்பிடுகையில் "மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமை பெற்ற நிறைவினை மலரச் செய்வது கல்வியாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

» ஆன்மீக ரீதியாக கல்வியை நோக்கிய சுவாமி விவேகானந்தர் அவர்கள் "மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமை பெற்ற நிறைவினை மலரச் செய்து கல்வியாகும்" என்று குறிப்பிடுகின்றார்.

» கல்வியியல் அறிஞரான பிரொபெல் "குழந்தையின் இயல்பான செயல்களிலிருந்து தொடங்கும் கல்வியே அதன் நல்லொழுக்கத்தின் உண்மை வளர்ச்சிக்கு வழி செய்யும்" என்றார்.

» மெட்டின் என்பவர் "கல்வி என்பது முதியோர் இளையோர் மீது செலுத்தும் செல்வாக்கு" எனக் கூறுவார்.

» தொம்சன் என்பவர் கல்வி பற்றி கூறும் போது "ஒரு தனியாளின் வாழ்கையில் நடத்தை, சிந்தனை, மனபாங்கு என்பனவற்றில் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தும் சூழல் செல்வாக்கே கல்வி" என்றார்.

» மகாத்மா காந்தி கல்வி என்பது உள்ளிருந்து வெளியே வருவதன்றி பிள்ளையினுள்ளே செலுத்துவது அன்று என தெளிவாக கூறுகிறார்.

மேலே கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் முழுவதையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கல்வி என்பது ஓர் ஆய்வு என்ற முடிவுக்கு வரலாம். ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் அறிந்து கொள்ள துணை நிற்பது கல்வி ஆகும். தான் வாழும் சமூகத்தையும், அதன் பாரம்பரியத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் ஆராய்ந்து உணரவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் கல்வி பயன்படுகின்றது. சுருக்கமாக கூறுவதானால் சமுதாயம் காண விளைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்விப் பயனாகும்.

### இலங்கையில் கல்வி

"எல்லோருக்கும் கல்வி" என்பது இன்று பரவலாக பேசப்படும் ஒரு பொருள். யாவருக்கும் ஆரம்பக் கல்வி, யாவருக்கும் இடைநிலைக்கல்வி என்ற நிலைகளினூடாக இக் குறிக்கோளை அடைவதற்குரிய முயற்சிகள் பல நாடுகளிலும்



மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாமல் செய்தல் பொருட்டு யாவருக்கும் எல்லா மட்டங்களிலும் கல்வியைப் பெறுவதற்குரிய சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என நாட்டின் அரசியலமைப்பில் 27 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் மொத்தமாக 10590 பாடசாலைகள் உள்ளன. இதில் 20.3 சதவீதம் உயர் தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாகும். மொத்த பாடசாலையில் 40 சதவீதம் 1 முதல் 5 வகுப்புவரையிலானது. இதில் ஏறத்தாழ மூன்றில் ஒரு மாணவர்கள் கற்கின்றனர். இலங்கையில் மொத்த ஆசிரியர்கள் எண்ணிக்கை 180000 ஆகும். 1996 இல் இலங்கையில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 42 இலட்சமாகும். இதை விட அண்ணளவாக 7 இலட்சம் மாணவர்கள் பாடசாலையை எட்டிப் பார்ப்பதில்லை. பாடசாலை செல்வோரில் 1 முதல் 5ஆம் வகுப்புவரை 19 லட்சம் மாணவர்கள் கற்கின்றனர். 6 முதல் 11 வரை 21 இலட்சமும், 12 முதல் 13 வரை 2 லட்சம் மாணவர்களே கல்வியை தொடர்கின்றனர். 97 சதவீதமானவர்களுக்கு உயர்தரக் கல்வி மறுக்கப்படுகின்ற நிலையில் எமது கல்விக் கொள்கை காணப்படுகின்றது.

1991, 1992, 1993 இல் 5ம் வகுப்பு புலமைப் பரீட்சையை ஆராயின் எமது கல்வியின் அவலத்தைக் நாம் காணமுடியும். 10 முதல் 17 சதவீதமானோர் 100க்கு 10 குறைவான புள்ளிகளைப் பெற்றனர். அதாவது 1991 இல் 3800 பேர் 100க்கு 10 குறைவான புள்ளிகளையே பெற்றனர். 1991 இல் 86000 பேர் 100 க்கு 20 குறைவான புள்ளியையே பெறுகின்றனர். 1991 இல் 150000 பேர் 100க்கு 40 குறைவான புள்ளியையே பெற்றனர். கல்வி கற்கும் மாணவனின் கல்வித் தரம் மிகவும் ஒரு கீழான நிலையில் காணப்படுகின்றது. பரீட்சைக்காக கற்கும் கல்வியே இந்த அவலம் என்றால் கல்வியின் வீழ்ச்சி பிரமாண்டமானது.

எமது சமூக பொருளாதார வாழ்வுடன் தொடர்பற்ற கல்வி வகுப்பறைகளின் திணிக்கப்படும் பொது குழந்தை திணறுகின்றது. இந்த திணிப்பு அதிகாரம், அடக்குமுறை, பணிவு என்ற வடிவில் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. குழந்தையின் இயல்பான உற்சாகமாக அறிவதில் உள்ள ஆர்வத்திற்கு புறம்பாக மூளையில் புகுத்த முயற்சிக்கும் போது அவலம் தவிர்க முடியாது. இக்கல்வி முறைமையினாலும் கூட பெரும் தொகையான சிறுவர்கள் இலங்கையில் இடைவிலகுகின்றனர்.

### மனித உரிமையில் கல்வி

உலகில் 774 மில்லியன் வளர்நதவர்கள் எழுத வாசிக்க முடியாதவர்களாக உள்ளனர். 75 மில்லியன் பிள்ளைகளுக்கு ஒரு போதும் பாடசாலை செல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எழுத வாசிக்க தெரியாததால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வறுமையில் சிக்குண்டு வாழ்கையினைப் பாதுகாத்துக்கொள்ள



முடியாத நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் ஆவர்.

ஐ.நா பொதுச்சபையின் பிரகடனமானது மனித உரிமைகளின் உறுப்புரை 26 (1), (2) இல் கூறப்பட்டுள்ளவாறு ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமை, ஆரம்பக் கல்வியின் அவசியம், கல்வி மனிதனது ஆளுமைவிருத்தியில் முழுமையாக வியாபித்து உள்ளது. ஐ.நா சிறுவர் உரிமைகள் சாசனம் 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என்றும் உறுப்புரை 28 சிறுவர்களின் கல்வி உரிமையையும் வலியுறுத்துகின்ற போதிலும் இலங்கையில் 5 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி வழங்கப்பட்ட போதிலும் கூட மேற்குறித்த சம்பவங்கள் சிறுவர்கள் நடைமுறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துகின்றன. இத்தகைய சிறுவர் கொலைகள் சம்பவங்களுக்கு சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துதலும், வறுமையும் பொருளாதார நெருக்கடியும் காரணம் என்று கூறலாம்.

**சிறுவர்களின் கல்வி உரிமை**

சிறுவர்களின் கல்வி பெறுவதற்கான உரிமை பற்றிய சரத்து 28,29 களில் கூறப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் சமவயத்தின் சரத்து 32 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தம் ஆரோக்கியம், கல்வி வளாச்சி என்பனவற்றின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாய் அமையக் கூடிய வேலைகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைக்குண்டு.

இலங்கையின் கல்விக் கொள்கையாக சிறுவர்கள் என்ற பதினான்கு வயதிற்குட்பட்ட சகலருக்கும் கட்டாயக் கல்வி வழங்கப்படவேண்டுமென்று உள்ளது. அதே போன்று அவ் வயதிற்குட்பட்ட பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதும் குற்றமென்று சட்ட விதி கூறுகின்றது. அறிக்கைகள், விழாக்கள், கொண்டாட்டங்கள் நடத்தப்படும் சிறுவர் உரிமை தினத்திலே இலங்கையில் சகல சிறுவர்களும் தமக்குரிய அடிப்படை உரிமைகளை இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுதல் என்பது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்று சொல்லப்படுகின்றது. சிறுவர் உரிமைகள் பற்றி பேசப்படுகின்ற போதிலும் கூட இன்று பலகாரணங்களால் சிறுவர்கள் பல இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர். கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய கல்வியும் கூடப் பாதிப்படைகின்றது. இன்று பாடசாலைகளை விட்டு இடைவிலகுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை பல்வேறுப்பட்ட அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கின்ற போதிலும் சில காரணங்களினால் மாணவர்கள் இடைவிலகும் வீதம் குறைந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் சிறுவர்களுக்கு எதிரான உரிமை மீறல்களுக்கு வடக்குக் கிழக்கில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் துன்ப துயரங்கள் வார்த்தைகளால் விபரிக்க முடியாது. குறிப்பாக பெருந்தோட்டக் கிராமங்களில் வாழும் பொருளாதாரப் பின்னடைவுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி விட்டு செல்வந்த வீடுகளுக்கும் கடைகள் போன்ற பல இடங்களுக்கு வேலைக்கு அனுப்புகின்றனர். பெருந்தோட்டங்களில் கடந்த 5 வருடங்களுள் ஹட்டன் வெலிஓயா தோட்ட சிறுவன் அர்ச்சுனன் லோகநாதன், பத்தனை போகவத்தை புவனேஸ்வரன லிங்கேஸ்வரன், கெட்டபுலா கிருஸ்ணவேணி ,மஸ்கெலியா லக்சபான சென் அன்றூஸ் தோட்ட சிறுமியர் ஜீவராணி, சுமதி ஆகியோர் வீட்டு வேலைக்கு சென்று மரணமடைந்த சம்பவங்கள் மலையகத்தில் சிறுவர் தொழிலாளர்களின் நிலையைப் பறைசாற்றுகின்றது.

*நன்றி - இணையம்*

# மாணவர்களின் ஆளுமை விருத்தியில் தொடர்பாடல் திறன்

(Communication Skills in Personality)

A. குகன்
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

அறிவோடு சேர்த்து ஆளுமையையும் விருத்தி செய்ய வேண்டும் என மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். ஆளுமை விருத்தி தொடர்பில் பன்நெடுங்காலமாகப் பேசப்பட்டு வருகின்ற போதும் இன்று அதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் மத்தியில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இன்றைய வேலைத்தளங்களிலும் சமூகத்தளத்திலும் அறிவால் மாத்திரம் தலையை நிரப்பியவர்களைவிட நல்ல ஆளுமைப் பண்புகளை நிரம்பப் பெற்றவர்கள் அதிகம் வரவேற்கப்படுகின்றனர். ஒரு காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற வெறும் கல்விச் சான்றிதழ் தகைமைகள் எதிர்பார்க்கப்பட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட போதிலும் இன்று ஆளுமைப் பண்புகளுக்கும் முதன்மை கொடுக்கப்படுகின்றமை ஆழக் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

ஆளுமை Personality என்றால் என்ன?

'ஆளுமை' என்ற சொல் Personality என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடி மொழிபெயர்ப்பாகும். Personality என்ற ஆங்கிலப்பதம் 'முகமூடி' என்று பொருள் கொண்ட Persona என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியதாகும்.

ஒரு ஹீரோ திரைப்படமொன்றிலோ அல்லது நாடகமொன்றிலோ என்ன வேடத்தைப் போடுகின்றாரோ அவ்வேடத்திலேயே பார்வையாளர்கள் முன் அறிமுகமாகிறார். அது போலவே ஒருவர் தான் வாழும் சமூகத்திற்கு எந்த வேடத்தை வெளிப்படுத்துகிறாரோ அந்த சமூகத்தில் அதுவே அவருடைய ஆளுமையாகக் கருதப்படுகிறது. ஒருவர் முயல் போன்று முகமூடி அணிந்தால் அவர் முயல் போன்றும் மான் போன்று முகமூடி அணிந்தால் மான் போன்றும் காட்சி தருவார். அதுபோலவே ஒருவர் சமூகத்தில் தன்னை எவ்வாறு வெளிக்காட்டுகிறாரோ அதுவே அவருடைய ஆளுமையாகக் கணிக்கப்படுகிறது என்பதே Personality என்பதன் பொருளாகும்.

ஆளுமை என்றால் என்ன என்பதற்கு பல அறிஞர்களும் பல வரைவிலக்கணங்களைக் கூறுகின்றனர்.

1. ஆளுமை என்பது மற்றவர்களிடமிருந்து பிரித்து ஒருவரின் தனித்தன்மையைக் காண்பிக்கும் முகமாக ஒருவர் தன்னை முன்னிறுத்துவதாகும்.
2. ஒருவரின் பிரத்தியேகமான, நீண்ட காலத்திற்குக் காணப்படக்கூடிய முரண்பாடற்ற சிறப்பியல்புகள்தான் ஆளுமையாகும்.
3. நீண்டதொரு காலத்திற்கு ஒரு நபரால் ஒன்றிணைந்து தனித்துவமாகக் காணக்கூடிய மன வெழுச்சி, சிந்தனை மற்றும் நடத்தைசார் அமைப்புகளின் தொகுப்பாகும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ள வரைவிலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவதாயின் ஆளுமை என்பது ஒருவரது ஒன்றிணைந்த நடத்தையாகும். அது பரம்பரைத் திறன்களையும் சூழலின் தாக்கங்களையும் கொண்டது. அது அவனுடைய உடலமைப்பு, நடத்தைக் கோலங்கள், கவர்ச்சிகள், மனப்பாங்குகள், உளத்திறன்கள் விழுமியங்கள், சொற்கள், சொல்லும் முறை, பலவித சூழ்நிலை களிலும் வெளிக்காண்பிக்கும் தன்னம்பிக்கை மற்றும் பல்வேறு இயல்புகள் ஆகியவற்றின் முழு அமைப்பாகும்.

ஆளுமைப் பண்புகள் பிறவியிலிருந்தே நம்மோடு உள்ளதா? அல்லது ஒருவரால் உருவாக்கிக் கொள்ளப்படுகிறதா? என்ற வினா அறிஞர்களுக்கு மத்தியில் தொடர்ந்து விவாதிக்கப்படுகின்ற போதும் இரண்டும் கலந்திருக்கின்றன என்பது நடுநிலை பேணுவோரின் கருத்தாகும். இத்தகைய ஆளுமைப் பண்புகள் ஆளுக்காள் வித்தியாசப் படக்கூடியதாகவும் நேரத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப வித்தியாசப்படக் கூடியதாகவும் விருத்தி செய்ய முடியுமானதாகவும் காணப்படுகிறது. இதனால்தான் ஒரு காலத்தில் மோசமானவனாக இருந்த ஒரு மனிதன் பிறிதொரு காலத்தில் நல்லவனாக மாறுவதைக் காண்கிறோம்.

ஆளுமை வளர்ச்சியில் பங்குகொள்ளும் காரணிகள்

1. உடலியற் காரணிகள்

நரம்புத் தொகுதிகளின் தொழிற்பாடு, குருதியோட்டம் ஆகியன ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

2. உடலமைப்பு

ஒருவருடைய உடல் வளர்ச்சிக்கமைய அவருடைய நடத்தைக் கோலங்களிலும் மாற்றம் ஏற்படுகிறது.

3. உளத்திறன்கள்

4. மனவெழுச்சிகள்

5. சூழற் காரணிகள்

6. வீட்டு வாழ்க்கை முறை

7. நாளமில்லாச் சுரப்பிகள்:

உதாரணமாக, தைரொட் சின் மிகையாகச் சுரந்தால் கோபம் வரும்.

இவற்றோடு தன்னம்பிக்கை, நேர்க்கணியச் சிந்தனை, தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளல், சுயநலமற்ற சேவை என்பனவும் ஒருவரில் சிறந்த ஆளுமை உருவாகுவதில் பாதிப்புச் செலுத்துகின்றன.

### சிறந்த ஆளுமை என்பது என்ன?

இதற்கு விடையளிப்பது கடினமாயினும் சிறந்த ஆளுமை சமூகத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. ஒருவனுடைய ஆளுமை அவனுடைய உடலியல், உளவியல் திறன்களிலும் தங்கியுள்ளது. உயிரியல் காரணிகள் சமூகச் சூழல் காரணிகளுடன் கொண்ட இடைவினையின் விளைவாகவே ஆளுமைக் கோலம் உருவாகிறது. பிறருடன் சுமுகமான தொடர்புகள் கொண்ட பிள்ளைகளின் ஆளுமைப் பண்புகள் பற்றி ஆய்வுகள் நடத்தப்பட்டன. இப் பண்புகள் நேர்மை இரக்கம், முகமலர்ச்சி, தாராள மனப்பான்மை, அடக்கம், கீழ்ப்படிவு, நம்பிக்கை, கவர்ச்சி மற்றும் சிறந்த தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

### சிறந்த ஆளுமை உருவாக்கத்திற்கான அணுகுமுறைகள்

1. இலக்கைத் தீர்மானித்தல்

2. நேர முகாமைத்துவம்

3. தொடர்பாடற் திறன்கள்

4. தலைமைத்துவப் பண்புகள்

இவ்விடயங்கள் ஒரு மனிதனிடத்தில் சரியாக அமையப் பெறுமாயின் அவன் சிறந்த ஆளுமையுடையவனாகத் திகழ்வான் என்பதில் ஐயமில்லை. இலக்கை எவ்வாறு தீர்மானிப்பது? நேரத்தை முகாமைத்துவம் செய்வது எப்படி? என்ற விடயங்களை அறிந்துவைத்திருக்கும் மாணவர்கள் தங்களைச் சிறந்த ஆளுமைகளாகக் காட்டிக் கொள்ள முடியும்.

### தொடர்பாடல் திறன்

தொடர்பாடல் திறன் என்பது தலைமைத்துவப் பண்புகளுள் முதன்மையானதும் முக்கியமானதுமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இப்பண்பு பொதுவாக மாணவர்கள் தங்கள் ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கும் குறிப்பாக, மாணவத் தலைவர்களுக்கும் ஏனைய தலைமைத்துவப் பதவி வகிக்கின்ற மாணவர்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. தொடர்பாடலில் ஏற்டும் தடங்கல்கள், தவறுகளினால் உருவாகும் விளைவுகள் பாரதூரமானவை. இதற்கு நாளாந்த வாழ்க்கையில் பல உதாரணங்களை கண்டு கொள்ள முடியும்.

ஒரு விடயத்தைச் சொல்லும்போது பிழையாக விளங்கிக் கொள்ளும் ஒருவர் தான் விளங்கியவாறு செய்ய முயற்சிப்பார். முடிவில் நடக்க வேண்டும் என எதிர்பார்த்த விடயம் நடைபெற்றிருக்க மாட்டாது. இதுபோல் தகவல்களை வழங்கும் போது சரியான முறையில் வழங்காவிட்டாலும் இதே பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இறுதியில் தகவல் வழங்குபவர்களுக்கும் பெறுபவர்களுக்குமிடையில் முரண்பாடும் பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்பாக அது அமைந்து விடுகிறது.

எனவே, ஒருவரின் ஆளுமையை விருத்தி செய்வதற்கும் ஒரு காரியத்தை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கும் தொடர்பாடல் திறன் மிக இன்றியமையாததாக இருக்கிறது.

தொடர்பாடலில் முக்கிய மூன்று தோற்றப்பாடுகள் காணப்படுகின்றன.

1. தகவல்களைப் பெறல்

2. தகவல்களைச் சேமித்து மீளப் பயன்படுத்தல்

3. தகவல்களை வழங்குதல்

## 1. தகவல்களைப் பெறல்

தொடர்பாடல் திறன்களில் தகவல்களைப் பெறுதல் முக்கியமான ஓர் அம்சமாகும். தகவல்களைப் பெறும்போது அல்லது உள்வாங்கும்போது அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்ள பல்வேறு வகையான நுணுக்கங்களை அவதானிக்க வேண்டும். தகவல் பரிமாற்ற நிகழ்வு வாய்மொழியாகவோ, எழுத்தாகவோ அல்லது சமிக்ஞையாகவோ இருக்கலாம். அவதானக் குறைவானது தகவல்கள் மறந்து போவதற்கும் ஞாபகத்தில் பதியப்படாமல் விடுபடுவதற்கும் காரணமாக அமைகிறது.

நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல்கள் மறக்காது அல்லது ஞாபகத்தில் பதியப்படாமல் விடாது என்பதை உறுதி செய்ய இரு வழிமுறைகள் உள்ளன.

1) குறிப்பெடுத்தல்: தகவல்களைப் பெறும்போது முக்கியமான தகவல்கள் எனக் கருதுபவற்றை எப்போதும் குறித்துக் கொள்ள வேண்டும்.

2) செவியுற்றதிலிருந்து நீங்கள் எதை விளங்கிக் கொண்டீர்கள் என்பதை திரும்பக் கூறுதல்.

இவ்வாறு தகவல்களைப் பெறும்போது இடம்பெறும் தொடர்பாடல் சிறப்பாக அமைய வேண்டுமானால், தகவல்களைக் கூறுபவர் சுதந்திரமாகப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பின்வரும் அம்சங்கள் பேசுபவர்கள் சுதந்திரமாகப் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

a) உடம்பை சற்று முன்னால் வளைத்தல், கவனத்தை நன்கு செலுத்தல், குறிப்பெடுத்தல் மற்றும் இது போன்ற செயற்பாடுகள் மூலம் ஆர்வத்தை வெளிப்படுத்தல்.

b) புதிய கருத்துக்களையும் சிந்தனையையும் பேசுபவர் வெளிப்படுத்தும்போது Super!> Wow!> Excellent! போன்ற வார்த்தைகளைக் கூறி ஆர்வத்தோடு வரவேற்றல்.

c) கண் தொடர்பைப் பேணல். பேசுபவரின் கண்ணைப் பார்த்தவாறே செவிமடுத்தல்.

d) புன்முறுவல் செய்தல், அமைதியாகவும் ஆறுதலாகவும் Friendly ஆகவும் இருத்தல்.

e) பேசும்போது தொடர்பறாத வண்ணம் கவனத்துடன் காது கொடுத்தல்.

அதிகம் கேட்டு, அதிகம் பார்த்து அளவோடு பேச வேண்டும் என்பதற்காகவே சிலர் அடுத்தவர்கள் பேசும்போது அதை அவதானிக்க மாட்டார்கள். அது அவசியமற்ற பேச்சு என்பது போல் முகத்தைத் திருப்பிக் கொள்வர். அல்லது கவனத்தை வேறு திசையில் செலுத்துவர். பேசுபவர் பேச்சை முடிக்கும் முன்னரே பக்கத்தில் இருக்கும் மறொருவரிடம் வேறு ஒரு விடயம் பேச ஆரம்பிப்பார் அல்லது பேச்சை இடையில் நிறுத்தி தான் பேச ஆரம்பிப்பார். இத்தகைய செயற்பாடுகள் பேசுபவரின் பேச்சையும் அவரையும் இழிவுபடுத்துவதாக அமையும். எனவே உங்கள் நண்பன் பேசும்போது அவனது பேச்சை ஆர்வத்துடனும் அவதானத்துடனும் கேளுங்கள்.

## 02. தகவல்களைச் சேகரித்தலும் மீளப் பெறுதலும்

நீங்கள் பெற்றுக் கொண்ட தகவல்கள் பின்னர் பயன்படுத்தத் தேவைப்படும்போது மீட்டவேண்டி ஏற்படலாம். தகவல்களைச் சேமித்து மீளப் பெறுவதற்கு இன்று பல வழிமுறைகள் காணப்படுகின்றன. கணினிகளை இதற்கான உதாரணமாகக் குறிப்பிடலாம். எந்த மொழியைப் பயன்டுத்துகிறீர்கள் என்பது இங்கு முக்கியமாகக் கருதப்படுவதில்லை. தகவல்களைச் சேமிக்கவும் தேவையானபோது மீட்டவும் பல நுட்பங்களைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக குறிப்பெடுத்தல், மனனம் செய்தல், ஒலி, ஒளிப்பதிவு செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்

## 03. தகவல்களை வழங்குதல்

தகவல்களை வழங்கும்போது முடியுமானளவு ஐம்புலன்களையும் பயன்படுத்த முயற்சியுங்கள். வழங்கப்படுகின்ற தகவல்கள் உரியவரைச் சரியான முறையில் சென்றடைய பின்வரும் அம்சங்கள் துணைசெய்கின்றன:

a) தெளிவாகப் பேசுதல்.

b) ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளும் மொழியைப் பயன்படுத்துங்கள்.

c) தொனியை உயர்த்தியும் தாழ்த்தியும் சந்தர்ப் பத்திற்கேற்றவாறு அமைத்துக் கொள்ளுங்கள்.

d) குறிப்பாகச் சொல்ல நாடும் விடயத்திற்கு அழுத்தம் கொடுங்கள்.

e) அட்டவணைகள், வரைபடங்கள், வரிப்படங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தி விளக்குங்கள்.

f) செவிமடுப்பவரின் கண்கள் மற்றும் நெற்றிப் பகுதிகளைப் பார்த்துப் பேசுங்கள்.

இவை தவிர இன்னும் பல பயனுள்ள வழிமுறைகளைப் பயன்படுத்தி தகவல்களை இலகுபடுத்தி யாவரும் விளங்கும்படி செய்யலாம்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் தொடர்பாடற் திறன் என்பது அவசியம்

வளர்த்துக் கொள்ள வேண்டிய ஆளுமைப் பண்புகளில் ஒன்றாகும். வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கின்ற விடயங்கள் தவிர பாடப்பரப்புக்கு வெளியிலும் ஆசிரியர்கள் பல கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்குவர். இவற்றை ஒழுங்கான முறையில் செவிமடுத்து சேமித்துத் தேவையானபோது மீட்டிப் பயன்படுத்தும் போது அங்கு சிறந்த ஆளுமைகள் வளர்கின்றன. சரியான முறையில் செவிமடுக்கத் தவறும்போது வேண்டப்பட்ட காரியம் சரியாக நிறைவேறாமல் பிழைத்துவிடும். பிற்காலத்தில் இது மாணவர்களின் ஆளுமையில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி சமூகத்திலிருந்தும் ஒதுக்கப்படக் காரணமாக அமையலாம்.

மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களிலுள்ள மாணவர்களும் அதிபர்களிடமிருந்தும் பொறுப்பாசிரியர்கள் மற்றும் ஏனைய உயர் பொறுப்புக் களில் உள்ளவர்களிடமிருந்தும் தகவல்களைச் சரியான முறை யில் பெற்று அதன்படி ஒழுகத் தவறின் அங்கு ஒழுக்காற்று மற்றும் நிருவாகச் சிக்கல்கள் ஏற்பட ஏதுவாக அமைந்துவிடும். இவற்றி லிருந்து தவிர்ந்து கொள்ள தொடர்பாடல் திறன் என்ற ஆளுமைப் பண்பை மாணவர்கள் அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெறுகின்ற தகவல்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள எப்போதும் தம்முடன் சிறியதொரு குறிப்புப் புத்தகத்தை வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாகும். கட்டளைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் போது ஏதாவது தகவல்கள் விளங்காவிட்டால் அல்லது மயக்கம், குழப்பம் காணப்பட்டால் அந்த இடத்தில் தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பிழையாக விளங்கித் தவறாகக் காரியமாற்றுவது ஆளுமை விருத்திக்கு உதந்ததல்ல.

பாடசாலையில் நீங்கள் பல பொறுப்புக்களை வகிக்கலாம். உங்களுக்கு தலைமைத்துவப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் மேலிடத்தில் வருகின்ற உத்தரவுகள் தகவல்களையும் உங்களுடைய சில தீர்மானங்களையும் உங்களுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். நீங்கள் தகவல்களை வழங்கும்போது அமைதியாகவும் ஆறுதலாகவும் நிதானமாகவும் தெளிவாகவும் பேசுங்கள். தேவைப் படும்போது அட்டவணைகள், மரவரிப் படங்கள், வரைபடங்கள் மற்றும் இதுபோன்ற தகவல்களை இலகுபடுத்தக் கூடிய அம்சங்களைப் பயன்படுத்துங்கள். இதற்காக Bristol Board, Art Board, Papers போன்றவற்றையும் Multi Media Projector, Over Head Projector போன்ற நவீன சாதனங்ளையும் பயன்படுத்தலாம்.

பேசும்போது குறைவாகப் பேசுவதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். பலர் உரையாடும்போது அனாவசியமாக நீண்ட நெடிய விளக்கங்களைக் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். ஆழ்மனதில் தங்கியிருக்கும் தாழ்வு மனப்பான்மை அல்லது பாதுகாப்பின்மை போன்ற உணர்வுகள் இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

அளவுக்கதிகமாகப் பேசுவது ஒரு குறையாகும். ஆனால் அளவுக்கதிகம் என்பதை எந்த அளவு கோலைக் கொண்டு நிர்ணயிப்பது என்ற கேள்வி எழலாம். மேடைப் பேச்சென்றால் இன்னும் கொஞ்சம் பேசமாட்டாரா என்று பிறர் நினைக்கும் நேரத்தில் முடிக்க வேண்டும் என்பர். பொதுவாக குறிப்பிட்ட இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு போதுமான தகவல்களையும் விடயங்களையும் மாத்திரம் பேச வேண்டும். நிறையப் பேசினால் நம் கூற்று மட்டுமல்லாது நம் ஆளுமையும் சிதைந்துபோகும் அபாயம் ஏற்படுகிறது. இது தவிர நம் பேச்சு செல்லும் திசையும் நம் கட்டுப்பாட்டிலிருந்து விலகி ஏதோ பேசி வம்பில் கொண்டுவிடும் அபாயமும் ஏற்படுகிறது.

குறைவாகப் பேசுபவர்கள்மேல் எப்போதும் ஏனையோர் தன்னையறியாமல் ஒருவித அச்சம் கலந்த மரியாதையுடன் அணுகுவார்கள். அதிகமாகப் பேசப் பேச, ஏதாவது முட்டாள்தனமாகப் பேசிவிட ஏதுவாகும். ஒவ்வொரு சொல்லும் நம் முழுக் கட்டுப்பாட்டுடனும் நம் சிந்தனை அடிப்படையில் முடிவு செய்யப்பட்டும் வெளிவர வேண்டும்.

முக்கியமான தகவல்களைப் பரிமாறுவதற்காக கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் தேவையற்ற விடயங்களை அளவுக்கதிகமாகப் பேசும்போது எது தேவையானது, எது தேவையற்றது என்ற விடயத்தில் செவிமடுப்பவர்கள் குழம்பி விடுவர். எனவே, அளவாகப் பேசி ஆளுமையை வளர்க்க ஒவ்வொரு மாணவனும் முயற்சிக்க வேண்டும்.

மாணவப் பருவத்தில் வளர்த்துக் கொள்ளும் இவ்வாறான ஆளுமைப் பண்புகள் பாடசாலை வாழ்க்கையுடன் முற்றுப் பெறுவதில்லை. சமூக வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என அனைத்திலும் தாக்கம் செலுத்துகிறது. எனவே, தொடர்பாடற் திறனை வளர்த்து முழுமையான ஆளுமையை விருத்தி செய்ய முயற்சி செய்வோம்.

# சிறுவர் உரிமைகளும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்

ந. பார்த்திபன்

சிரேஷ்ட விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

சிறுவர் உரிமைகள் பற்றிப் பார்ப்பதற்கு முன் தேசிய "சிறுவர் தின உடன்படிக்கையை" முதலில் பார்ப்பது நல்லது. "இந்தப் பெரிய உலகத்திற்கு மாத்திரம் சொந்தமாயுள்ள சிறுவர்களின் உலகம் நட்பினாலும் முழு இதயத்தினாலும் ஆகிய அழகிய இல்லம் என அடைந்துள்ள மிகவும் விசேடமான பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டாக எங்களுடைய அர்ப்பணிப்பைச் செய்யும் ஆரம்ப முத்திரையை இன்றைய தினத்தில் பதித்துக் கொள்வோம். தங்களுடைய உலகத்தை எப்படி வர்ணிக்கப்பட வேண்டும் என்று சொல்வதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமை களுக்கு கௌரவத்தை முதலாகக் கொண்டு அதனைப் பெறு வதற்கு நாம் எல்லோரும் ஒன்று பட வேண்டியதாக இருக்கிறது"

"எங்கள் சிறுவர்களுக்கு சௌக்கியமான வாழ்வு, பாதுகாப்பான சூழல் மற்றும் பயன் தரக்கூடிய கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான தேவைப்பாடு, நேர்மையை முதலாகக் கொண்டு மற்றைய எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி வைப்பதினால் மாத்திரமே புதிய இலங்கைக்கான மிகச்சிறந்த தேசிய எதிர்பார்ப்புகள் யதார்த்தமாக வெளிவரும். இனி, இலங்கைப் பிரஜைகளாகிய சிறுவர்களுடைய நன்மை அரசாங்கத்தின் அடிப்படைப் பொறுப்பாகக் கருதும் புதிய வழியின் ஆரம்பத்தை நன்றாக உண்டாக்கும் இந்த வரலாற்று நேரத்தில் சிறுவர்களுக்கு உசிதமான சிறுவர்களின் பொருட்டாக உலகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இதயத்தின் ஆழமான அடித்தளத்திலிருந்து அர்ப்பணிப்புச் செய்வோம் என்று சபதம் செய்து கொள்கின்றோம்".

மேற்கூறிய சிறுவர் தின உடன்படிக்கை சிறுவர்களுக்காக பெரியோர்கள் எடுக்க வேண்டிய திட சங்கற்பத்தை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. ஆசிரியர்களும் இவ்விடயத்தில் அதிக ஆர்வமும் அக்கறைக்கும் காட்ட வேண்டும். இக் கட்டுரை ஆசிரியர்களை மனத்திலிருத்தி அணுக முற்படுகிறது. ஆசிரியரின் அருமையை உணர்ந்த நம்முன்னோர் "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்றார்கள். இன்னும் "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்பதும் "குருவில்லா வித்தை பாழ்" என்பதும் கூறப்பட்டிருக்கிறது. இன்றும் பலர், அவர் தந்த ஊக்கத்தால், அவரால் தமக்குக் கிடைத்த நன்மைகளைப் பட்டியல்ப்படுத்தி நன்றியோடு நினைவு கூர்வதை பார்க்கிறோம். ஆசிரியர் இரண்டாவது தந்தையன்றோ.

இது ஒரு புறமிருக்க, தகவல் ஊடகங்களின் மூலமாக நாம் பார்க்கும், கேட்டும் விடயங்கள் எம்மைக் கதிகலங்கச் செய்கின்றன. பாலியல் வல்லுறவு, தண்டனை ஆகிய விடயங்களில் ஆசிரியர்களின் நடவடிக்கைகள், அன்றாடம் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் இருந்து அறியும்போது அதிர்ச்சி தருவனவாக இருக்கின்றன. திருடராய்ப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாதென்று கூறப்படுகிறது. ஆயினும் இவ்விடயத்தின் பாரதூரமான விளைவுகள் எதிர்காலச் சந்தியினரை பாழாக்கி விடும் என்ற அச்சம் சமூக அக்கறை கொண்டோரிடம் காணப்படுகிறது. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதை பற்றிய சிந்தனைகளில் ஒரு சிலர் சிறுவர் துஸ்பிரயோகத்தில் இருக்க ஈடுபட்டு நிற்பது கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையின் சட்ட அமைப்பினுள் சிறுவர் உரிமைகள் தொடர்பாக காலத்துக் காலம் சட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டும் வந்துள்ளன. மேலும் ஒக்டோபர் 1 ஆம் திகதி உலக சிறுவர் தினம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு ஐக்கிய நாடுகள் அமைப்பானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்துள்ளது. கொண்டாட்டங்களும் வெகு விமரிசை யாகக் கொண்டாடப்பட்டும் விருகின்றன. இவை வெறும் சடங்குகளாக நிகழ்கின்றனவே தவிர அர்த்த புஷ்டியான நன்மை பயக்கும் செயல்களாக மாறவில்லை என்பதையும் குறிப்பிடத்தாள் வேண்டும். அந்த ஒரு நாள், சிறுவர்களை முடிசூடா மன்னராக்கி விட்டு அடுத்து வரும் 364 நாட்களும் எழுதாவிதியால் அடிமைகளாக்கி விடும் நிலையைப் பார்க்கிறோம். அதனால் தான் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஆய்வுகள் "சிறுவர் உரிமைகள் பற்றிய

உடன்படிக்கையில் சிறுவர் உரிமைகள் உறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன எனக் கூறுகின்றன. மேலும் சிறுவர்களை வேலைக்காரர்களாக சேவையில் ஈடுபடுத்துதல், சிறுவர்களை விற்றல், மற்றும் கடத்திச் செல்லல் போன்ற சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகள் எங்கள் நாட்டில் நடைபெறுகிறது என்பது இரகசியமல்ல" எனவும் எடுத்துரைக்கப்படுகின்றன.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக 1939 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளம் பராயத்தினர் பற்றிய கட்டளைச் சட்டம் மிகவும் முக்கியமானது. இன்னும் அதிகமாகப் பாவிக்கப்படும் கட்டளைச் சட்டமாக இதனை அறிமுகம் செய்யலாமென சட்ட வல்லுநர்கள் குறிப்படுகின்றனர். (cy po) "சய்போ" எனச் சுருக்கப் பெயரில் (Children and young Persons Ordinance) இது அழைக்கப்படுகிறது. இருப்பினும் 1989 ஆம் ஆண்டு தான் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் (50 வருடங்களின் பின்னர்) சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (The conversion on the Right of the Child) ஏற்றுக் கொள்ளப்பட்டது. எமது நாட்டில் 17 வருடங்களின் பின்னர், 2006 இல் தேசிய சிறுவர் உடன்படிக்கை என்ற பெயரில் சிறுவர் உரிமைகள் தொடர்பாகச் சிந்தித்ததன் விளைவாக தேசிய சிறுவர் வருடம் கொண்டாடப்பட்டது.

சிறுவர் செல்வத்தைப் பாதுகாத்தல் சகலரினதும் பொறுப்பு என்பதை நாம் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் சிறுவர் உரிமைகள் பற்றி வலியுறுத்தல் மற்றும் அது தொடர்பாக விழிப்புணர்வூட்டல் இந்த நவீன, மாதிரியான யுகத்தில் அவசியமானதாகவும் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டுமானதாகவும் கருதப்படுகிறது. நவீன சமுதாயத்தில் போட்டியான மனநிலை, பணத்திற்குப் பின்பு துரத்திச்செல்லல், சமூகத்தை வெறுக்கும் மனோபாவம் மாற்றமடைதல் போன்ற காரணங்களை ஏதுக்களாகக் கொண்டுள்ள உரிமைகளுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுவர் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பயன்தரும் வகையில் பாதுகாத்தலில் கவனம் செலுத்தப்படவேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியன் ஞான விளக்கு, அறியாமை இருளையும் அகற்றும் அறிவுச் சூரியன் என்றெல்லாம் நினைக்கும் ஆசிரியர்கள் சிறுவர் உரிமைகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

"எட்டு வயதிற்குக் குறைந்த பிள்ளையினால் புரியப்படும் ஏதாவதொரு செயல் தண்டனைச் சட்டக்கோவையின் 75 மற்றும் 76ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒரு குற்றம் எனக் கருதப்படலாகாது" இது எமது பாடசாலைகளில் கவனத்திற்கொள்ளப்படுகிறதா? எட்டு வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் புரியும் செயல்களுக்காக எவ்வளவு கொடூரமாகத் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதை ஆசிரியர்கள் தெரிந்துகொள்வோம். அதிபர் தாக்கியதில் எட்டு வயதுப் பெண் பிள்ளைக்கு காது கேட்பதில்லை என்ற செய்தி அண்மையில் பத்திரிகையில் காணப்பட்டது. தண்டனையின் கொடூரத்தை சிந்தித்துப் பாருங்கள். இதற்கான தண்டனை, தண்டனை வழங்குபவருக்கு கிடைக்காது என்ற நினைப்பும், அப்படித்தான் தண்டனை வழங்கப்பட்டால் தனது அரசியல், பண பலத்தால் குறைக்கலாம் அல்லது இல்லாமல் செய்யலாமென்ற நினைப்பும் இப்படித் தான்தோன்றித்தனமாக செயற்பட வைக்கிறது. பாடசாலைச் சிறார்களுக்கு உடல் சார்ந்த தண்டனையளித்தல் கல்வி அமைச்சின் 2005ஆம் ஆண்டு 17ஆம் இலக்கச் சுற்று நிருபத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது. இதே போன்று 2005ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க உடல் சார்ந்த தண்டனைக் சட்டத்தின் மூலம் கசையடி கொடுக்கும் தண்டனை நீக்கப்பட்டுள்ளது.

கல்வியை எடுத்துக் கொண்டால் கல்வியைப் பெறுவதற்கு சகல சிறுவர்களுக்கும் உரிமை உண்டு. குறைந்தளவில் அடிப்படைக் கல்வியைக் கட்டாயப்படுத்துவதற்கும் அது இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இங்கு அரசாங்கம் பாடசாலைகளினூடு ஆசிரியர்களின் மூலம் கல்வியை வழங்குகின்ற போது ஆசிரியர்கள் பிள்ளைகளின் அடிப்படை உரிமையான கல்வியை வளர்க்க உதவவேண்டும். சில சந்தர்ப்பங்களில் மாணவன் இடைவிலகுவதற்கு, தொடர்ந்து கல்வி வாய்ப்பைப் பெறாமல் போனதற்கு சில ஆசிரியர்கள் செயற்பாடு காரணமாயமைந்ததை அறிகின்றோம். தற்போது பொதுப் பரிட்சைகளின் முடிவுகளின் மூலம் க.பொ.த.(சா/த), க.பொ.த(உ/த) தராதரங்களோடு இடைவிலகும் நிலை காணப்பட்ட போது கடந்த காலங்களில் 7 ஆம் 8ஆம் தரங்களில் இடைவிலகும் துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. உடலியல் ரீதியாகவும் உளவியல் நீதியாகவும் தாக்கப்பட்டு பல மாணவர்கள் இடைவிலகிச்சென்றுள்ளனர்.
வகுப்பேற்றப்படவில்லை என இரு முறை எழுதி இடை விலகிச் செல்ல ஆசிரியர்கள் காரண கர்த்தாக்கள் ஆகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (CRC) என்பது சகல சிறுவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் பற்றிய குறிப்பீடுகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொண்டுள்ள ஆவணமாகும். இலங்கை உட்பட உலகத்தின் சகல நாடுகளும் இதை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதில் 29ஆவது சரத்து கல்வியின் நோக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ள விடயம் பின்வருமாறு. சிறுவரின் ஆளுமை, திறமை மற்றும் உளரீதியிலும் உடல் ரீதியிலுமான இயலும் தன்மை பரிபூரண முறையில் பொறுப்புடன், சமாதான முறையில், சுதந்திர சமூகத்தில் வாழ்வதற்கும் மற்றை நபர்களுடைய உரிமைகளை விளங்கிக் கொண்டு சூழலுக்கு மதிப்பளித்து வாழ்வதற்கும் கல்வியின் மூலம் சிறுவர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் பரீட்சை மையம், பெறுபேறுகளின் ஒப்பீடு, ரியூசன் மாயை (மோகம்) இணைப்பாட விதானச் செயற்பாடுகள் கல்வி அடைவை பின்தள்ளிவிடும் என்ற பெற்றோரின் நினைப்பு போன்ற பல்வேறு காரணிகளால் சிறுவரின் தனித்துவம் பாதிக்கப்படும் நிலையில் ஆசிரியர்கள் தான் இவற்றுக்கெதிராக இடையாறாது முயன்று கல்வியின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

வாழ்க்கைச் செலவு, குடும்ப நெருக்கடி, இயந்திரமாக மாற வேண்டிய சூழ்நிலை, பாடசாலைகளில் பெறுபேறு காட்டவேண்டிய நிலைமை போன்ற பல்வேறு காரணிகளால் ஆசிரியர் செல்நெறியிலும் பலப்பல மாற்றங்கள் இருப்பினும் சிறுவரின் ஆளுமை, திறமை மற்றும் உள-உட ரீதியில் இயலும் தன்மை என்பவற்றை இனங்கண்டு அதற்கேற்ப இயங்க வேண்டிய தன்மையை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்வதும் பேணுவதும் அவசியமாகும். சிறுவர் சமாதான முறையில் சுதந்திர சமூகத்தில் வாழ்வதற்கும் மற்றை நபர்களுடைய உரிமைகளை விளங்கிக் கொண்டு சூழலுக்கு மதிப்பளித்து வாழ்வதற்கும் ஆசிரியர்கள் முன்மாதிரியாக (Model) வாழ்ந்து காட்ட வேண்டும். மற்றைய நபர்களுடைய உரிமைகளை விளங்கிக் கொள்வதற்கு முதலில் ஆசிரியர்க்ள மாணவரை மதித்து அவர்களுடைய உரிமைகளை அவர்கள் பெற ஆவன செய்ய வேண்டும். ஆனால் இன்று பல பாடசாலைகளிலும் பிள்ளைகள் முன்வைக்கும் குற்றச் சாட்டு ஆசிரியர்கள் தங்களுக்கு மதிப்பளிக்கவில்லை என்பது தான்.

ஆசிரியர்கள் சிலர், தங்களுடைய சொந்தப் பிள்ளைகளை மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் நடாத்தி, பாடசாலைப் பிள்ளைகளை வெறுப்பாகவும் அவமரியாதையாகவும் பேசி துன்புறுத்துகின்றார்கள். உடல் ரீதியான தண்டனைகளை அறிந்தும் அறியாமலும் செய்கின்றார்கள். அண்மைக் காலங்களில் ஆலோசனை வழங்கும் ஆசிரிய ஆலோசகர்களுக்கு அதிகளவில் தெரியப்படுத்தப்பட்ட விடயம் ஆசிரியர்களின் வன்சொல்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பிரச்சினைகள் தான். குறிப்பாக க.பொ.த.(உ/த) வகுப்பில் படிக்கும் மாணவர்கள் (ஆண்/பெண்) தமது பிரச்சினைகளை முன்வைத்த போது இது தெரியவந்தது. சிறுவர் பற்றிய வரைவிலக்கணத்தை ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையின் 1வது சரத்து 18 வயதிற்கு உட்பட்ட சகலரும் சிறுவர்களாகக் கொள்ளப்படும். அவர்களுக்கு இந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட சகல உரிமைகளும் உரித்தாக்கப்பட வேண்டும் எனக்கூறுகிறது. ஆக க.பொ.த. (உ/த) வகுப்பில் படிப்பவர்கள், 18 வயதிற்கு குறைந்தவர்கள் என்பதை ஆசிரியர்கள் மனங்கொள்ள வேண்டும்.

விளையாட்டு, பொழுதுபோக்கு சார்ந்த மற்றும் கலாசார வேலைகள் என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை (CRC) பின்வருமாறு கூறுகிறது.
விளையாடுவதற்கு, விநோதமாக இருப்பதற்கு, கலாசார மற்றும் அழகுக்கலைகளின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. இந்தச் சரத்து இன்று எமது பாடசாலைகளில் கவனத்திற் கொள்ளப்படுகின்றதா என்பதை ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டும். காலையில் மேலதிக வகுப்பு என பிள்ளைகளின் ஓய்வு நேரத்தை பெற்றோர்களுடன் இணைந்து ஆசிரியர்களும் கொள்கின்றனர். பரீட்சை மையம் என்பதும் பெறுபேறுகளினால் பெற்றோரினதும் ஆசிரியரினதும் கௌரவம் பாதுகாக்கப்படுவது என்பதும் இணைந்து பிள்ளைகளின் விளையாட்டுக்கான, பாதுகாக்கப்படுவது என்பதும் இணைந்து பிள்ளைகளின் விளையாட்டுக்கான, பொழுது போகிற்கான நேரங்களைக் காவு கொள்கின்றன. ஓய்வு என்பது பிளளைகளுக்கு இல்லாது தடுக்கப்படுவதற்கு ஆசிரியர்கள் காரணமாகின்றனர். குறிப்பாக 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை 3ஆம் தரத்திலிருந்து பிள்ளைக்கான உரிமையைப் பறித்துள்ளன.

சிறுபராயமானது, சிறப்பான பராமரிப்பும் ஆதரவும் பெறும் உரிமையுடையதென மனித உரிமைகள் மீதான சர்வதேச பிரகடனத்தின் ஐக்கிய நாடுக்ள சபை அறைகூறியுள்ளமையை நினைவிற் கொண்டு, குடும்பமானது சமுதாயத்தின் ஆதாரமான குழுவாகவும்

அதன் சகல உறுப்பினர்களினதும் அதிலும் குறிப்பாக சிறுவரின் வளர்ச்சி, நல்வாழ்வு ஆகியவற்றுக்கு ஏற்ற இயற்கைச் சூழலாகவும் விளங்குகின்ற படியால், சமூதாயத்தில் அது தனக்குரிய முழுப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அவசியமான பாதுகாப்பையும் ஒத்தாசையையும் அதற்கு அளித்தல் வேண்டுமென்பதில் நம்பிக்கை கொண்டு, குழந்தை தனது ஆளுமையை முழுமையாகவும் இசைவாகவும் விருத்தி செய்வதற்கு ஒரு குடும்பச்சூழலில் ஆனந்தமும் அன்பும் புரிந்துணர்வும் உள்ள சுற்றாடலில் வளர வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டு, சமுதாயத்தில் பிள்ளைகள் தனிப்பட்ட வாழ்க்கை நடத்துவதற்கு முற்று முழுதாக தயார்ப்படுத்தப்படவும் ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வரையறுத்துள்ள ஆத்மார்த்தப்பண்புகளுக்கமைய, அதிலும் குறிப்பாக சமாதானம், கண்ணியம், சகிப்புத் தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகிய இலட்சிய உணர்வுடன் வளர்க்கப்பட வேண்டும் என்பதையும் கருத்திற்கொள்வோம்.

சிறுவருக்குச் சிறப்பான பராமரிப்பு அவசியமென்பது 1924 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் பற்றிய ஜெனிவாப் பிரகடனத்திலும் 1959 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஏற்றுக்கொண்ட சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்திலும், குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருமைப்பாட்டிலும், பொருளாதார சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருப்பாட்டிலும், சிறுவரின் நலனில் அக்கறை கொண்டுள்ள விசேட முகவர் நிலையங்கள், சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றின் நிரந்தர விதிகள் மற்றும் தொடர்புடைய ஒப்பந்தங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதையும் மனங்கொள்ள வேண்டும். குழந்தை உடலாலும் உள்ளத்தாலும் முதிர்ச்சி அற்றிருப்பதன் காரணமாக அது கருவில் இருக்கும் போதும் பிறந்த பின்னரும் முறையான சட்டவாதியான பாதுகாப்பு உட்பட விசேட பாதுகாப்புகளும் பராமரிப்பும் அதற்கு அவசியம் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். உலகின் எல்லா நாடுகளிலும் சிறுவர் சிரமமான கஷ்டமான நிலைமைகளிலே வாழ்கிறார்கள் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும், அதிலும் குறிப்பாக வளர்முக நாடுகளில் சிறுவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்குச் சர்வதேச ஒத்துழைப்பு முக்கியமென்பதை ஏற்றுக்கொண்டு 54 உறுப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தோடு சிறுவர் ஆபாசப்படத்தயாரிப்பு சம்பந்தமான பூர்வாங்க விருப்பு ஆவணத்தில் 17 உறுப்புரைகளும் மேலும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் ஆயுதப் பிணக்குகளில் சம்பந்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பான பூர்வாங்க விருப்பு ஆவணத்தில் 13 உறுப்புரைகளும் கூறப்பட்டுள்ள நிலையில் ஏனையோர் (வளர்ந்தோர்) அனுசரிக்க வேண்டும், மேற்கூறப்பட்ட உறுதியுரைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதாகவும், நிரைவேறியுள்ளதையும் வளர்ந்தோர் உறுதிப்படுத்துதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. 18 வயதுக்குக் குறைந்த மனிதப் பிறவி ஒவ்வொன்றும் ஒரு பிள்ளை எனக் கருதப்படும் என ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் குறிப்பிடுகின்றது. சிறுவர் தொடர்பான சட்டத்தின் படி பிராயமடையும் வயது முன்னராகவே வரையறுக்கப்பட்டி ருந்தாலன்றி மேற்படி வயதெல்லையே பிள்ளைகளைக் குறிக்கும்.

இறுதியாக, என்ன தான் சட்டங்களும் கட்டுபாடுகளும், மீறினால் தண்டனைகளும் விதிக்கப்பட்டபோதும் சிறுவர் உரிமைகள் வீட்டிலும் பாடசாலையிலும் சமூகத்திலும் மீறப்படுவதையே அதிகம் பார்க்கிறோம். காவோலை விழ குருத்தோலை சிரிப்பதைப் போல குருத்தோலைகள் தளிர்க்காவோலைகள் தடைபோடுவதையும் பார்க்கின்றோம். வன்முறையான, சுய நலமான, சமூகப் பற்றில்லாத சமூகம் உருவாவதற்கு வளர்ந்தோர் காரணமாயிருப்பது உணரப்பட வேண்டும். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பது வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இல்லாது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். குறிப்பாக, பாடசாலையில் அதிகளவு நேரத்தைச் செலவு செய்யும் மாணவர்களுக்கு ஆசிரியர்களே உரிமையைக் கொடுத்து மகிழ்ச்சிகரமாகவும் கல்வியின் நோக்கத்தை அடைவதும் வழி செய்ய வேண்டும். பெற்றோர்கள் வேலைக்குச் செல்லல், குடும்பச் சுமை, பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்குள் சிக்குண்டு நிற்பதால் தமது பிள்ளைகளின் மீது முழுமையான அக்கறை காட்டாத, காட்டமுடியாத நிலையில், பிள்ளைகளுடன் அதிகம் பழகும் வாய்ப்பைக் கொண்ட ஆசிரியர்களே அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டு சிறுவர் உரிமைகளைக் காப்பாற்றும் கடப்பாடுள்ளவர்கள் என்பதை ஒவ்வோர் ஆசிரியரும் உணர்ந்து செயற்படுவது அவசியம்.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் - யுனிசெப்

# பாடசாலை மட்ட முகாமைத்துவமும் வகிபாக மாற்றங்களும்

பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகமானது மத்திய காரியாலய உத்தியோகத்தர் குழு, மாவட்ட உத்தியோகத்தர் குழு, அதிபர்கள், பாடசாலை உத்தியோகத்தர் குழு, பெற்றோர் குறிப்பாக, மாணவர் ஆகியோரது வகிபாகங்களில் மாற்றங்கள் ஏற்படுதலைச் சுட்டிக்காட்டுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல், அமுலாக்கம், ஆளுகைப் பகிர்வு என்பன பாடசாலைச் சமூகத்தினுள் உள்ள அனைத்து நபர்களின் வகிபாக மாற்றங்களுடன் பாடசாலை வளவுக்குள்ளேயே உயிர்த்துடிப்பான பிரஜைகளுக்குரிய சனநாயாகப் பொறுப்புக்களை உற்சாகப்படுத்துகிறது. பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகம் காரணமாக முதல் வகிபாக மாற்றங்கள் மத்திய காரியாலயக் கல்வி அதிகாரிகளின் வகிபாக மாற்றங்கள் பற்றியனவாகும்.

## 1. மத்திய காரியாலயத்தின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்

கட்டளைகள் இடுதல், குற்றங்களைக் கண்காணித்தல் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, பாடசாலை மாற்றங்களுக்கு வளவாளர்களாகச் சேவை செய்தல் மற்றும் ஏற்பாட்டாளராக இருத்தல் போன்றவற்றில் பிரதான கவனத்தைச் செலுத்தும் வகையில் மத்திய கல்விக் காரியாலயத்தின் வகிபாகமாற்றங்கள் நகர்த்தப்படுவதாக நூலாய்வு இனங்காண்கிறது. (நோபிள் Noble 1996)

"மத்திய நிர்வாகத்தின் முக்கிய வகிபாகம் பாடசாலை உத்தியோகத்தர் குழுவினர் தீர்மானங்களை மேற்கொள்ளவும் அமுல்படுத்தவும் உறுதியான உதவிகளை வழங்குவதாகும்"(நோபிள், 1996:4).

ஆகவே பன்முகப்படுத்தப்பட்ட பாடசாலைமட்ட முகாமைத்துவ மாதிரிக்குள் பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், மாணவர் விருத்தி மாணவர் செயலாற்றுகைக்கு வசதி ஏற்பாடுகளை வழங்குதல், வளங்கள் மற்றும் பொருட்களின் இடநிர்ணயித்தலும் வழங்குதலும், சூத்திரங்களை அமைத்தல், முறையான பரந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் போன்றனவற்றில் மத்திய நிர்வாகத்தின் வகிபாகம் இடம்பெறுகிறதென நூலாய்வு அறிக்கைப்படுத்துகின்றது. பாடசாலைமட்ட அறிமுகத்தின் இராண்டவது வகிபாகம் பொறுப்புக்களின் மாற்றமானது மாவட்ட மட்ட கல்விக் காரியாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட வேண்டியதாகும்.

## 2. மாவட்டக் காரியாலய வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்


பாடசாலைமட்ட முகாமைத்துவ ஆட்சியின்கீழ் மாவட்டக் காரியாலய வகிபாகமும் மாற்றங்களுக்குட்பட்டுள்ளது, என (நோபிள்1996), வாதிடுகின்றார்.

"அத்தியட்சகர்கள் மற்றும் அவர்களது உத்தியோகத்தர் குழுவின் வகிபாகமானது பாடசாலைமட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு வசதி ஏற்பாடளிப்பதும் உதவுவதும், இன்னும் தீர்மானங்களைக் கொள்கைகளாகவும், நிகழ்ச்சித் திட்டங்களாகவும் மாற்றியமைத்தலில் தேவையான உதவிகளை வழங்குவதாகும்"(நோபிள்,1996:4).

கியூபிக் Kubick 1998 என்பவர் இக்கூற்றை ஆதரித்துத் தெரிவிப்பதாவது:

"அத்தியட்சகர்களும் மாவட்ட உத்தியோகத்தர் குழுவும் பாடசாலைமட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு ஏற்பாட்டு வசதியளித்துச் சேவையாற்றுவர். மற்றும் அவர்களது புதிய வகிபாகமானது கல்விசார் அதேபோல் வரவுசெலவு இலக்குகளை விளங்கப்படுத்துவதுடன் பாடசாலைக்குத் தனது மாவட்ட நோக்கை (Vision) உயர்தர நிகழ்ச்சித்திட்டங்களாக மாற்றுவதற்கு அவை இடர்ப்படும்நேரத்தில் தொழில்நுட்ப உதவியளித்தலாகும்" (கியூபிக், 1988:1).

பாடசாலைமட்ட முகாமைத்துவம் என்றால் என்ன, அது ஏன் பாடசாலைகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது போன்ற தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டியதும் அத்தியட்சகர்கள் வகிபாகமாக உள்ளது. இதே போன்று



கொட்டன் Cotton 1992 பரிந்துரைப்பதாவது பலவிதமான பாடசாலைகளின் அணுகுமுறைகளிடையேயுள்ள வேறுபாடுகள் தனித்தன்மைகள் ஆகியவற்றை மாற்றுதலும் பாடசாலையை மேம்படுத்தலும் மாவட்டக்காரியங்களின் தற்போதைய புதிய வகிபாகமாகவுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் அனேக மாவட்டக்காரியாலயங்கள் பாடசாலைகளின் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்து பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்தின் முழுக்காலத்துக்கும் தேவையான பின்னூட்டல் உதவிகளை வழங்குகின்றன. மாவட்ட இயக்குனர்களும் அத்தியட்சர்களும் தமது அதிபர்களுடன் வளர்ச்சித் திட்டங்களைப் பரஸ்பரம் உருவாக்கி பாடசாலைமட்டத்தில் திட்டமிடலுக்கும் பயிற்சிக்குமாக வள ஒதுக்கீடுகளில் உதவி செய்தலும் மற்றும் பாடசாலைச் சமுதாயங்களுக்கு தம் முழு மொத்த தனிப்பட்ட தொழில்சார் வழிமுறைகளை ஏற்படுத்தலையும் இந்நூல் ஆய்வு இனங்கண்டுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்திற்கு ஏற்பாட்டு வசதிகள் அளித்தல், வழிகாட்டல், ஆதரவு, ஆலோசனை மற்றும் மேற்பார்வை செய்தல் போன்றன மாவட்டக்காரியாலயத்தினதும் அதன் உத்தியோகத்தர் குழுவினரதும் புதிய வகிபாகங்களெனச் சுருக்கமாக இந்நூலாய்வு காணுகின்றது. பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்திற்காக மூன்றாவதாக மாற்றம் பெறவேண்டியது அதிபரின் வகிபாகங்களும் பொறுப்புகளுமாகும்.

### 3. அதிபரின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்

"பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் மிகப்பெரிய வகிபாக மாற்றம் அதிபரிடத்தில் ஏற்படுகிறது." (கொட்டன் 1996:7)

தாமே வழிகாட்டுபவர் அல்லது தலைமையாசிரியர் எனக்காட்டிக் கொள்ளும் பிரதான நிறைவேற்று அதிகாரியாகத் தமது வகிபாகத்தை அனேக அதிபர்கள் கருதுகின்றனர் என அவர் மேலும் அறிக்கைப்படுத்துகின்றார்.

பாடசாலைமட்ட முகாமைத்துவத்துக்கு முன்னதாக அதிபரின் வகிபாகமானது எப்போதும் கொள்கை நிறைவேற்றுதலும் நடைமுறைப்படுத்தலுமாக இருந்ததென ஆய்வுநூல் இனங்கண்டது. பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் அதிபரின் வகிபாகமானது தமது உத்தியோகத்தர் மீது அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தாது அதனைப் பகிர்ந்து இடத்திற்கேற்றதும் உள்ளூரால் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமைப்பதில் சமுதாயத்துடனும் உத்தியோகத்தர் குழுவுடனும் நல்லிணக்க முறையில் செயற்படுத்துவதாகும். பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் பாடசாலைகளுக்கு அதிகாரம் வகை கூறுதல் என்பன மாற்றப்பட்டதன் காரணமாக அதிபர்கள் மாவட்டக் கட்டளைச் சங்கிலித் தொடரின் உயர்வான இடத்திற்குத் தாம் நகர்த்தப்பட்டுள்ளதாக நம்புவதாக நூலில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. (ஹோல் செற்றர் 1996) என்பார் இப்புது வகிபாகத்தை விபரிப்பதாவது:

"உயிரோட்டமான முறையில் மீள்வடிவமைக்கப்பட்டுள்ள பாடசாலைமட்ட முகாமைத்துவப் பாடசாலைகளில் வினைத்திறனுள்ள அதிபர்கள் தமது உத்தியோகத்தர் குழுவுக்கு அதிகாரத்தைப் பகிர்வது, பயிற்சி அளிப்பது, தகவல் பரிமாறுவது, வெகுமதியளிப்பது போன்றவற்றில் உதவுதலில் குறிப்பிடத்தக்களவு காலத்தைச் செலவிடுகின்றமையை நாம் அறிகின்றோம்"(வொல்செற்றர்,1996:13).

பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் அதிபரின் புதிய வகிபாகமானது உத்தியோகத்தர் குழு, மாணவர், பெற்றோர் மற்றும் சமுதாயம் ஆகியோருடன் பாடசாலையைச் சுற்றி இடம்பெறுகின்ற குறிப்பிட்ட விடயங்கள் குறித்து உரையாடுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தலுமாகும். உடன்பாட்டுடனான தீர்மானம் மேற்கொள்ளும் வடிவமைப்பை

விருத்திசெய்து மற்றும் நியாயாதிக்கத்திற்கு ஒவ்வாதவற்றை அகற்றுவதன் மூலம் பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர் தமது பாடசாலைக் குழுக்களுக்கு உண்மையான அதிகாரத்தைப் பாரப்படுத்துகிறார்.

அதிபர் வகிபாகமானது, ஊக்குவிப்பாளராகவும் பயிற்றுவிப்பாளராகவும் மாற்றம் பெற்றுள்ளது. ஆதரவுள்ள சூழலை உருவாக்குபவராக, நம்பிக்கையை வளர்ப்பவராக, துணிந்து முடிவெடுத்தலை ஊக்குவிப்பராக, தகவல்களைச் சரியாக பரிமாற்றம் செய்பவராக, உயிரூட்டமுள்ள பங்குபற்றுதலுக்கு ஏற்பாட்டு வசதியளிப்பவராக மாற்றம் பெற்றுள்ளதென்றும் நூலாய்வு வெளிப்படுத்தியுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் அதிபர்கள் தமது தற்போதைய வகிபாகத்தைப் பிரதான ஏற்பாட்டாளராகவும் மாற்று முகாமையாளர்களாகவும் உயர்த்தியுள்ளனர். இதைச் செய்வதில் அதிபர்கள் தற்போது நடைபெறுகின்ற உத்திகோகத்தர் விருத்தி, பாடசாலைப் பரந்த செயல்கள் போன்றவற்றை உச்சாகப்படுத்தி முழுப்பாடசாலை மேம்பாட்டுச் செய்முறைக்காகத் தெளிவாக உணரக்கூடிய, உணரவியலாத வளங்களையும் வழங்கினார்கள்.

பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் அதிபரானவர் மற்றுமொரு உயர்ந்த வகிபாகத்தையும் வகிக்கின்றாரென நூலாய்வு ஆவணப்படுத்துகின்றது. தமது பாடசாலைக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சர்வதேச மற்றும் தேசிய விடயங்களின் "பெரும் காட்சிகளை" கவனிக்க வேண்டிய புதிய பொறுப்பின் தேவையும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர்களுக்கு ஏற்ப்பட்டுள்ளது. மேலதிகமாக பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர்கள் புதிய கருத்துக்கள் மற்றும் ஆய்வுகளில் கற்றல் கற்பித்தல் தொழில்சார் கலந்துரையாடல்களைத் தமது உத்தியோகத்தர் குழுவுக்கு பாடசாலையினுள் பெற்றுக் கொடுத்தனர். ஆய்வின் போது நேர்காணப்பட்ட பல அதிபர்கள், நிதி நன்கொடைகளையும் பொருட்களையும் பாடசாலை வளங்களை உயர்த்தக் கோரியதோடு, அவ்விடயத்தில் நன்கொடை அதிகரிப்புக்கு உத்தியோகத்தர் குழுவினரிடையேயும் உச்சாகமூட்டினர். இன்னும் பரவலாக்கப்பட்ட ஆளுகை மாதிரி பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழுள்ள அதிபர்கள் தமது ஆசிரியர்களின் நம்பிக்கையீனங்களை துடைத்தெறிந்து அதிலிருந்து அவர்களை விடுவித்து கற்றல் கற்பித்தல் பிரதான செயற்பாடுகளில் முழுக்கவனத்தையும் அவர்கள் செலுத்தும் வகையில் செயற்படுத்தினர்.

அதிபரின் வகிபாகம் நேரடி அறிவுறுத்தல் தலைமைத்துவத்திலிருந்து ஆசிரிய குழாத்துடன் அடிக்கடி விரிந்த இடைத்தாக்கத்துடன் ஈடுபடும் ஒழுங்கான தீர்மானம் மேற்கொள்ளும் அனைத்துப் பரந்த கட்டமைப்புள்ள வகிபாகத்திற்கு விரிவாக்கப்பட்டிருப்பதாக நூலாய்வு ஆவணப்படுத்தியது. வொல்செற்றர் (1996)அவர்கள் முடிவுரைப்பது போன்று,

"பாடசாலைமட்ட முகாமைத்துவப் பாடசாலைகளில் பல்வேறு வகிபாகங்கைச் சமநிலைப்படுத்தவேண்டிய தேவை அதிபர்களுக்கு உள்ளது." (வொல்செற்றர், 1996:17).

வோல்செற்றரும் கொட்டொனும் (1996) பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்துடன் ஏற்பட்ட பெரிய வகிபாக மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள் அதிபர்களைப் பாதித்ததாகப் பரிந்துரைக்கின்றனர். பிரதி அதிபர்கள், பாடசாலை இடைநிலை முகாமைத்தினர் என்போரும் பாடசாலை மட்ட முகாமைத்துவ அறிமுகத்தால் பாதிக்கப்பாடாமலில்லை. அவர்களும் அவர்களது வகிபாகத்திலும் பொறுப்புக்களிலும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்தினூடாக மாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.

## 4. பிரதியதிபர்கள் மற்றும் பாடசாலை இடைநிலை முகாமைத்தினர் வகிபாகங்கள் பொறுப்புக்களின் மாற்றங்கள்

சர்வதேச நூலாய்வின் போது, பாடசாலைமட்ட முகாமைத்துவ பாடசாலைகளின் பிரதியதிபர்கள், இலாகாத்தலைவர்கள், பாடசாலைகளின் இடைநிலை முகாமைத்தினர் ஆகியோரும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். பாடசாலை இடைநிலை முகாமைத்தினர், கற்பிக்கும் ஆசிரியர் சார்பாக அதிபருடன் உரையாடும் சேவையை ஆற்றுவதாக ஆய்வுகள் பரிந்துரைத்தன. பாடசாலையின் இடைநிலை முகாமையாளர்கள் பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் பெருமளவு செயற்படுத்து முகாமைத்துவத்தை எடுத்துக்கொண்டு பாடசாலை உபாயத்திட்டமிடலில் அதிபர் தமது முழுக்கவனத்தையும் செலுத்த இடமளிப்பதாக ஆய்வு தெரிவிக்கின்றது. கற்பிக்கும் ஆசிரியர்களின் வகிபாகங்களும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

## 5. ஆசிரியர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்

பாடசாலைமட்ட முகாமைத்துவ பாடசாலையில் உபாயத்திட்ட வழியை நெறிப்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்ளலில் ஆசிரியர் முழு, அதிகரித்த ஒரு வகிபாகத்தை வகிப்பதாகக் கூறப்படுகிறது. நோபிள் (1996) என்பார். பாடசாலைமட்ட முகாமைத்துவ வடிவமைப்பில் ஆசிரியர்களின் வகிபாகத்தை இவ்வாறு விபரிக்கின்றார்:

"ஆசிரியர்களின் வகிபாகம் பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் பெரிதளவு உயர்த்தப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் முழு விருத்தி, போதனை வழங்குதல், கலைத்திட்ட விருத்தி ஆகியவற்றுக்குத் தலைமை ஏற்குமாறும் மற்றும் உடன்பாடான தீர்மானம் மேற்கொள்ளற் செய்முறையில் உயிர்த்துடிப்புடன் தகவல் வழங்குமாறும் அடிக்கடி ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்" நோபிள், 1996:4).

பல பாடசாலைமட்ட முகாமைத்துப் பாடசாலைகளில் ஒரு பலமான இடைநிலை முகாமைத்துவ அமைப்புக் குறைபாடுள்ளதாக நூலாய்வு வெளிக்காட்டியது. குறிப்பாக ஆரம்ப மற்றும் முதன்நிலைப் பாடசாலைகளில் செயற்படு முகாமைத்துவத் திட்டமிடல் சிரேட்ட ஆசிரியர்கள் பொறுப்புக்களைக் கையேற்றுள்ளதாகவும் தெரிவிக்கின்றது. கற்பித்தல், கலைத்திட்ட விடயங்களில் "முழுப் பாடசாலையையும்" முகாமைப்படுத்தும் விதத்தில் அவர்களது வகுப்பறை மட்டக் கற்பித்தல் வகிபாகங்கள் விரிவாக்கம் பெற்றுள்ளன. இப் பாடசாலைகளின் பெற்றோர், மாணவர் வகிபாகங்களும் பொறுப்புக்களும் மாற்றமடைந்துள்ளன.

## 6. பெற்றோர் மற்றும் மாணவர் வகிபாகங்கள்; பொறுப்புக்களின் மாற்றங்கள்

பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு பாடசாலைமட்ட முகாமைத்துவ மாதிரிகளில் தீர்மானம் மேற்கொள்ளலிலும் ஆளுகையிலுமான அதிகரித்த வகிபாகங்களையும் நூலாய்வு வெளிப்படுத்துகிறது. மெக்கென்சி (McKenzie 1991), என்பவர் பரிந்துரைப்பதாவது:

"பொதுவாக பாடசாலைமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் வளையத்தின் வெளியே காணப்பட்ட பெற்றோர், தற்போது இச்செய்முறையின் உள்வளையத்துள் தம்மைக் காண்கின்றனர்." (மெக்கென்சி 1991:30).

பெற்றோர் சமுதாய உறுப்பினர் மற்றும் மாணவர்களில் குறிப்பாக முதியவர்கள், பாடசாலையின் செயற்படு மற்றும் கொள்கைப் பகுதிகளில் தம் ஆலோசனைகளை வழங்கி, நேரடியாகப் பங்களிப்புச் செல்வாக்குச் செலுத்துவதாக நூலாய்வு இனங்கண்டுள்ளது. பெற்றோர் மாணவர் மற்றும் சமுதாய உறுப்பினர் ஆகியோரின் வகிபாகங்களில் உதவுவதற்குப் பாடசாலைமட்ட ஆளுகை மாதிரிகளுக்குள், அப் பாடசாலைகள் உதவி செய்வதுடன், தகவல்களும் வழங்கு வகையில் அடிக்கடி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றன.

## 7. சுருக்கம்

பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்துடன் இடம்பெற்ற வகிபாக மாற்றங்கள், பாடசாலையுள் தொழிற்படுகின்ற அனைத்துத் தரத்திலான மக்களையும் பாதித்தது. சுருக்கமாக, தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம், திட்டமிடலில் பெருமளவு பொறுப்பு செயற்படு முகாமைத்துவம், உபாயங்களின் அமுலாக்கமும் மீளாய்வும், இடமட்ட கலைத்திட்ட விருத்தி, தொழில்சார் பூர்வாங்க விருத்தி வகைகூறலில் பரந்த எதிர்பார்ப்புக்கள் போன்றனவற்றை இவை பிரதானமாக இனங்கண்டன. அஞ்ஜிலிடிஸ் Angelidies 2000 என்பவரும் இவ் வகிபாக மாற்றங்கள் பாடசாலைக் கலாசாரத்திலும் மாற்றங்களைக் கொண்டுவரும், ஏன் எனில் புதிய வகிபாகங்கள் பாடசாலைச் சமுதாயத்தை இவ்வாறு தூண்டுகிறது எனப் பரிந்துரைக்கின்றார்:

"வேலைத்தள கலாசாரங்களுக்கு தொடர்ச்சியாய் பெரிதளவு கவனத்தைக் கொடுப்பதுடன், குறிப்பாக பாடசாலை மேம்பாட்டுச் சந்தர்ப்பங்களில் அவை எவ்வாறு பங்குத்தாரர்களின் எதிர்பார்ப்புகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன." (அன்ஜீலிடிஸ், 2000:9).

பாடசாலை மேம்பாடுகளைப் பொறுத்தவரை பாடசாலைமட்ட முகாமைத்துவம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அதிகாரத்தைக் கொடுக்கலாம். மீளாய்வு நூல் பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்தினூடாக பல எண்ணிக்கையான எடுகோள்கள் பாடசாலைமட்ட முகாமைத்துவத்திலும் அமைப்பிலும் பல விசேட இயல்புகளை அதிகரிக்கவும் உயர்த்தவும் செய்கின்றன. என்று இனங்கண்டுள்ளது.

*நன்றி - கல்வி அமைச்சு*

# வாழ்வோம் வளர்வோம் (சிறுவர் நாடகம்)

க.இ. கமலநாதன்

சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

உலகம் முழுவதுமுள்ள கல்வியாளர்கள் படைப்புவழிக் கல்வியைத் தற்போதைய இயந்திரத்தனமான கல்விமுறைக்கு மாற்றாகப் பரிந்துரைக்கிறார்கள். படைப்புவழிக் கல்விகளில் ஒன்றான நாடகம் மாணவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பள்ளிக்கல்வியில் நாடகத்தைக் கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தும்போது மாணவர்களின் தன்னம்பிக்கை, செயல்திறன், மொழி வளம், தொடர்புத்திறன், படைப் பாற்றலுடன் கூடிய விமர்சனச் சிந்தனை ஆகியவை மேம்படுகின்றன.

பல்வேறு கலைகளின் இணைவான நாடகம் போன்ற ஒரு கலையைக் கற்பிப்பதற்கு அதற்கென உருவாக்கப்பட்ட நிறுவனங்களே பொருத்தமானவை. ஏனெனில் பல்வேறுபட்ட கலைகளையும் அவை சார்ந்த ஆளுமைகளையும் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியம் நிறுவனங்களுக்கே உண்டு. அவ்வகையில் பாடசாலைகள் நாடகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது தற்போது உணரப்பட்டுள்ளது. இத்தேவையைக் கருதி “அகவிழி” துறைசார் ஆளுமைகளின் நாடகங்களை தொடராக வெளியிட விரும்புகிறது.

**திரை விலக ஆடல் பாடலுடன் நாடகம் ஆரம்பிக்கும்**

*சின்னுஞ் சிறார்கள் இன்று ஒன்றாய்ச் சேர்ந்தோம்*
*பென்னம் பெரிய கதை சொல்லப்போறோம்*
*அன்னை தந்தை வேடம் போடப்போறம் - எமது*
*எண்ணத்தில் இருப்பதை நாடகமாய் ஆடப்போறம்.*
*சிறுவர்கள் எங்களுக்கும் உணர்வு உண்டு*
*சிந்திக்கும் ஆற்றலும் நிறைய உண்டு*
*நிந்திப்பதால் மனம் படும்பாட்டை*
*அப்படியே உங்களுக்குச் சொல்லப்போறோம்*

தும்பி 1) - பெரிய பெரிய மிருகங்கள் எல்லாம் பட்டம் ஏத்தி விளையாடினம்.

தும்பி 2) - எட சிங்கராஜாவும் சேர்ந்தெல்லெ விளையாடுறார்.

தும்பி 1) - எல்லாமிருகங்களும் ஒண்டாயிருக்கிறதைப் பார்க்க எவ்வளவு சந்தோசமா இருக்கு.

தும்பி 2) - நாங்களும் பட்டம் போல பறந்து பறந்து விளையாடுவோம் வாங்கோ
(இரண்டு தும்பிகளும் பறந்து பறந்து விளையாடுவர்)
(சிறுவன் ஒருவன் பதுங்கிப் பதுங்கி வந்து தும்பி ஒன்றைப் பிடிப்பான்)

தும்பி 1) - ஆர் என்னைப் பிடிச்சது? ஏன் என்னை பிடிக்கிறீங்கள்.

சிறுவன் - உம்மைப் பிடிச்ச விளையாடுகிறதெண்டால் சந்தோசம் தான் எனக்கு

தும்பி 1) - நீர் இறுக்கிப் பிடிக்காதையும் நோகுது

சிறுவன் - இறுக்கிப் பிடிக்க நோகுதெண்டால் உம்மட வாலில நூல் கட்டுவம். (கட்டுதல்)

தும்பி 2) - (உயரத்தில் நின்றபடி) தம்பி....சின்னத்தம்பி....

சிறுவன் - ஆர் என்னைக் கூப்பிட்டது...?

தும்பி 2) - நான்தான் கூப்பிட்டனான்.

சிறுவன் - ஏன் கூப்பிட்டனீர்? இன்னொருக்கா கூப்பிடும் பாப்பம்.

தும்பி 2 - சின்னத்தம்பி....

சிறுவன் - சின்னத்தம்பியோ....? நான் பெரியதம்பி...

தும்பி 2) - பெரியதம்பி நான் நீங்க பிடிச்ச தும்பியின்ர அண்ணாத்தும்பி...

சிறுவன் - நீரும் வாரும் சோடியா கட்டி பறக்க விடுவம்.

தும்பி 2) - உங்களுக்கு விளையாட்டாக இருக்கும் எங்களுக்கு வேதனையாக இருக்கும்

தும்பி 1) - ஐயோ ஐயோ நூலைப்பிடிச்சு இழுக்காதையுங்கோ.... வலிக்குது.

சிறுவன் - உமக்கு நல்லா வலிக்கட்டும் எனக்கு வலிக்கேலத்தானே...

தும்பி 2) - தம்பி, தும்பிகள் எங்களை வருத்தாதையும்.

சிறுவன் - வருத்துவன் துடிக்க துடிக்க அழ வைப்பன். அதுதான் என்ர ஆசை.

தும்பி 1) - உங்கட அப்பா... தடியோட வாறார்....

சிறுவன் - அப்பா வாறாரோ அப்பா வாறாரோ... என்ர நாரி முறியப்போகுது.

(சிறுவன் ஓடி ஒளிப்பான்)

தும்பி 2) - தம்பி தம்பி ஓடி வாரும் கட்டை அவிழ்ப்பம் ஓடித்தப்புவம்.

தும்பி 1) - கெதியா அவிழுங்கோ...

தும்பி 2) - பொட்டை கட்டு கட்டிருக்கிறான் பொடியன்.

சிறுவன் - (சிறுவன் வந்து கொண்டு) பொட்டை கட்டில்லை.. பொடியன் கட்டு என்ர கட்டு

தும்பி 2) - பெரிய தம்பி அவிழ்த்து விடும் நாங்க இனி இந்தப்பக்கம் வரமாட்டம்.

சிறுவன் - பொய் சொல்லி தப்பிக்க நினைக்கிறீங்க என்ன?.. விடுவனா நான்..?

தும்பி(12) - (அழுதபடி).. இனி நாங்க பொய் சொல்ல மாட்டம் மன்னிச்சுக் கொள்ளுங்கோ..

சிறுவன் - (கேலியாக அழுதபடி )... உங்களை நானும் விடமாட்டன்... .அ..அ... ரண்டு பேரையும் ஒண்டா கட்டி விடப்போறன் அ..அ.. (மற்றத் தும்பியையும் துரத்திப் பிடித்து நூலின் மறு நுனியில் கட்டிவிடுதல் தும்பிகள் அழுதவாறு பறந்து செல்லும்)

சிறுவன் - இனி கல்லெடுத்து அணிலுக்கு அடிப்பன் புறாவுக்கு அடிப்பன் மைனாவுக்கும் எறிவன் ஓ.. வாறன். (மேடையை விட்டு நீங்குவான்)
(சிங்கராசா குரங்கு ஒட்டகத்தார் பட்டம் ஏற்றியபடி மேடைக்குள் பிரவேசிப்பார்)

சிங்கம் - சோழக் காத்துக்கு சோக்கா பறக்குது

குரங்கு - சோழக் காத்து எண்டு சொல்ல சோழன் பொத்தியின்ர ஞாபகம் வருகுது சிங்கராசா

மயில் 1 - தோட்டத்துக்க நுழைஞ்சு சோழன் பொத்தியை முறிச்சு ஒளிச்சு வைச்சு சாப்பிடுகிற குரங்காருக்கு அந்த ஞாபகம் வரும் தானே

குரங்கு - இப்ப தோட்டத்துக்க நுழையேலாம கிடக்கு

மயில் 2 - ஏனாம்?

குரங்கு - வெடிய கொழுத்தி துரத்தி அடிக்கிறாங்கள் என்னை

மயில் 1 - பாடுபட்டு தோட்டம் செய்யுறவை விடாயினம்

சிங்கம் - கிழக்குப்பகுதி மட்டக்களப்பில இந்த காத்ததான் கச்சான்காத்து எண்டு சொல்லுறவை

பன்றி - கச்சானோ?

குரங்கு - வாயை மூடும் பன்றியார் கச்சானை கிண்டிக் கிண்டி தின்ற பன்றியாருக்கு வாயூறும் தானே....

நரி - (வந்து கொண்டு ) ஆ.. மானையும், மரையையும், கொழுத்த எருமையையும் பிடிச்சு அடிச்ச திண்ட சிங்கராசா அவையயோட ஒற்றுமையாகப் பட்டம் விடுகிறார்.... நட்டம் எனக்குத்தானே....

சிங்கம் - அழுதது காணும் வாரும் நரியார்... பட்டத்தின்ர நூலைப் பிடியும்..

நரி - கோழியைச் சேவலைப்பிடிப்பம் எண்டு வந்தன்..ச..சா.. பட்டத்தின்ர நூலைப்பிடிக்க வேண்டி வந்திட்டுது.

மயில் 2 - இழுவை கூட.. கையை விட்டுடாதையும்.

பன்றி - வாலை நல்லா ஆட்டுறார் பாம்பு ஆட்டம் போல கிடக்கு

நரி - உங்களுக்கு எப்பவும் என்ர வாலில தான் கண்..

குரங்கு - சிங்கராசா நரியார் நூலை விட்டிட்டார்.

சிங்கம் - என்ன நரியார் ஏன் கையைவிட்டனீர்..

மயில் 1 - பட்டம் போய் பாலை மரத்தில தொங்கிட்டுது.

பன்றி - நரியாருக்கு குடுக்கிற குடுவையில பட்ட பாலையில ஏறி பட்டத்தையும் எடுத்துக் கொண்டு வருவார் ஓ...

நரி - வால் ஆடுது எண்டு சொன்னீங்கள் நான் என்ர வாலைச் சொல்லுறீங்க எண்டு கையை விட்டிட்டன்.

சிங்கம் - சரி சரி பட்டத்தை எடுக்க ஒட்டகத்தாரைத்தான் கூப்பிடவேணும்.

நரி - ஒட்டகத்தார்.... ஒட்டகத்தார்...

பன்றி - என்ர காதுக்க ஏனப்பா ஊளையிடுகிறீர் காது கன்னம் அடைக்குது.

ஒட்டகம் வரவு பாடல்
நீண்டு நெடுத்த கால்கள்
ஓங்கி வளர்ந்த கழுத்து
ஒட்டகச் சிவிங்கி ஓடி வாறேன்
டக டக டக டக
டக்கட டக்கட
முட்டைக்கண்ணால் முழுசிப்பார்த்தேன்
டக டக டக டக
எட்டிக்கால்கள் எடுத்து வைத்தால்
எட்டுக் கட்டை நடந்திடுவேனே
வட்டவயிற்றில் நீரை உறிஞ்சி
வாட்டும் வெயிலிலும் நடந்திடுவேனே.

ஓட்டகம் - சிங்கராசா ஏன் என்னைக் கூப்பிட்டனீங்கள்

சிங்கம் - பட்டம் அறுந்து மரத்தில தொங்கீட்டுது. பட்டத்தை எடுக்கக் கூடிய ஆள் நீர்தானே

ஒட்டகம் - ஓம் ராசா உடன எடுத்துக்கொண்டு வாறன்.

குரங்கு - பட்டத்துக்கு பக்கத்த பாருங்கோ ஒட்டகத்தார்.. ரண்டு தும்பிகளும் நூலில் சிக்குப் பட்டு அழுது கொண்டிருக்கினம்..

மயில் 2 - அது தும்பிப்பட்டமாக்கும்

ஓட்டகம் - இல்ல இல்ல தும்பிப்பட்டம் இல்ல சிக்குப்பட்ட தும்பிகள்.. அவையையும் தூக்கிக் கொண்டு வாறன் (பட்டத்துடனும் தும்பிகளுடனும் ஒட்டகம்)

தும்பி 1) - இந்த நூலை அவிழ்த்து விடுங்கோ நோகுது....

தும்பி 2) - உயிரை காப்பாத்துங்கோ.

நரி - இதென்ன கட்டப்பா அவிழ்க்கவே ஏலாமல் கிடக்கு பொட்டைக்கட்டுத்தான்

தும்பி 2) - எங்களைக் காப்பாத்துங்கோ

குரங்கு - இந்தா வாறன்.(நூலை வெட்டி விடும்) (மானும் மயிலும் சீர் செய்யும்)

சிங்கம் - தும்பிகளுக்கு நூலைக்கட்டிவிட்டது ஆர்..

தும்பி 1) - ஒரு தம்பி

தும்பி 2) - பெரிய தம்பி

மயில் 2 - அவர் ஏன் உங்களுக்கு கட்டினவர்

தும்பி 1) - அவைக்கு விளையாட்டு எமக்குதான் வலி

தும்பி 2) - எங்களை மட்டுமில்ல சிங்கராசா வண்ணத்திப்பூச்சிகள், அணில் குஞ்சுகள், புறாக்கள் எல்லாரையும் அவன் துன்புறுத்துறான்.

சிங்கம் - என்ன?
(சிங்கராசா கோபமுடன் பாடல்)
தப்பேதும் செய்யாத
அப்பாவி பிராணிகளைத்
தண்டிப்போரை- நான்
தண்டிப்பேன்
(சிங்கராசாவுக்கு கோபம் வந்திட்டுது ஏனைய மிருகங்களும் சேர்ந்து பாடும்)
தப்பேதும் செய்யாத
அப்பாவி பிராணிகளைத்
தண்டிப்போரை ராஜா
தண்டிப்பார்
எங்க சிங்கராசா என்றும்
தண்டிப்பார்

சிங்கம் - அமைதியாய் வாழ்வோரைக்
கொடுமைகள் செய்தாரை
கடுமையாய் வாட்டி
வதைப்பேன்

ஏனையவை- அமைதியாய் வாழ்வோரைக்
கொடுமைகள் செய்தாரை
கடுமையாய் வாட்டி
வதைப்பார்- எங்க சிங்கராசா
கொடுமையாய் வாட்டி
வதைப்பார்- எங்கராசா
தங்கராசா சிங்கராசா

சிங்கம் - கன நாட்களுக்குப் பிறகு இன்று எனக்கு கோபம் அதிகமாகவந்துவிட்டது

ஓட்டகம - வரவேண்டும். இப்படியான சந்தர்பங்களில்தான் கோபம் வரவேண்டும்

நரி - பன்றியார்....

பன்றி - நீர் பேசாமல் இரும்

நரி - குரங்கார்...

குரங்கு - நீர் பேசாமல் இரும்

நரி - மயிலார்....

மயில் 2 - நான்தான் நீர் பேசாமல் இரும்

நரி - எல்லாரும் என்னில கோவிக்கிறியள்....ஏன் நானும் நல்ல பிள்ளைதானே...

ஒட்டகம் - அதை நீர் சொல்லக்கூடாது

நரி - நான் சொல்லாமல்...

ஓட்டகம் - மற்றவை சொல்ல வேணும்
(நரி மெல்ல எழுந்து வெளியேறும்)

பன்றி - தொடர்ந்தும் அப்பிடியே இருக்க வேணும்.

குரங்கு - சின்ன பிள்ளை ஏன் கொடுமைக்காறனாக மாறினான் எண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும்

நரி - நல்ல காலம் நான் தப்பினன்.

பன்றி - சிங்கராசா எனது தாழ்மையான விண்ணப்பம் எங்களிட்ட டியிற்றல் கமரா மல்ரிமீடியா எல்லாம் இருக்கு

சிங்கம் - ஓம்....

ஒட்டகம் - தும்பிகளை வருத்தின சிறுவன் வீட்டுக்குக் குரங்காரை கமராவுடன் அனுப்புவம்

சிங்கம் - நல்ல விசயம் அனுப்பி...

பன்றி - அந்த வீட்டில் நடக்கிறதை அவர் கமராவில் படம் பிடிக்க நாங்க இஞ்சை இருந்து மல்ரிமீடியாவில பாப்பம். உண்மையை அறியலாம்

குரங்கு - நான் றெடி .. உடனப் போறன்

நரி - நான் மல்ரி மீடியாவைச் செற் பண்ணிறன்

குரங்கு - போட்டு வாறன்

ஓட்டகம் - திரையை கொண்டு வாரும் கட்டுவம்

மயில் 1 - சிங்கராசா நாங்கள் போட்டு வாறம் மகளுக்கு டான்ஸ் பழக்க வேண்டும்

சிங்கம் - ஓம் போட்டு வாங்கோ (மயில்கள் வெளியேறும்)
குரங்கார் நாங்கள் இங்கே றெடீ ஓவர் ஓவர்

குரங்கு - இங்கே எல்லாம் றெடீ நீங்கள் மல்டி மீடியாவை ஓன் பண்ணுங்கோ
(திரை இழுக்கப்படும் தாய் தந்தையர் சிறுவர் தோன்றுவர். சிறுமி புத்தகத்துடன் அமைதியாய் இருப்பாள்)

சிறுவன் - அம்மா எனக்கு ஒரு கதை சொல்லுங்கோ

அம்மா - கதை சொல்லுற நேரமே இது புத்தகத்தை எடுத்துப் படி தங்கச்சியைப் பாக்கிறீர் தானே..

சிறுவன் - படித்து படித்து கண் பூஞ்ஞனம் பத்திப்போச்சு கொஞ்ச நேரம் வெளிலே போய் விளையாடட்டோ அம்மா?

அப்பா - (வந்து கொண்டு) விளையாட்டோ பிறகு வாழ்க்கை முழுக்க விளையாட்டாகத்தான் இருக்கும்

சிறுவன் - சரி நான் வெளியில போகேல அந்த பொம்மையை எடுத்து தாருங்கோ என்ர மடியில வைச்சுக்கொண்டு படிக்கிறன்

அப்பா - தங்கச்சி பொம்மையை வைச்சுக் கொண்டே படிக்கிறாள்.

அம்மா - அய்யோ மகன் அது என்ர இரண்டாவது பிறந்த நாளுக்கு பிரசன்டாகக் கிடைத்தது 35 வருசம் ஆகுது பொலித்தின் கழட்டேல்ல அது வீட்டிற்கு வடிவு தம்பி அது உனக்கு வேண்டாம்

சிறுவன் - அந்த காரை எடுத்துத் தாங்கோ என்ட பிறந்த நாளுக்குத்தானே ப்ரசன்டாகக் கிடைத்தது

அப்பா - ஓம் அது உன்டதான் உனக்குத்தான் ஆனால் கொலர்ஸ்சிப் எக்சாம் முடியட்டும் பிறகு ஓடலாம்.

சிறுவன் - எக்ஸ்சாமுக்கு இன்னும் இரண்டு வருடம் இருக்குது. அதுக்குப்பிறகு காருக்குள்ள என்ட காலே போகாது வளந்திடுவன் தானே.

அப்பா - என்ன நீ வாய்கு வாய் காட்டுற (அடிக்கப்போதல் தாய் ஓடி வருதல் )

சிங்கம் - ஸ்ரில் பண்ணுங்கோ பாருங்கோ பிள்ளைகள் படுகிற பாட்டை இந்தப் பிள்ளைக்கு எண்டு ஒரு மனம் இருக்குத்தானே

பன்றி - இவை நிறுத்தப்பட வேண்டும். நீக்கப்பட வேண்டும். பார்க்கப் பார்க்க மனமெல்லாம் எரியுது.

ஓட்டகம் - சிங்கராசா அந்தா ஒரு சின்னப்பிள்ளை நடந்து வந்து கொண்டிருக்கு

பன்றி - நேர குகைக்கே வந்திடுவான் போல இருக்கு

நரி - சிங்கராசா அந்தச் சின்னப்பிள்ள ஆம்பிளப்பிள்ளை இல்ல பொம்பிளப் பிள்ள

சிங்கம் - எல்லாரும் ஒளியுங்கோ சின்னப்பிள்ளை பாவம் பயப்பிடும்.

தங்கை - தம்பித்தும்பி.... அண்ணாத்தும்பி...

நரி - நான்தான் அண்ணாத்தும்பி என்ன வேணும்..

தங்கை - நீங்க நரி அண்ணா...அண்ணாத்தும்பி இல்ல

பன்றி - எங்களைப் பாக்க உங்களுக்கு பயம் இல்லையோ..?

தங்கை - அந்தா இருக்கிறார் சிங்கராசா.. அவரைப் பாத்தே நான் பயப்படேல்ல..

ஒட்டகம் - ஒட்டகச் சிவிங்கியைப் பார்த்தாலும் பயப்பிடமாட்டீரோ..?

தங்கை - ஒட்டகச்சிவிங்கியைப் பார்க்க எனக்குச் சரியான ஆசை

சிங்கம் - (முன்னால் வந்து) அச்சாப்பிள்ள... கெட்டிக்காரப்பிள்ள... ஒட்டகத்தில ஏறிச்சவாரி செய்யுமன்(ஒட்டகத்தின் முதுகில் ஏற்றி விடும்)

தங்கை - எங்கராசா சிங்கராசா தங்கராசா நல்ல ராசா

சிங்கம் - நல்லது. நீர் தும்பி பிடிச்சு விளையாடவோ வந்தனீர்.?

தங்கை - இல்ல தும்பிகளைக் காப்பாத்த வந்தனான்.

நரி - தும்பிகளைக் காப்பாத்தவோ?

தங்கை - ஓம் எங்கட அண்ணா தும்பிகள் இரண்டை நூலில கட்டிப் பறக்க விட்டவராம்.

சிங்கம் - நூலை அவிழ்த்து தும்பிகளைக்காப்பாத்த வந்தனீரோ..?

தங்கை - பாவம்தானே தும்பிகள்.... அவைக்கு நோகும்தானே

ஒட்டகம் - அச்சாபிள்ளை.... தும்பிகளை நாங்கள் காப்பாத்திப் பறக்க விட்டுட்டம்.

குரங்கு - தும்பிகள் ஓடி வாங்கோ...

தங்கை.... அண்ணா உங்களுக்கு நூலைக் கட்டினதால வலிக்குதோ....?

தும்பிகள் - எங்களுக்கு இப்ப வலிக்கேல்ல

தங்கை - உங்களைப் பார்க்க எனக்கு சரியான கவலையா இருக்கு.

தும்பிகள் - உங்களைச் சந்தோசப்படுத்த பட்டம் ஏத்தி விளையாடுவம்.

தங்கை - பட்டம் எண்டால் எனக்குச் சரியான விருப்பம்....

பன்றி - எல்லாரும் பட்டம் ஏத்தி விளையாடுவம்.

பாடல்

*ஆடிப் பாடிக் கூடித்தேடிப்*<br>
*பட்டம் விடுவோம்*<br>
*வாடைக்காற்று முட்டி மோத*<br>
*வானத்திலே ஏற்றுவோம்*<br>
*எட்டு மூலைப்பட்டம் கட்டி*<br>
*விண்ணில் ஏற்றி மகிழ்வோம்*<br>
*பறவைப்பட்டம் சதுரப்பட்டம்*<br>
*விண் இரைய ஏற்றுவோம்*

தங்கை - அச்சாப் பாட்டு அச்சாப் பட்டம் நான் வீட்ட போட்டு வாறன் டிலந டிலந..

அண்ணா.... அண்ணா... நீங்க எங்க இருக்கிறீங்க..?

ஒட்டகம் - உங்கட அண்ணா வீட்டுக்குப் போட்டார்.

தங்கை - நான் தனிய வீட்டுக்குப் போக மாட்டனே...

நரி - வந்தது போலத் திரும்ப போகலாம் தானே.

தங்கை - நரி அண்ணா நீங்க சரியான குழப்படியாம்

நரி - ஆ.. இந்தக்குழந்தைக்கே என்ர குழப்படியள் தெரிஞ்சு போச்சே நான் போட்டு வாறன். வயிறு பொருமிக்கொண்டு கிடக்குது. ஏதேனும் சாப்பாடு தேட வேணும்

தங்கை - சிங்கராசா... நீங்கள் எங்கட வீட்டுக்கு வரவேணும்..

சிங்கம் - ஆ.. நான் வரேலாதம்மா... நான் காட்டுக்கு ராசா நாட்டுக்கு வரேலாது..

தங்கை - அம்புலிக்க இருக்கிற ஒளவைப்பாட்டியே இறங்கி வந்து சாப்பாடு தீத்தினவா எனக்கு

ஒட்டகம் - ஒளவைப்பாட்டியோ எப்ப வந்தவா?

தங்கை - என்ர முதலாவது பிறந்தநாளுக்கு முதல் நாள்...

சிங்கம் - என்னைக் கண்டால் ஊரில உங்க வீட்டில எல்லாரும் பயப்பிடுவினம்.

தங்கை - என்னட்டைப் பூனையின்ர முகமூடி இருக்கு அதைப் போடுங்கோ என்னோட வாங்கோ (போர்வையிருக்கு அதால போர்த்துக் கொண்டு வரலாம்.)

ஒட்டகம் - பூனை சின்ன மிருகமெல்லோ...

பன்றி - இது சிங்கப்பூனை

தங்கை - அது காட்டுப்பூனை எண்டு நான் சமாளிப்பன்

ஒட்டகம் - சின்னப்பிள்ள ஆசைப்படுது போட்டு வாங்கோ சிங்கராசா...

பன்றி - சிங்கராசா குரங்காரையும் கூட்டிக் கொண்டு போட்டு வாங்கோ..

குரங்கு - எனக்குப் முகமூடி தேவையில்லை

தங்கை - அவர் அடிக்கடி ஊருக்கு வந்து போறவர்தானே

குரங்கு - சின்னப்பிள்ளைகள் என்னை வேடிக்கை பாப்பினம்

தங்கை - வள்.. வள்..(குரைத்து) நாய்கள்தான் கலைப்பினம்.. நான் சமாளிக்கிறன் வாங்கோ..

சிங்கம் - சரி வாங்கோ.

(மூவரும் புறப்படுவர்).

நரி வரவு (மரம் கதிரையாகும்)

*குள்ளநரி நானும் வந்தேனே..*
*சிந்து நடை நடந்து.... (கோரஸ்)*
*குள்ள நரி நானும் வந்தேன்*
*நல்ல பசியால் அழுதேன்*
*துள்ளி ஓடும் மானைக்கண்டேன்*
*சிங்கராசா வரவும் காணேன்'(கோரஸ்)*
*பட்ட விட்ட சிங்கராசா*
*கெட்ட குணத்தை மறக்கப்போறார்*
*கொழுத்த மானைப்பிடிச்சு கடிச்சு*
*வெழுத்துக்கட்ட வாங்கோ ராசா....*
*தங்கையையும் மாறுவேட சிங்கத்தையும் பார்த்து*

நரி - என்னடா ஒரு வித்தியாசமான மிருகமொண்டு வருகுது..

சின்னப்பிள்ளையும் வாறாள்... ஒரு நாளும் நான் காணாத மிருகம்.

தங்கை - நரியார் என்ன கடுமையான யோசினை..

நரி - (பெரிய மிருகத்தைப் பார்த்து) நீங்களோ கதைச்சனீங்கள்..

தங்கை.... நான் தான் கதைச்சனான்.

நரி - சின்னப்பிள்ள.. இந்தப்பென்னம்பெரிய மிருகம் ஆர்?

தங்கை - அது பூனை.

நரி - (பெரிதாய்ச் சிரித்து) நீர் பகிடி விடுகிறீர் பூனைய எனக்குத்தெரியாதோ இந்தளவு... (கைகளை விரித்துக்காட்டும்)

தங்கை - இது காட்டுப்பூனை

நரி - பிறகும் பகிடி விடுகிறீர்... காட்டுப்பூனையை எனக்குத்தெரியாதே இந்தளவு... (கைகளை விரித்துக்காட்டும்) அது சரி இவற்ற வாலை எங்கையோ பாத்த மாதிரிக்கிடக்குது. (யோசிக்கும். சிங்கம் எட்டி அடிக்கும்) ஆரோ எனக்கு அடிச்ச மாதிரிக்கிடக்கு....

தங்கை - அடிச்சவையே..

நரி - ச்சா.. எனக்கு அடிக்க முடிஞ்சா அலுவலே..... ( சிங்கம் மறுபடி அடிக்கும்) பிறகும் அடிக்கிறாங்கள்.. ஆ... யோசிக்க விடாமல் அடிக்கிறாங்கள்

தங்கை - நரி அண்ணா நாங்க கனதூரம் போகவேணும். போட்டுவாறம்.

நரி - ஏன் உவர் கதைக்க மாட்டாரோ...? (கொட்டாவி விட்டு) கடும் பசி பூனை இறைச்சியெண்டால் என்ன புலி இறைச்சியெண்டால் என்ன ஒரு பிடி பிடிப்பம்

தங்கை - தேவையில்லாத அலுவல்கள் பாத்து வாங்கிக்கட்டாதேங்கோ நரி அண்ணா

நரி - (சிங்கம் மறுபடி அடிக்கும்) நாரி நாலு துண்டா முறிஞ்ச மாதிரிக்கிடக்கு.. இருந்தாலும் கால் பக்கத்தையும் பாத்த மாதிரித்தான் கிடக்கு. (சிங்கம் கையொங்க நரி ஓடும்.)

வீடு

அப்பா - பிள்ளையளின்ர எக்ஸாமை நினைக்க எனக்கு வயித்தக் கலக்குது.

அம்மா - இனி விளையாடவே விடக்கூடாது.

அப்பா - குளிப்பு முழுக்கு அளவாக இருக்க வேணும்.

அம்மா - பாட்டைக் கூட்டிப் போடாதையுங்கோ எண்டு அயல் வீட்டுக்கும் சொல்ல வேணும்.

அப்பா - சாப்பாடும் கண்டபடி குடுக்கக்கூடாது.

அம்மா - வீடு, ஸ்கூல், ரியுசன் மட்டும் தான் போறது வாறது.

அப்பா - கோயில், குளம், திருவிழா, பூசை, புனஸ்காரம்....

அம்மா - அது இனி இப்போதைக்கு இல்ல.

அப்பா - சொந்த பந்தங்களை வீட்டுக்கு வர விடக் கூடாது.

அம்மா - ஓம் வந்தால் பிள்ளைகளின்ர படிப்புக்கு டிஸ்ரப்.

அப்பா - அந்தா மகளோட ஆரோ வருகினம்.... நான் உள்ளுக்க ஒளிச்சிருக்கிறன்.

அம்மா - என்ன சத்தம் கேட்டாலும் வராதேங்கோ ஆளை அனுப்பின பிறகு வாருங்கோ.. (அப்பா உள்ளே செல்வார்.)

அம்மா - என்ன? பூனையின்ர முகமூடி போட்டுக் கொண்டு வாறார்.

தங்கை - அம்மா....

அம்மா - மகள் ஆர் இவர்..?

தங்கை - இவர்.......

சிங்கம் - (முகமூடி கழட்டி) நான் சிங்கம்.... காட்டு சிங்கம்....

அம்மா - சி..சி..சி..ங்கம்.. ஓடி வாங்கோ.. ஓடி வாங்கோ..(ஓடி ஒளிப்பார்.)

தங்கை - அம்மா... பயப்பிட வேண்டாம்.

அம்மா - சிச்சி.. ப்ப...ப்ப... ப்ப... ஓடி வாங்கோ.... கதவையும் பூட்டிப்போட்டு.....

(சிறுவன் ஓடி வந்து சிங்கராசாவுக்கு கைகொடுப்பான்)

சிங்கம் - இந்தச் சின்னப் பிள்ளைகளே பயப்பிடேல்ல ..... நீங்கள் ஏன் பயப்படுகிறியள்..?

சிறுவன் - அப்பா வெளியில வாங்கோ.. முக்கியமான விருந்தினர் வந்திருக்கினம்.

அப்பா - (வெளியில் வந்து கொண்டு) முக்கிய விருந்தினரோ.. சி..சி..சி (சிங்கத்தைக் கண்டு ஓடித்திரிவார்)

சிங்கம் - இன்றைய சூழலில் வளருகிற பிள்ளைகள் சிங்கத்தோடையே சிரிச்சுக் கதைக்கிற சிந்தனை ஆற்றல் கொண்டவை.

அம்மா - ஓம்.. ஓம்.. நாங்கள் பயந்தாங் கொள்ளிகள் எண்டு நினைச்சிட்டம்.

சிங்கம் - பிள்ளைகள் பிள்ளைகளாக வளர்ந்தால் பயந்தாங்கொள்ளிகள் அல்ல பயன்தரும் பிள்ளைகள்.

அப்பா - விளங்குது.

(தும்பிகள் ஸ்கிறீனுடன் வந்து)

தும்பி 1 - குரங்கார் மயிலாற்ற வீட்டில படம் பிடிக்கிறார்.

தும்பி 2 - உங்களை ஸ்கிறீனில பாக்கட்டாம்...

சிங்கம் - நீங்களும் பார்க்கலாம்.

அம்மா, அப்பா - கட்டாயம் பாப்பம்

சிங்கம் - குரங்கார் பூ.ம

(திரையில் மயிலின் குடும்பம் காட்சிப்படுத்தப்படும்)

தாய்மயில்- மகன் எங்கே நிக்கிறீங்க? என்ன செய்யிறீங்க? வாங்கோ படிப்பம்

மகன்மயில்- வந்துட்டேன் அம்மா என்னுடன் கொஞ்ச நேரம் விளையாட வாங்கோ

தா.மயில் - இம் வாங்கோ விளையாடுவோம் விளையாடினால் உற்சாகமாகப் படிக்கலாம்.

மகன்.மயில்- நித்திரைக்குப் போக முதல் கதையும் சொல்ல வேணும்.

தாய்மயில்- நீர் கேக்கிற நேரமெல்லாம் கதை சொல்லுறனான் தானே. இப்ப பாட்டுப்பாடி விளையாடுவம் வாங்கோ..

தகிட தகதிமி தகனக சொம் தரி
எட்டும் ஏழும் பதினைந்து சரி சரி
பட்ட காலே படும் அது பழமொழி
சட்டதிட்டம் இது ஒரு இணைமொழி

(நரி வரும் மறைந்து இருந்து தனக்குள் கதைக்கும்

நரி - அம்மாவும் பிள்ளையும் ஆடிப் பாடுறிங்களோ பாடுங்கோ பாடுங்கோ

சிங்கம் - ஸ்ரில் ப்ளீஸ் இஞ்ச பாருங்கோ கெட்ட நரி யார் எங்களுக்கு தண்ணீ காட்டிப்போட்டு தனிய வெளிக்கிட்டு தன்ர அலுவலில நிக்கிறார். பாப்பம் என்ன நடக்குது என்று

நரி - எத்தின நாளாக சாப்பாடில்லாமல் திரியிறன். ஆ... கொட்டாவி... கெட்ட ஆவி. காட்டில காய்கனி, காய்கறி, இலை குலை எல்லாம் இருக்கு அது ஒரு சாப்பாடே... சாப்பாடென்டால் இப்பிடி மயிலப்போல கொழுத்த இறைச்சியா சாப்பிடவேணும்

தாய்மயில்- மகன் வீட்டிலே இருந்து விளையாடுங்கோ அம்மா கடைக்கு போட்டு வாறன்

ம.மயில் - ஓம் அம்மா போட்டு வாங்கோ

நரி - அம்மா போகட்டும் சின்னமயில் கொழுத்த மயில் நல்ல பதமாய் இருக்கும் எலும்புகளும் முத்தி இருக்காது கடித்து சாப்பிடலாம் பின்பக்கத்தாலே போய் ஓரே பாச்சல் மெதுவாகப்போவம்

தாய் மயில்- என்ன நரியாற்ற காலடி மாதிரி கிடக்கு. நரிதான் வந்து ஓளிச்சு இருக்கின்றார் எங்க இந்த ஆணிபுடுங்கிற சுத்தியல் இஞ்ச கிடக்குது

நரி - மயிலாரே மயிலாரே வாரும் ஒளிச்சுப்பிடிச்சு விளையாடுவோம் வாங்கோ வாங்கோ... (பின்னுக்கு திரும்பிப்பாத்து)ஏதோ சத்தம் கேட்டதுபோல இருந்தது ஒருத்தரும் இல்லை இந்த நேரம் யார் வாறது பங்கு கேட்டு ஆரேனும் வந்தாலும் டக் என்று அலுவல முடிக்கவேணும் (தாய் மயில் பின்னே சென்று வாலில் ஆணி பிடுங்கியை கொழுவும்) ஐயோ ஐயோ முறுக்காதேங்கோ வால் வால் இந்த முறையும் வால் அறுந்து போச்சு

தாய்மயில்- இனிமேலும் சேட்டை விடுவீரோ

நரி - விட்ட சேட்டைக்கு பட்ட துன்பம் காணும்

தாய்மயில்- நீர் செய்த வேலை எல்லாத்தையும் எத்தனை பேர் கமறாவுக்குள்ளால பாத்துக் கொண்டு நிக்கினம் பாரும்

நரி - ச்சா வால் போனலும் பறவாயில்லே எல்லோரும் பார்த்திட்டாங்களே கும்பிடுறன் வாழ்க்கையில இனிப் பிழைவிடமாட்டன்

சிங்கம் - குரங்கார் குரங்கார் இத்தனை நேரமாக நீர் செய்த பணிக்கு நன்றி. நீர் உடனே இங்க புறப்பட்டு வாரும்.

அப்பா - மயிலின்ர அம்மா மாதிரி எல்லா அப்பா அம்மாக்களும் பிள்ளைகளில் அன்பாகவும் பாதுகாப்பாகவும் இருந்தால் பிள்ளைகளும் நல்லாப் படித்து பெரிய ஆக்களாய் வருவார்கள்.

அம்மா - சமூகத்திற்கு ஏற்ற பிள்ளைகளாய் வளர்வார்கள்.

சிங்கம் - இப்ப விளங்கிக் கொண்டீர்கள்தானே....

அப்பா - சிங்கராசா உங்கட வரவு என்ர குடும்பத்துக்கு ஒரு விடிவு.

சிறுவன் - சின்னப்பிள்ளைகள் நாங்க பட்ட துன்பத்துக்கும் ஒரு முடிவு.

அம்மா - நிறைய விடையங்களை நாங்கள் விளங்கிக் கொண்டம். இனி மேல் சிறுவர்களை சிறுவர்களாகவே மதிப்போம்

தங்கை - நாங்கள் அப்பா அம்மாவை என்னென்று வாழ்த்துவோம் வணங்குவோம்.

சிறுவர் - போற்றுவோம் புகழுவோம்.

சிங்கம் - சரி எல்லோரும் வாங்கோ பாட்டுப் பாடி நாடகத்தை முடிப்போம்.

*ஆடிப் பாடிக் கூடித்தேடிப்*
*பட்டம் விடுவோம்*
*வாடைக்காற்று முட்டி மோத*
*வானத்திலே ஏற்றுவோம்*
*எட்டு மூலைப்பட்டம் கட்டி*
*விண்ணில் ஏற்றி மகிழ்வோம்*
*பறவைப்பட்டம் சதுரப்பட்டம்*
*விண் இரைய ஏற்றுவோம்.*

# இலங்கையில் சிறுவர் உரிமையும், சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்

பாடசாலையில் சேரும் பிள்ளைகள் முழுமையான கல்வியைப் பெறாது இடையில் பாடசாலையை விட்டு விலகல் இடைவிலகல் எனப்படும். இவ்வாறான இடைவிலகல் ஒரு கல்விப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பிள்ளைகள் தேவையான கல்வியைப் பெறாதிருப்பது நாட்டின் வளத்தை வீணவிரயம் செய்யும் செயலாக இருக்கின்றது. அத்துடன் வாழ்க்கையில் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பம் கிடைக்காமல் விடுவதுடன் இளம் வயதில் கிடைக்கக் கூடிய அனுபவங்களையும் தவற விடுகின்றனர். இடைவிலகும் பிள்ளைகள் சமூகத்தில் காணப்படும் தீய சக்திகளினால் கவரப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன.

இடைவிலகலினால் அரசும், பெற்றோரும் செலவிடும் முதலிற்குரிய சரியான விளைவு கிடைக்காமல் போகின்றது. மேலும் பாடசாலையை விட்டு விலகியோரில் பிள்ளைப்பருவ கல்வியை மீண்டும் புனரமைப்பு செய்தல் எனும் புதிய பிரச்சினையை இடைவிலகல் தோற்றுவிக்கின்றது. பாடசாலையில் இருந்து மாணவர்கள் இடையில் விலகிச் செல்வதற்கான காரணங்களை நோக்க வேண்டியது அவசியமானதும் முக்கியமானதுமான விடயமாகும். 1979 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட மாதிரி ஆய்வொன்றில் மாணவர்கள் விலகுவதற்குரிய காரணங்களாக பின்வருவன அமைந்தன எனக் கூறப்பட்டுள்ளது.

1. பொருளாதாரக் கஷ்டம் காரணமாக தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருத்தல்
2. ஏதாவதொரு தொழிலுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருத்தல்.
3. பெற்றோர்களின் தொழிலுக்கு உதவ வேண்டியிருத்தல்.
4. நோயுற்றிருத்தல் ( உடல், உள ரீதியாக )
5. பிறப்பிலுள்ள குறைபாடு
6. வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையிலான தூரம்
7. பிள்ளைகளுக்கு பாடசாலை மீது வெறுப்பு ஏற்படல்
8. பெற்றோர்களுக்கு பாடசாலை மீது நம்பிக்கை இல்லாதிருத்தல்
9. சில வேளைகளில் பாடங்களிலோ அல்லது ஆசிரியர் மீதோ வெறுப்படைந்து பாடசாலையை விட்டு வெளியேறல்
10. ஒழுக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கை காரணமாக பாடசாலையிலிருந்து வெளியேறல்
11. பாலியல் குற்றவாளியாக இருப்பதினால் பாடசாலையிலிருந்து வெளியேறல்
12. சம வயதுப் பிரிவினரிடையே உள்ள செல்வாக்கு காரணமாக கல்வி மீது வெறுப்படைதல்

மாணவர்கள் கல்வியை தொடர்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். இதனால் சமூகத்திலும் பல்வேறு தாக்கங்கள் ஏற்படுகின்றன. எமது நாட்டு மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றன. பொருளாதாரப் பிரச்சினை, பெற்றோர்களின் கவலையீனம், பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றமை, சாதிப் பாகுபாடு, இளம் வயதில் திருமணம் செய்தல், அதிபர்,ஆசிரியர்களின் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகம், பாடசாலைகளின் இறுக்கமான நிர்வாகம், சூழலின் தாக்கம், வெளிநாட்டு மோகம், சிறு குழந்தைகளைப் பராமரித்தல், பாடசாலைகள் மாணவர்களை ஊக்குவிக்காமை, பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையே தொடர்பு குறைவாகக் காணப்படல், முன்பள்ளிக் கல்வி குறைவாகவும் ஒழுங்கான முறையிலும் இல்லாமை, ஆசிரியர் வளப்பற்றாக்குறை போன்றன காணப்படுகின்றன.

## இடைவிலகலுக்கான பொதுவான சில காரணிகளும் தீர்வுகளும்

### 1. பொருளாதாரப் பிரச்சினை

கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அன்றாட நாளாந்த அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்ய

முடிவதில்லை. அத்துடன் உடலை வருத்தி வேலை செய்யும் தொழிலாளர்கள் உடல் வருத்தத்திற்கு என்ற போர்வையில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியினை மது அருந்துவதற்காக செலவிடுகின்றனர். அத்துடன் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து தங்கள் குழந்தைகளின் எதிர்கால நலனுக்கு பாவிப்பதற்கு நினைப்பதில்லை. மேலும் வேளாண்மைத் தொழில் செய்யும் பருவ காலங்களில் கிடைக்கும் வருமானத்தினை அக்காலத்திலேயே தேவையற்ற செலவுகளைச் செய்து செலவழித்து விடுவர். இந்நிலையில் தமது பிள்ளைகளுக்கு கல்விக்காக செலவிட முடியாமல் இருப்பர். இதனால் மாணவர்களும் தங்களது உணவு, பாடசாலை, உபகரணங்கள் போன்றவற்றை பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டு கல்வியின் மேல் அக்கறை காட்டும் அளவினை குறைத்துபாடசாலையை விட்டு விலகுகின்றனர். இவ்வாறு விலகும் மாணவர்கள் விரும்பத்தகாத கூட்டதித்தினருடன் சேர்ந்து காலத்தை வீணடிப்பதுடன் எதிர்கால வாழ்க்கையை சீரற்ற நிலைக்கு தள்ளி விடுகின்றனர்.

**தீர்வுகள்**

விவசாயிகளுக்கும், மீன்பிடித் தொழிலாளர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி எடுத்துக் கூறி தமது வருமானத்தில் ஒரு பகுதியை நாளாந்தம் அல்லது வாராந்தம் அல்லது மாதாந்தம் என்ற அடிப்படையில் சேமிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதற்கு வங்கி சேமிப்பு, காப்புறுதி திட்டம், ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் மூலம் சேமிக்க நடவடிக்கை எடுத்து வைத்தல் வேண்டும். மேலும் மதுபானம் அருந்துவதனால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறி அதற்காக செலவிடும் பணத்தினை பிள்ளைகளின் கல்விக்காக செலவிட வைத்தல் வேண்டும்.

மேலும் நிரந்தர வருமானத்தினைப் பெற்று பிள்ளைகளின் கல்விச் செலவினை ஈடுசெய்யும் வகையில் பருவகாலங்களில் கிடைக்கின்ற வருமானத்தில் ஒரு பகுதியை வங்கிகளில் சேமிப்பில் இடுவதன் மூலம் அல்லது சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் வட்டி, இலாபம் போன்ற வருமானங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் தங்கள் தேவைகளுடன் பிள்ளைகளின் தேவைகளையும் நிறைவேற்றி இடைவிலகலைக் குறைக்க முடியும். மற்றும் இப்பிரதேசத்தில் இயங்கும் உலக தரிசனம் போன்ற நிறுவனங்களிடமும் பணம் படைத்த நபர்களிடமும் உதவி பெற்று மாணவர்களின் இடைவிலகலைக் குறைக்க பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**2. பெற்றோர்களின் கவலையீனம்**

பெற்றோர்கள் கல்வியறிவின்மை காரணமாகவும், வறுமை காரணமாகவும், தங்கள் பிள்ளைகளின் மீது கவனம் செலுத்துவதில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு சென்று வருகின்ற வேளைகளில் அவர்களின் தேவைகளை மட்டும் கவனித்து வசித்து வருகின்றனர். சாதாரணமாகவே எழுத, வாசிக்கத் தெரிந்தால் மட்டும் போதுமானது என்று ஒரு சில பெற்றோர்கள் நினைத்து விடுகின்றனர். படித்தவர்கள் எல்லோருக்கும் அரசாங்கத் துறைகளில் வேலை கிடைப்பதில்லை. எனவே பிள்ளைகளை ஏன் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என நினைக்கும் பெற்றோர்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றனர். சுமார் 10 வீதமான மாணவர்கள் பெற்றோரின் கவலையீனம் காரணமாகவே இடைவிலகுகின்றனர்.

**தீர்வுகள்**

கல்வியின் முக்கியத்துவம் பற்றி பெற்றோர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் போன்றோர் கல்வியின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூற வேண்டும். கல்வி என்பது ஒரு அழியாச் சொத்து எனவும் இது ஒரு நீண்டகால முதலீடு எனவும் படித்தவர்கள் எல்லோருக்கும் அரச உத்தியோகம் கிடைக்கும் என எதிர்பார்க்கக் கூடாது எனவும் எடுத்துக் கூற வேண்டும். 14 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட வயதினரே கூடுதலாக இடைவிலகுகின்றனர். எனவே இக்கால கட்டத்தில் பெற்றோர்களை கூடிய கவனம் எடுக்க வைக்க வேண்டும்.

**3. பரம்பரைத் தொழிலில் ஆர்வம் காட்டல்**

மீன்பிடித் தொழில், விவசாயம், நகை வேலை போன்ற தொழில்கள் பரம்பரைத் தொழிலாக காணப்படுகின்றன. மாணவர்கள் பாடசாலை செல்வதில் அக்கறை காட்டாமல் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஓந்தாச்சிமடம் பாடசாலையை எடுத்துக் கொண்டால் இடைவிலகுவோரில் 75 வீதமானவர்கள் ஆண்களாகக் காணப்படுகின்றனர். படிப்பதை விட இவற்றை செய்வது நல்லது என மாணவர்கள் இடைவிலகுகின்றனர்.

தொடரும்...

## வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!





உலகத்தில் அமைதியும் ஆன்மிக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.

* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.

* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.



# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**Easwaran Book Depot**
No. 126/1, Colombo Street, Kandy
Tel.: 081-2220820

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**விழுது - மட்டக்களப்பு**
இல 22, கலைமகள் வீதி,
நெச்சிமுனை, மட்டக்களப்பு
தொ.பே.இல - 065 - 2222500

**விழுது - திருகோணமலை**
81யு, ராஜவரோதயம் வீதி,
திருகோணமலை
தொ.பே.இல - 026 2224941

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**அறிவுநதி புத்தகசாலை**
இல 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
தொ.பே.இல.: 077 6737535

**Zeen Baby Care**
121B, Arm Mill Road,
Addalaichenai -01
Tel.: 077 3651138

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**பரணி புத்தகக் கூடம்**
நெல்லியடி ம.ம வீதி, நெல்லியடி
தொ.பே.இல - 077 5991949

**விழுது - புத்தளம்**
இல 24801 கொழும்பு வீதி,
தில்லையடி, புத்தளம்
தொ.பே.இல - 032 - 5740094

**விழுது - யாழ் மாவட்டம்**
இல 23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல - 021 2229866

Printed by
Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo 06
kumbhlk@gmail.com

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under QD/49/News/2015